தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 நவம்பர் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 226, 227, 228 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

கும்முடிப்பூண்டி வட்ட மருத்துவ மனை

** 229* **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி வட்டத் தலைநகரில் 'வட்ட அரசினர் மருத்துவ மனை' (*Taluk Headquarters Hospital*) அமைக்கும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கும்முடிப்பூண்டி வட்டத் தலை நகரில் 'வட்ட அரசினர் மருத்துவ மனை' அமைக்கும் செயற் குறிப்பு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்தத் துணை வட்டம் வட்டமாகி ஓராண்டு ஆகிவிட்டது. நாங்கள் வட்ட மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டியிருக்கும்போது, ஏறக் குறைய 25 மைல் தூரத்திலுள்ள பொன்னேரிக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, பிற்பட்ட சூழ்நிலையில் இருக்கும் இந்த வட்டத்திலுள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும்

பொருட்டு கும்முடிப்பூண்டி வட்டத் தலைநகரில் வட்ட அரசினர் மருத்துவ மனை அமைப்பதற்கு முன்னுரிமை தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 'முன்னுரிமை' என்ற சொல்லைப் பயன்படுத்தியதை வரவேற்கிறேன். இதற்கு முன்பே வட்டத் தலைநகரான இடங்கள் சில இருக்கின்றன. அந்த முன்னுரிமைப்படி எப்பொழுது நிதி கிடைக்கிறதோ அப்பொழுது கவனிக்கப்படும்.

வேடந்தாங்கல் மருத்துவ மனைக்கு மானியம்

* 230 வினா—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் வேடந்தாங்கல் கிராமத்தில் Service International Organisation நடத்தும் மருத்துவ மனைக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 231 வினா—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம், தரங்கம்பாடி பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அப்பேரூராட்சி மன்றத்திலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

1975 நவம்பர் 7]

(இ) தரங்கம்பாடி குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு வேலைகள் முடிந்தன. மதிப்பீட்டுத் தொகையான ரூ. 16.5 இலட்சமும், பராமரிப்பு செலவுத் தொகையான ரூ. 44,000-ம் அரசிடம் கடனாகப் பெற்றால் ஆண்டு ஈவுத்தொகை எவ்வாறு திரும்பச் செலுத்துவது என்பதற்கான பேரூராட்சியின் பதில் கிடைத்தபிறகு மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தம்முடைய பதிலில் கூறியதைப் போல், ரூ. 16.5 இலட்சம் செலுத்தத்தக்க அளவுக்கு அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு வருவாய் இல்லாத காரணத்தால், மானியம் என்ற முறையில் தொகை அளித்து, ஏறத்தாழ 25 ஆண்டுக்காலமாக இருந்துவரும் அந்தக் குறையினைப் போக்குவதற்கு அரசு முன்வருமா? மானியமாக இல்லையென்றாலும், சுலப நீண்ட காலத் தவணைகளில் வசூலித்துக்கொள்ளும் முறையிலாவது அதை உருவாக்கி விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கடனாகவாவது நிதி கிடைக்கிறதா என்று தெரியாத கட்டம் இது. ஏனென்றால், இப்படிப்பட்ட எந்த ஒரு பெரிய திட்டமாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற வேண்டியிருக்கிறது. அக்கழகம் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு அல்லது நான்கில் மூன்று பங்குத் தொகை கடனாகத் தந்தாலும் மீதக் கடனை மாநில அரசு ஏற்கவேண்டும். அப்படி ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் தரும்போது, அதைத் திருப்பிக் கட்டுவதற்கான சக்தி அந்த அமைப்புக்கு இருக்கும்போதுதான் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். திருப்பிக் கட்டும் சக்தி குடிநீர் வழங்கிய பின்னர் சில பேரூராட்சிகளுக்கும், நகர மன்றங்களுக்கும் ஏற்படுகிறது. ஆனால், குடிநீர் வழங்குவதன் மூலமாகக் கடனை 20 ஆண்டுக் காலத்திற்குள் அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகம் குறிப்பிடுகிற காலகட்டத்தில் திருப்பிக் கட்டமுடியும் என்ற நம்பிக்கைக்கு உரிய சூழ்நிலை இருந்தால் அதை நிறைவேற்ற முடியுமே தவிர மானியம் கொடுக்கும் அளவுக்கு மாநில நிதிவசதி தாராளமாக இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அறிந்ததாகும்.

திரு. என். கிட்டப்பா : மேற்கண்ட பகுதியில் குடிநீர் வசதி செய்து கொடுக்க ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக ஆய்வு நடைபெற்று, அந்தப் பேரூராட்சிக்கு ரீ-பேயிங் கபாசிடி இல்லை என்று மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எனவே, அரசு நீண்ட காலமாக இருந்துவருகிற இந்தக் குறையினை தனித் தன்மையுடன் அணுக ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதே விதமான தனித்தன்மையுள்ள இடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கைந்து இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அவைகளுக்கெல்லாம் நிதியை எப்படிப் பெறுவது என்பது—அரசு மானியமாகத் தருவதாக இருந்தாலும், அரசுக்கு அந்த நிதி எந்த இடத்திலிருந்து கிடைக்கச் செய்வது என்பது பெரிய பிரச்னையாகும். ஆனால் தொடர்ந்து ஆலோசிக்கப்படும்.

* 232 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, சிவந்திபுரம் ஊராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வு வேலை செய்வதற்கான தொகை கட்டப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு இவ்வூராட்சிக்கு குடிநீர் திட்டம் அமைப்பதற்கான வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்திற்கான நிர்மாணச் செலவு ரூ. 11.43 இலட்சம் எனவும் ஆண்டுதோறும் பராமரிப்புச் செலவு ரூ. 16,500 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கிட்டச் செலவினங்களை கடனைப் பெற்று நிறைவேற்றவும் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்து நிறைவேற்றவும் தேவைப்படும் தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் 28—4—1975-ல் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

1975 நவம்பர் 7]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது செயல்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கு ஊராட்சி மன்றத்திலே கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான முறைப்படி பதில் கிடைத்த பின்னர், நிதியை ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்க வேண்டும். அதற்குப்பின் வேலை தொடங்கப்படும். இதுகுறித்து மேலும் ஏதேனும் பரிசிலனை தேவைப்படுமானால் செய்துதான் அந்தக் கடமையை மேற்கொள்ளுவார்கள்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, சிவந்திபுரம் பஞ்சாயத்து குடிநீர் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுமாதிரி இன்னும் பல பஞ்சாயத்துக்களில் (இன்வெஸ்டிகேஷன்) ஆய்வு வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பணம் கட்டப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் எல்லாம் தயார் பண்ணும்போது, அதிகமான எஸ்டிமேட் வருவதன் காரணமாக அவர்கள் கடைசியில் அந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் பரிசிலனை செய்து, சிறிய பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் ஆய்வுவேலைக்குரிய செலவை அரசே ஏற்றுக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஓரளவுக்கு பெரிய திட்டமாக இருந்தால்தான் ஆய்வு வேலை மேற்கொள்ளப்படுகிறது. பெரிய திட்டமாக இல்லாமல், அந்த இடத்திலேயே தண்ணீர் கிடைப்பதாயிருந்தால், அத்தகைய சிறிய திட்டங்களைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்காது. மிகச் சிறிய தொகைதான் செலவாகும் என்றால், அதைத் தள்ளுபடி செய்வதோ, அல்லது அதைப் பெற்றுக் கொள்ளாமலேயே அந்தக் கடமையைச் செய்வதைக் கூட—எப்படி வறட்சி நேரத்தில் பணி நடைபெற்றதோ அதுபோல்—செய்யலாம். ஆனால், பல இலட்சம் ரூபாய் முதலீடு செய்யவேண்டிய காரணத்தால் சரியான வரைவுத் திட்டமிடும்போது, அந்த வரைவுத் திட்டச் செலவை

எந்த அளவுக்குக் குறைத்து பேரூராட்சியிடமிருந்தும், ஊராட்சி மன்றத்திடமிருந்தும் வசூலிக்க முடியுமோ அந்த அளவுக்குத் தான் வசூலிக்கிறார்கள்.

விவேகானந்தபுரத்தில் படகுத்துறை

* 233 வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவுக் குழுவினரிடமிருந்து விவேகானந்தபுரத்தில் அவர்களுக்குச் சொந்தமாக ஒரு போட் ஜெட்டி (Boat Jetty) கட்டுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு மனு ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கன்னியா குமரியில் விவேகானந்தபுரத்திற்கு அருகில் ஒரு போட் ஜெட்டி கட்டுவதற்கு விவேகானந்தர் நினைவுக் குழுவினர் முன்வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, விவேகானந்தர் நினைவாலயத்திற்குப் போவதற்கு போட் ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அதில் செல்வதற்கு ஏதாவது கட்டணம் வசூலிக்கப் படுகிறதா ? இந்தமாதிரி போட் வசதிகளை மேலும் அதிகப் படுத்தித் தருவதற்கு ஏற்பாடு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

1975 நவம்பர் 7]

தரங்கம்பாடியிலுள்ள ஆய்வு மாளிகை

* 234 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி கோட்டையிலுள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்களால் கட்டப்பட்ட கோட்டை இருக்கிறது. அது கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னுல் செப்பனிடப்பட்டு சிறப்பாக இருக்கிறது. நான்கைந்து ஆண்டு களுக்கு முன்னுல் அது செப்பனிடப்பட்டது. அதை மேலும் விரிவுபடுத்த, அதில் மேலும் கவனம் செலுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் அங்கே சென்றபோது அது பழுதுபார்க்கப் பட்டது. பழுதுபார்க்கப்பட்டு நான்கைந்து ஆண்டுகள் ஆகி விட்டதால், மேற்கொண்டு ரூ. 13,500 செலவில், சுவர்களுக்கு வர்ணம் பூசுவது, செப்பனிடுவது போன்ற வேலைகளை மேற்கொள் வதற்கு சம்பந்தப்பட்ட பொறியாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிருர்கள்.

Assistance for artisans.

* 235 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Handicrafts Development Corporation has proposed to give incentive bonus to artisans; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தமிழ்நாடு கைவினைப்பொருள் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்கள் குழு 9—5—1974 அன்று நடந்த கூட்டத்தொடரில்,

கைவினை கலைஞர்களுக்கு ஊக்கமிகை ஊதியம் கொடுக்கும் திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தைப் பற்றிய விபரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

* 236 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Handicrafts Development Corporation proposes to advance loans up to Rs. 5,000 to small artisans under tie-up arrangements with commercial banks; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கான செயற் குறிப்பு ஒன்றும் கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்திடம் இல்லை. எனினும் அக்கழகம் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடத்தில் இதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தின. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அகில இந்திய கைவினைப் பொருள் கழகம், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தற்பொழுது இத்திட்டத்தைச் செயல்முறைப் படுத்த ஒத்துக்கொண்டுள்ளது. தரமுறு வட்டி விகிதத் திட்டத்தின் அடிப்படையில் இந்தக் குறைந்த வட்டிக் கடனுதவி வழங்கப்படும். இந்தக் கடனுதவி அந்தந்த மாவட்டத்திலுள்ள நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் மூலமாக வழங்கப் படும். அதிகப்படியான கடனுதவி ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) ஆகும். வட்டி விகிதம் 4 (நான்கு) விழுக்காடு ஆகும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, குடிசைத் தொழில்கள் கைவினைப் பொருள்கள் என்ற இனத்தின் கீழ் வருவதாகக் கருதப்படுகிறதா ? தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இத் தொழில்களை ஆர்வத்தோடு செய்ய முன் வருகிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியில், மதுராந்தகத்திலும் அச்சரப்பாக்கத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இத்தொழில்களைச் செய்கிறார்கள். அவர்களுக்கு—அவர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு தனிச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே பதிலில் கூறியபடி டிபரன்சியல் ரேட் ஆப் இன்டரஸ்டில் கடன் வழங்குகிறார்கள். 4 சதவிகிதம்தான் வட்டி. இதைப் பெறு வதற்கு எந்த கைவினைஞர்களும் முன்வரலாம். சில விதிகள் இருக்கின்றன. இவ்வளவு வருமானம் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் இக்கடனைப் பெற்று இத்தொழில்களைச் செய்வதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. கைவினைக் கலைஞர்களுக்கு வசதிகளைச் செய்து தர தொழில் துறை இலாக்காவினரும் முன்வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இத்தகைய தொழில்களைச் செய்பவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புத் தர வேண்டி இருக்கிறது. குறிப்பாக, மதுரை போன்ற இடங்களில் கூடை, முறம் முடைதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக் கிறார்கள். அத்தொழில்களை எல்லாம் கூட இந்த கைவினைத் தொழில்கள் என்பதன் கீழ் கொண்டு வந்து அவர்களுக்கு உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர்களுக்கும் கடன் உதவி செய்ய திட்டம் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் இத்திட்டத்தை அமுலாக்கலாம். ரூ. 5,000 வரை கடன் கொடுக் கிறார்கள். விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் பிரிக்கப் பட்டு கடன் வழங்குகிறார்கள். இதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று தொழில் துறை அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். இவர் கள் வங்கிகளுடன் தொடர்பு கொண்டு கடன் உதவி செய்ய ஏற் பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, கைவினைத் தொழிலில் கைத்தறியும் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கைவினை வேறு—கைத்தறி வேறு.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் எம்பிராய்டரி ஒரு முக்கியமான

கைவினைத் தொழில். பல பெண்களும் விதவைகளும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். வங்கிகள் இவர்களுக்குக் கடன் தருவதென்றால் செக்யூரிடி கேட்கிறார்கள். அவர்கள் செக்யூரிடி தர முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு செக்யூரிடி இல்லாமல் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் செக்யூரிடி கேட்கக் கூடாது என்பதுதான் கொள்கை. எனினும் சில இடங்களில் செக்யூரிடி கேட்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

Eligibility.—The family income from all sources for an intending borrower should not exceed Rs. 2,000 per annum in rural areas and Rs. 3,000 per annum in urban areas.

He should not own any land or the size of his holdings should not exceed one acre in the case of irrigated land and 2.5 acres in of non-irrigated land.

இது செக்யூரிடி ஓரியண்டட் அல்ல—ஜாப் ஓரியண்டட் என்பது தான் கொள்கை. ஆனால் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் பிராஞ்ச் மேனேஜர்கள் மேலே இருக்கிற அமைப்புகளுக்குப் பயப்படுகிறார்கள்.

எனவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் வங்கி அதிகாரிகளும் நமது இலாக்கா அதிகாரிகளும் இதில் இணைந்து செயல்பட வேண்டும். இதற்காக சென்னையிலுள்ள நேஷனலைஸ்ட் வங்கி அதிகாரிகளுடன் நமது இலாக்கா அதிகாரிகள் கலந்து பேசினார்கள். பிராஞ்சு மானேஜர்களுடன் ஒரு தொடர்பு—கோவார்டினேஷன் ஏற்படுத்திக் கொண்டு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, சில இடங்களுக்குச் சென்று பார்த்து, கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். வட்டி மிகவும் குறைவு தான்—4 சதவிகிதம் தான். அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை இங்கே சொன்னால் மட்டும் போதாது. அந்தந்த ஊர்களுக்குச் செல்லும்போது விண்ணப்பங்களை வாங்கி சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குக் கடனைப் பெற்றுத் தர வேண்டும்.

1975 நவம்பர் 7]

திரு. த. சோனையா : தலைவரவர்களே, கைவினைத் தொழில்—கடன் பெறுவதற்கு உரிய தொழில்கள் என்னென்ன என்று அறிவிக்க முடியுமா? கையால் மண் எடுத்து கைவினைப் பொருட்களைச் செய்கின்ற குயவர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் வசதி பெறுவதற்கு அருகதை உடையவர்களா? ஆம் என்றால் அவர்களையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா? வங்கிகள் மூலம் கடன் பெற அங்கத்தினர்கள் அதிகாரிகளை அணுக வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. த. சோனையா: அமைச்சர் அவர்கள் அதை விளக்கு வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குயவர்கள் இத் திட்டத்தின்கீழ் கடன் பெற வாய்ப்பு உண்டு. நமது சட்டமன்ற உறுப்பினர்கள் நம் அதிகாரிகளை அணுகி இதைப் பற்றி எடுத்துச் சொல்லி, சிக்கல் இருக்குமானால், மாநில அளவில் உள்ள அதிகாரிகளை அணுகி கடன்களைப் பெற்றுத்தர முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சிக்கல்கள் இருக்கலாம். எதிலும் சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். அச்சிக்கல்களைத் தீர்ப்பது தான் நம்முடைய பொறுப்பும் கடமையும் ஆகும்.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல, அதுவும் குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கி களில் இருந்து நிதி உதவி பெற முடிகிறது. நாட்டுடைமை ஆக்கப் பட்ட வங்கிகள் ஜாமீன் இல்லாது கடன் தொகை வழங்கத் தயாராக இல்லை. ஆகையால் பாய் முடைதல், கூடை பின்னுதல் போன்ற கைவினைத் தொழிலாளர்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் உதவி பெற முடிவதில்லை. அதனால் அவர்கள் நிதிப் பற்றாக்குறையினால் கஷ்டப்படுகிறார்கள். அவர் களுக்கு இந்த வங்கிகள் கடன் உதவி செய்தால் அவர்கள் தங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ள முடியும், பஞ்சத்தைப் போக்கிக்

கொள்ள முடியும். இப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு நம்முடைய அரசு ஏதாவது செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே மத்திய சர்க்கார் போட்டுள்ள உத்திரவுப்படி ஜாமீன் வாங்கிக் கொண்டு தான் தொகை கொடுக்க வேண்டுமென்று கிடையாது. ஜாமீன் கேட்காமலே தொகை கொடுக்க வேண்டுமென்ற கொள்கையைத் தான் வகுத்திருக்கிருர்கள்.

அது மாத்திரமல்ல. இப்படிப்பட்ட கைவினைக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், கிராமப்புறத்தில் உள்ள தொழிலாளர்களை ஊக்கப்படுத்தவும் இவர்களுக்கும் கடன் உதவி செய்யலாம் என்று உத்திரவு போட்டிருக்கிருர்கள். எனவே, இருக்கின்ற நிலைமைகளைப் பரிசீலனை செய்து இவர்களுக்கும் கடன் கிடைப்பதற்கு வழி செய்யப்படும். இதில் உள்ள சட்டச் சிக்கல்களை நீக்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, இன்றைக்கு இந்தக் கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அரசே வாங்கி அதை விற்பதற்கு ஏற்பாடு செய்யுமா? தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களை ஒன்று சேர்த்து அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அரசு மூலம் விற்பதற்கு அரசு வகை செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்தக் கைவினைத் தொழிலாளர்கள் உற்பத்திப் பொருட்களை செய்வதற்கு "ஹேண்டிகிராப்ட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன்" உதவி செய்து கொண்டிருக்கிறது. இப்படி உதவி செய்வதுடன் அவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கு 5 தேச உடமை ஆக்கப்பட்ட வங்கிகள் மூலம் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை "ஹேண்டிகிராப்ட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனே" வாங்கிக் கொள்கின்றது. அதனால் அவர்களுக்கு கஷ்டங்கள் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 7]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறியது போல நாங்கள் பலமுறை முயற்சித்தோம். பாங்கு அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் என்றால் மத்திய அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கலாம் என்று மட்டும்தான் உத்திரவு போட்டிருக்கிறார்களே தவிர, செக்யூரிடி வாங்காமல் கடன் கொடுத்தால் அந்த "ரெஸ்பான்சிபிலிடி" கொடுக்கின்ற அதிகாரிகளைத்தான் சேருகிறது; நாங்கள் அந்த "ரெஸ்பான்சிபிலிடி"-யை ஏற்பதற்குத் தயாராக இல்லை என்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத்தைத் திருத்த மத்திய அரசாங்கத்தைக் கேட்பதற்கு ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது ஒரு பெரிய பிரச்னை. நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகள் சில கைவினைஞர்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறார்கள். நம்முடைய ஸ்டேட் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் இந்த வங்கி அதிகாரிகளோடு கலந்து பேசி இந்தக் கைவினைக் கலைஞர்களுக்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இதில் ஏதாவது சிக்கல் இருக்குமானால் மத்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி அவற்றை நீக்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஸ்டேட் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் இப்படிப்பட்டவர்கள் கடன் உதவி பெறுவதற்கு உதவி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு வட்டாரத்திற்கு, 2 வட்டாரங்களுக்குச் சேர்த்து "இ.ஓ.(ஐ)" எனும் தொழில் விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். ஒவ்வொரு "இ.ஓ.(ஐ)"-ம் குறைந்தது 10, 15 மனுக்களையாவது ஒவ்வொரு மாதமும் ஊக்குவித்து வேண்டியதைச் செய்யத்தக்க வகையில் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்திரவுகளை அரசாங்கம் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்கு கடன் கிடைப்பதற்கு மாதாமாதம் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாதாமாதம் கண்காணிப்பது என்பது பெரிய வேலையாகப் போய்விடும். இதற்கென்று தனிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. நம்முடைய அதிகாரிகளுக்கு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறோம். இண்டஸ்டிரீஸ் இலாகா, ரெவின்யூ இலாகா, பஞ்சாயத்து இலாகா ஆகிய மூன்றும் சேர்ந்து அந்த அதிகாரி இடத்தில் ஒரு ஏற்பாடு செய்து கொண்டு, அந்த அதிகாரிகள் குறிப்பிட்ட பகுதியைப் பார்வையிட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, அந்த அந்தப் பகுதிகளில் இருக்கிற அதிகாரிகள் கண்காணிக்கலாம். கண்காணித்து இப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைக்க வகை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Yarns for fishing nets.

* 237 Q.—THIRU N. K. PALANISAMY: Will the **Hon. the** Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that depots have been opened in **Tamil Nadu by the Fisheries Department for the supply of yarn** to Fishermen for fishing nets; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இந்த நைலான் நூல் எங்கே இருந்து வாங்கப்படுகிறது? விலைக்கு வாங்கி சப்ளை செய்யப்படுகிறதா? இன்னும் அதிகப்படியாக வரவழைப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, இந்த நூல் தயார் செய்யப்படுகிற இடம் பம்பாயை அடுத்துள்ள பகுதி. அங்கே உள்ள 'மெசர்ஸ் கார்லான் நைலான்'

1975 நவம்பர் 7]

என்ற நிறுவனம் இந்த நைலான் நூலைத் தயார் செய்கிறது. நம்முடைய தேவை அதிகமாக இருக்கிறது. நமக்கு வேண்டிய அளவிற்கு நைலான் நூல் கிடைக்கவில்லை. அவர்களிடத்திலே இருந்து இன்னும் அதிகமான அளவிற்கு இதைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்கு வேண்டிய அளவிற்கு சப்ளை செய்ய முடியாததற்குக் காரணம் நூல் பற்றாக் குறை. எனவே வருகின்ற காலங்களில் இந்த நூல் பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்கும், புதிய வகை நைலான் நூலைக் கண்டுபிடிப்பதற்கும் மீனவள மேம்பாட்டுக் கழகம் வழிவகைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது நைலான் நூல் கிடைக்கவில்லை, பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படிப் பற்றாக்குறை இருக்கின்றபோது கிடைக்கின்ற நைலான் நூல் உண்மையிலேயே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மீனவர்களுக்கு ஒழுங்காகக் கிடைப் பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அட்டைகள் கொடுத்திருக் கிறார்கள். அதேபோல மீனவர்களுக்கும் நைலான் நூல் கிடைப் பதற்கு அட்டை கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதற்கு அட்டை கொடுத்து இருக்கிறார்கள். அதைப் போன்று நைலான் நூல் வாங்கிக் கொள்வதற்கு உதவியாக அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. இதில் சில குறை பாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றைப் போக்க இந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இந்த நூலைக் கொள்முதல் செய்து மீனவர்களுக்கு வழங்கலாமா என்பது யோசனை அளவில் இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 நவம்பர் 7

பார்வையற்றோர்களுக்கான ஆசிரியர்கள்

***238 வினு—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் பார்வையற்றோருக்குப் போதிக்கும் ஆசிரியர் பயிற்சி பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. வி எம். அண்ணுமலை: இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது இல்லை என்று சொன்ஞர்கள். சென்னையில் ஜெமினிக்கு அருகில் பார்வையற்றோர், குருடர்கள் பள்ளியொன்று தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது, அதற்கு அரசின் மூலம் ஏதாவது ஆதரவு உண்டா? இல்லையென்ருல் அரசே அதை ஏற்று விரிவுபடுத்துகின்ற செயல் முறையில் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: பேரவைத் தலைவரவர்களே, குருடர்கள் பள்ளி ஜெமினிக்கு அருகில் ஒன்று இருக்கிறது என்று தெரியும் . . .

[திரு. வை. பாலசுந்தரம் எழுந்திருந்தார்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: மாண்புமிகு உறுப்பினர் இது தொடர்பாக விண்ணப்பித்துக் கொண்டால் இதுபற்றி ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

1975 நவம்பர் 7]

சொத்துகள் மீதான வரி

* 239 வினா—திரு. கி. செயராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரமன்றங்களின் சொத்து வரி விதிப்பு முறையை (Property tax)) திருத்தி அமைக்க செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. கி. ஜெயராமன்: தலைவரவர்களே, கட்டிடங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் அல்லது வருட வாடகையின் அடிப்படையில் நகராட்சிச் சட்டத்தின்கீழ் இந்த வரி, "பிராபர்டி டாக்ஸ்" விதிக்கப்படுகிறது. 1920 ஆம் ஆண்டில் சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. கட்டிட மதிப்பிற்கோ, ஆண்டு வருமானத்திற்கோ சம்பந்தமில்லாத முறையில் வரி விதிப்பதற்கு சான்ஸ் இருக்கின்றது. இந்த வரி விதிப்பு முறை சரியானதாக இல்லாமல் இருக்கலாம். எனவே பரந்த அளவிலே, தேவையை அனுசரித்து, இன்றைய சூழ்நிலைமைகளை அனுசரித்து இந்த வரி விதிப்பு முறையை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இன்றைய நகராட்சி சட்டப்படி கட்டிடங்கள் வாடகையின் அடிப்படையில் வரி விதிக்கப்படுகின்றது. இதனை எந்த விதத்திலே மாற்றி அமைக்கலாம் என்பதைப் பற்றித் தெளிவான, திட்டவட்டமான முடிவுகள் எதுவும் எடுக்க முடியவில்லை.

திரு. செ. அரங்கநாயகம்: நகர்ப்புறங்களில் இன்றைக்கு இருக்கின்ற வரிச்சுமையின் காரணமாக வீடு கட்டிக் கொண்டு வீட்டுச் சொந்தக்காரர்களாக இருப்பதை விட வாடகை வீட்டிலேயே இருப்பது லாபகரமாக இருப்பதான ஒரு எண்ணம் பரவலாக இருக்கிறது. இன்றைக்கு போடப்படுகிற சொத்து வரி அந்த முறை, ஆர்ப்பிட்ரரியாகப் போடப்படுகிறது, இன்று இரண்டாண்டுகளுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பின் மூலம் கூறியிருக்கிறார்கள். பிராபர்டி டாக்ஸ் போடப்படுகிற

முறைக்கு ஒரு கொள்கை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. "பேர் ரென்ட் ஆக்ட்"-ன் கைடு லைனைப் பின்பற்றி பிராபர்டி டாக்ஸ் போடுவது தான் நியாயமாக இருக்கும். இப்படிச் செய்தால் அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்கு டாக்ஸ் விதிக்கிற நிலைமை இருக்காது. எனவே, இந்த அடிப்படையில் வரி விதிக்க அரசு பரிசிலனை செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த வரி போடுவதை உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல, சுப்ரீம் கோர்ட்டிலே ரீசனபிள் ரென்ட் என்கிற பேச்சில் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முனிசிபல் சட்டத்தின் கீழ் "கிராஸ் ஆன்னுவல் ரென்ட்" என்கின்ற வகையிலே—ஆண்டு மொத்த வாடகை என்கின்ற அடிப்படையிலே வரி விதிக்கின்ற முறையிலே, இன்றைக்கு அமைந்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் வரி விதிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களில் சொத்து வரி விதிக்கின்ற அதிகாரம் நிர்வாக அதிகாரிகளுக்கே இருக்கின்றன. அவர்கள் நினைத்ததைச் செய்ய முடியும். சிலபேருக்கு குறைந்த அளவில் விதிக்க முடியும், பிரதிப் பிரயோஜனம் கருதி என்கின்ற நிலைமை எல்லாம் இருக்கின்றன. அதில் நடக்கிற தில்லுமுல்லுகளை நீக்கி நியாயமான அடிப்படையில் வரி விதிக்க ஒரு திட்டத்தை அரசு கொண்டுவருமா? அப்படிக் கொண்டுவராதுபோனால் மிகுந்த ஏற்றத்தாழ்வு தான் நிலவும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உள்ளாட்சி, நகராட்சி மன்றங்களில் இதுபோன்ற குறைபாடுகள் இருந்தால் மக்களின் பிரதிநிதிகள் தான் தீர்க்க வேண்டும். இல்லையென்றால் மக்கள் அதற்குத் தண்டனை தேர்தலில் தருவதுதான்.

1975 நவம்பர் 7]

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆட்சேபகரமான முறையிலோ அல்லது தவறான முறையிலோ வரி விதிக்கப்பட்டால், அப்பீல் செய்து கொள்வதற்கு ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலும் அப்பீல் கமிட்டி என்று இருக்கிறது. அங்காவது நியாயம் கிடைக்கின்ற அளவுக்கு அப்பீல் கமிட்டியின் சட்டதிட்டங்களைத் திருத்தி அமைத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்பீல் கமிட்டிகள் இருக்கின்றன. அங்கே நியாயம் கிடைக்கவில்லையென்றால் வேறு வழியில்லை. இருந்தாலும் அப்பீல் கமிட்டியிலே சில மாற்றங்களைச் செய்யலாம் என்றுதான் அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. கே. எ. வகாப்: தவறான முறையில் வரி விதிக்கப்பட்டால் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்தலிலே பொதுமக்களால் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வரி விதிக்கின்ற அதிகாரத்தை நகராட்சி, உள்ளாட்சி மன்ற நிர்வாக அதிகாரிகளுக்கே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் போட்ட வரியைக் கூட உறுப்பினர்கள் 10 சதவிகிதத்துக்குக் குறைவாகக் குறைக்க முடியாது என்று இருக்கிறது. இப்படியின்றி இந்த வரிவிதிக்கிற அதிகாரத்தையே நகராட்சி, உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளிடமே கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும் என்பதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதிகாரத்தைக் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் உள்ள இலவச வாசகசாலை, பள்ளிக்கூடம் போன்ற பொதுக்கட்டிடங்களுக்கு நகராட்சி வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையானால் அரசு அதைப் பற்றி ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விதிவிலக்கு அளிக்கப் பட்டு வருகின்றது. அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிற கட்டிடங்களின் பட்டியலை நகராட்சி மன்றம் வைத்துக் கொண்டிருக்கிறது.

[1975 நவம்பர் 7

திரு. சொ. காவேரிமணியம்: இம்மாதிரி பாதிக்கப்பட்டவர்கள் அப்பீல் கமிட்டிக்கு மனுக்கொடுக்கிற நேரத்தில் சேர்மென், அல்லது மற்ற உறுப்பினர்கள் தலையிடுவதற்கு-பவர்ஸ் ஆர் ரெஸ்ட்ரிக்டட்-அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன. இதை மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர்கள் நகராட்சி மன்றங்கள் எல்லாம் நல்லமுறையில் நடைபெற வேண்டுமென்றே விரும்புவார்கள். நகராட்சி மன்றம் செம்மையாக நடைபெறுவதற்கு வேண்டிய வருமானம் பெரும்பகுதி சொத்து வரியைப் பொறுத்தே இருக்கிறது. சொத்துவரியைக் குறைப்போமானல் நகராட்சிகளின் நிர்வாகம் பாதிக்கப்படும். ஆகவே, அவர் தெரிவித்த யோசனே ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

திரு. த. சோனேயா: நகராட்சி, ஊராட்சி மன்றங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வரிவிதிப்பில் மாற்றம் செய்து வருகிருர்கள். அப்படி மாற்றம் செய்கிறபோதுதான் பலவிதமான கோளாறுகள் ஏற்படுகின்றன. இப்படி அவரவர்கள் தம் தம் இஷ்டத்திற்கு மாற்றம் செய்யாதிருக்க ஐந்தாண்டுக்கு ஒரு முறை முன்பு இருந்த வரியில் ரூபாய்க்கு இத்தனே பைசாதான் உயர்த்தலாம் என்று நிர்ணயிக்க அரசாங்கமே முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரூராட்சி, நகராட்சி மன்றங்கள் வளர்கின்ற தன்மையைப் பொறுத்து, வளர்ச்சியின் அடிப்படையில் தான் இந்த வரியை நிர்ணயம் செய்கிருர்கள். இந்த வளர்ச்சி விகிதம் எல்லா நகரங்களிலும் ஒன்ருக இருப்பது இல்லே. ஆகவே, அரசாங்கம் இதுபற்றி முடிவு செய்ய முடியாது. ஆங்காங்குள்ள அதிகாரிகள் நியாயமான முறையில் தான் விதிப்பார்கள் என்று நம்பிக்கையை வைத்துத்தான் ஆகவேண்டும்.

1975 நவம்பர் 7]

ஆத்தூர் முல்லைவாடி சாலையில் பாலம்.

* 240 வினா—திரு. வி. பழனிவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தலைவாசல், ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம் இரண்டின் எல்லைக்கோட்டில் உள்ள ஆத்தூர்-முல்லைவாடி வழி காட்டுக்கோட்டை பாதையில் கட்டாறு என்னுமிடத்தில் பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. வி. பழனிவேலு: ஆத்தூர் ஒன்றியம், தலைவாசல் ஒன்றியம் ஆகிய இரண்டின் எல்லைக்கோட்டில் காட்டுக்கோட்டைப் பாதையில் கட்டாறு என்னுமிடத்தில் காட்டாற்றில் தண்ணீர் வருகின்ற நேரத்தில் இருபது முப்பது கிராமங்கள் பாதிக்கப் **படுகின்ற சூழ்நிலை இருப்பதால், இதை அரசு பரிசீலனை செய்து** அங்கே பாலம் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தக் கட்டாறு என்கிற காட்டாற்றுக்குப் பாலம் கட்ட ஒரு லட்சம் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வருங்காலத் திட்டங்களில் இதைச் சேர்க்கலாமா என்பது பற்றி யோசிக்கப்படும்.

திருப்புவனம் ஒன்றியப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்.

* 241 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : திருப்புவனம் ஒன்றியத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அங்கே வீடு கிடைக்காது, மதுரையில் குடியிருந்துகொண்டு வருவதால் அலுவலகத்திற்குச் சரியான

நேரத்தில் வர முடியாது இருக்கிறது. ஆகவே இனிமேலாகிலும் திருப்புவனம் ஒன்றியத்தில் வேலைசெய்யும் அலுவலர்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அலுவலர்கள் சரியான நேரத்தில் அலுவலகத்திற்கு வரவில்லை யென்றால் மிசா சட்டம் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் வீடு கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

அறநிலைய நிதி.

*242 **வினா—திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் அறநிலைய நிதியின் கீழ் எவ்வளவு தொகை சேர்ந்துள்ளது?

(இ) இந்த நிதி எந்த முறையில் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) 1973-74-ம் ஆண்டில் அறநிலைய நிதியின் கீழ் ரூ. 76,91,456.63 சேர்ந்துள்ளது. 1974-75-ம் ஆண்டின் நிதிக் கணக்குகள் சென்னை கணக்காய்வுத் தலைவரால் இன்னும் முடிவாக்கப்பட வில்லை.

(இ) இந்து சமய அறநிலைய நிதி அத்துறையைச் சார்ந்த அலுவலர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளுக்காகவும், செயல் அலுவலர்கள், தணிக்கைத் துறை அலுவலர்கள் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்காகவும் செலவு செய்யப்படுகின்றன.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: எண்டோமெண்டு கமிஷனரிடம் ஒரு தனி நிதி இருக்கிறது. ஒவ்வொரு கோவிலும் அதற்கு என்று ஒரு தொகையை அனுப்பி வைக்க கோரப்பட்டிருக்கிறது. அந்த நிதியை அவர் இன்ன இன்னமுறையில்தான் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு வரைமுறைகள் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இது அறநிலைய நிர்வாக நிதியைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் ஆணையர் வைத்திருக்கிற பொதுநல நிதியைப்பற்றிக்

1975 நவம்பர் 7]

கேட்கிறார் என்று கருதுகிறேன். அவர் அந்த நிதியை இன்ன இன்ன வகைகளில்தான் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன.

கடலங்குடிப் பகுதியில் திருமண மண்டபம்.

*243 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் கடலங்குடி பஞ்சாயத்துப் பகுதியில் அறநிலையத் துறையால் திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆலயத்தின் நிதி நிலைமையைக் கருதியும், தற்போதுள்ள பொருள்களின் விலையேற்றத்தை மனதில் கொண்டும் ஆலய அறங்காவலர்களின் விருப்பப்படி ரூ. 30,000-க்கு திருமண மண்டபம் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீடு ஒன்று தயாரிக்க கோரப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து வேலையைத் தொடங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தத் திருமண மண்டபத்தை விரைவில் கட்ட, அந்தத் திருக்கோவில் அறங்காவலர்கள் கோரியிருக்கிற அனுமதியை அரசு விரைவில் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: என்ன அனுமதி கோரியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்படுகிற திருமண மண்டபத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இது கோவில் நிதியில் இருந்து கட்டப்படுகிற திருமண மண்டபம்.

திரு. கே. எ. வகாப்: பொதுவாக திருமண மண்டபங்கள் கட்டப்படுவதற்கு எந்த அடிப்படையில் அறநிலையம் உதவி செய்கிறது? கோவில்கள் எவ்வளவு பணம் தரவேண்டும்? பொது

மக்களிடம் இருந்து எவ்வளவு நிதி வசூலிக்கப்பட வேண்டும்? இதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றனவா? ராணிப் பேட்டையில் கூட திருமண மண்டபம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நிதி உதவி தருவதாகச் சொன்னார்கள்? அது எந்த அடிப்படையில் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அடிப்படை எவ்வளவு பர்சென்ட் என்பது ஒன்றும் கிடையாது. அந்தந்தக் கோவில் களின் நிதியைப் பொறுத்தும், அவர்கள் பொதுமக்களிடம் இருந்து வசூலித்துள்ள நன்கொடையைப் பொறுத்தும், அந்தக் கட்டிடத்தின் எஸ்டிமேட்டைப் பொறுத்தும், இதர கோவில்களின் உபரி நிதியில் இருந்து இதற்கு உதவி செய்யப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா: இந்தத் திருமண மண்டபத்தைக் கட்டிமுடிக்க இந்தத் திருக்கோவிலுக்குச் சொந்தமான 32 சென்ட் நிலத்தை, அங்கே பள்ளிவாசல் கட்ட விற்பனை செய்து, அந்த நிதியைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டு மென்று அறங்காவலர்கள் கோரியிருக்கிறார்கள். அவர்களது கோரிக்கைக்கு அரசு விரைவில் அனுமதி தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தப் பிரச்னை ஆணையாளருடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இப்பொழுது கோயிலை ஒட்டி திருமண மண்டபங்களை அதிகமாகக் கட்டுகிறார்கள். திருச்செந்தூரில் கூடத் தனியார் கட்டுகிறார்கள். அந்த மாதிரி கோயில் பக்கத்திலே திருமண மண்டபம் கட்ட இடம் கொடுக்க கோயில் நிர்வாகஸ்தர்கள் வசதி செய்து கொடுப்பார்களா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, திருமண மண்டபத்தைக் கட்டி, கோயிலினுடைய பொறுப்பிலேயே விட்டு விடுவதானால் கொடுக்க ஆட்சேபணை இல்லை.

1975 நவம்பர் 7]

சூணம்பேடு மலைசாதி மக்களுக்கு வீடுகள்.

** 244 வினா—**திரு. வை. பாலசுந்தரம்**: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

அச்சிறுபாக்கம் தொகுதியில் சூணம்பேட்டில் உள்ள மலைசாதி வகுப்பைச் சார்ந்த வில்லிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, எனது அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சூணம்பேட்டில் அரிசன நல இலாகாவின் மூலம் மலைவாசியினருக்கு வீடு கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், தற்பொழுது அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டப்படுகிற வீட்டுக்கும் ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிற வீட்டுக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிற காரணத்தினால் மீண்டும் அதைத் திருத்தி, அரிசன மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அந்த வீடுகளைக் கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: பேரவைத் தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு, ரூ. 1,600 மதிப்பீட்டில், ரூ. 1,200 இனமாகவும், ரூ. 400 கடனாகவும் கொடுத்து வீடு கட்டுகிற ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில், அவர்களிடம் ஒப்புவிக்கிற நிலைமை வந்து விட்டது. இனிமேல், அந்த வீடுகளை என்ன செய்வது? திருத்தி அமைக்க முடியாது. பாக்கி இருக்கிறவர்களுக்கு வேண்டுமென்றால் புதிய திட்டத்தின்கீழ் அரிசன நல இலாகாவால் கட்டப்படுகிற திட்டத்தின்படி வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, அந்த வீடு இன்னும் முடிவு பெறாமல் இருக்கிற காரணத்தினால்தான், அதைத் திருத்தி அமைத்துக் கொடுக்க இயலுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அதுதான் முடியாது. காரணம் தாம் கட்டிக் கொடுக்கிற வீடுகள் இன்றிருக்கிற நிலையில் ரூ. 4,000, ரூ. 4,200 என்ற அளவுக்கு

வருகிறது. ஏற்கனவே பழைய திட்டத்தின்கீழ் ரூ. 1,200 இனமாகவும், ரூ. 400 கடனாகவும் கொடுக்கப்பட்டு, ரூ. 1,600 மதிப்பீட்டில் வீடு கட்டப்படுகிறது. அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அந்த வீட்டை அப்படியே திருத்தி அமைக்க வேண்டுமானால் ரூ. 4,000-ம் சேர்ந்து ரூ. 5,600 ஆகிவிடும். அநேகமாகச் சட்டச் சிக்கல் வரும். அது முடியாது.

ஜெயபுரத்தில் அரிசனக் குடியிருப்பு.

* 245 வினா—திரு. டி. சி. திம்மராய கவுண்டர்: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜெயபுரம் கிராமத்தில் அரிசன காலனி அமைக்க அரசு ஆர்ஜிதம் செய்துள்ள நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்துள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில்; அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

அம்பேத்கார் கலைக்கல்லூரி, சென்னை

* 226 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76-ம் கல்வி ஆண்டில் சென்னை டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம், வரலாறு, பி.எஸ்ஸி. கணிதம், இயல்பியல் போன்ற பாடங்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அடுத்த கல்வி ஆண்டி லாவது பி.எ, பி.எஸ்.ஸி, பி.காம் வகுப்புகளைத் துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1975-76-வது ஆண்டு பட்டப் படிப்பு துவங்குவதற்காக நம்முடைய நிதிநிலைத் திட்டத்தில் ரூ. 3,22,000 ஒதுக்கப்பட்டது. அந்த

1975 நவம்பர் 7]

வகையிலே 6 பட்டப் படிப்புகளுக்கு இடம் தரவேண்டுமென்று ஏற்கனவே வழக்கமாக இருக்கிற பட்டப் படிப்புக்கு இடம் தராமல், வேலை வாய்ப்புக்கு வழி அளிக்கிற வகையில் கல்லூரி களுடைய இட வசதி, தேவைகள், மற்றவைகளை ஆராய்ந்து 6 கல்லூரிகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது. அந்த வகையில் டூரிஸம், கார்ப்பரேட் செக்கரட்டரி ஷிப், நூட்ரிஷன், டையட்டிக்ஸ், புக் இண்டஸ்ட்ரி, பப்ளிக் ரிலேஷன்ஸ் அண்ட் டூரிஸம் என்பவை 6 கல்லூரிகளில் மட்டும் இந்த ஆண்டு வைக்கப்பட்டது. மற்ற கல்லூரிகளுடைய இட வசதி, அவற்றினுடைய தேவைகள், மற்ற வற்றை கவனித்துத்தான் அவ்வப்போது துவங்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது சமீபத்திலே 10—2—3 என்று இந்தப் படிப்பை முடிக்கப் போவதாக, ஆராய்ச்சி செய்ததாகத் தகவல் வந்தது. அது நிச்சயமாகக் கொண்டு வரப் படும் என்று சொன்னல் கல்லூரிகளிலேயே அப்படிப்பட்ட படிப்புக்கான இடங்களை மட்டும் ஒதுக்குவதற்கு அரசு ஏதாவது செய்யுமா? அம்மாதிரி பட்டப் படிப்பு இல்லாத இப்பொழுது குறிப்பிடப்பட்ட கல்லூரி போன்ற கல்லூரிகளுக்கு முன்னிடம் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குழுவினர் கூறிய யோசனைகளிலே அதுவும் ஒன்ருக இருக்கிறது. கல்லூரிகளிலே இருக்கிற புகுமுக வகுப்பை எடுத்து, அதைத் தனியாக போர்டின் கீழே, ஹையர் செகண்டரி ஸ்கூலில் இரண்டை வைத்துவிட்டு, கல்லூரிகளிலே முழுவதும் பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு ஆக்கவேண்டு மென்ற எண்ணத்தை அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள். இடைக்காலத் திலே, 4, 5 ஆண்டுக்காலம் எந்தெந்தக் கல்லூரிகள் விரும்பு கின்றனவோ, அந்தந்தக் கல்லூரிகளில் ஹையர் செகண்டரி வகுப்புகள் இருக்கத்தக்க அளவுக்கும் சில உயர்நிலைப்பள்ளிகளிலே ஹையர் செகண்டரி வகுப்புகள் இருக்கத்தக்க அளவுக்கும் நாளடைவிலே எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் ஹையர் செகண்டரி வகுப்பைக்கொண்டு வரலாம் என்றும் கல்லூரிகளில் பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு ஆகியவற்றை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர்கள் பரிந்துரை செய்திருக் கிருர்கள். இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

National Cadet Corps.

* 227. Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether the Tamil Nadu Government have proposed to award prizes to outstanding N.C.C. cadets in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) புது டில்லியில் குடியரசு நாளன்று ஆண்டுதோறும் நடைபெறும் தேசீய மாணவர் படை அணிவகுப்பிலும், தனிப் போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு தம் திறமையால் பரிசு பெறும் இம்மாநிலத்தைச் சார்ந்த தேசீய மாணவர் படையினருள் தலை சிறந்தவருக்கும் இரண்டாவதாக வருபவருக்கும் பரிசு அளித்திட திட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முதல் தகுதி பெறுபவருக்கு ரூ. 100 மதிப்புள்ள பரிசும் ரூ. 200-க்கு சேமிப்புப்பரிசுப் பத்திரமும் வழங்கப்பெறும். இரண்டாமவருக்கு ரூ. 100 மதிப்புள்ள பரிசும், ரூ. 100 மதிப்புள்ள சேமிப்பு பரிசுப்பத்திரமும் வழங்கப்பெறும்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பல்வேறு மாநிலகுழுக்களிடையே நிகழும் போட்டிகளில் வெற்றிபெறும் தமிழ்நாடு தேசீய மாணவர் படைக் குழுக்களுக்கு சுழல் கோப்பைகள் பரிசளிக்கப்படும். ஆண்டுதோறும் இப்பரிசுகள் அரசு விழா ஒன்றில் வழங்கப் பெறும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்தப் போட்டிகளில் சமீபத்தில் ஆர்ச்சரி—வில் விடுவது—போன்ற முறைகளை இன்ட்ர டியூஸ் செய்ய ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன என்று அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. ஆனால், தேசீய மாணவர் படையைப் பொறுத்தவரையிலும் என்னென்ன பயிற்சிகள் தரப்பட வேண்டுமென்று அகில இந்திய அளவிலே இராணுவத்தினர்தான் முடிவு செய்கிறார்கள். அவர்கள்

1975 நவம்பர் 7]

அளிக்கின்ற பாடத் திட்டங்களும், அவர்கள் அளிக்கின்ற பயிற்சி முறைகளும்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆர்ச்சரி முறை இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலின்போது சொன்ன தேசிய மாணவர் படையைச் சேர்ந்த தலைசிறந்த மாணவருக்கு அளிக்கப்படும் பரிசுத் தொகை குறைவாக இருக்கிறது. இந்த மாதிரி பணப் பரிசு தருவதை விட, இதிலே சிறந்து விளங்கக்கூடிய மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி முடியும் வரையிலே இலவச ஸ்காலர்ஷிப் போன்றவைகள் தருவதோடு, இராணுவ விஞ்ஞானம் (மிலிட்டரி சையன்ஸ்) போன்ற பாடத்திட்டங்களைப் புகுத்தி, அதிலே அவர்களுக்குத் திறமையாகப் பயிற்சி அளித்து, இந்த நாட்டின் நல்ல பாதுகாவலர்களாக அவர்களை ஆக்குவதற்கு உண்டான வழியை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்வி பெறுவதற்கு வேறு பல வகைகளிலே, உதவிச் சம்பளம், உதவித் தொகை ஆகியவற்றைப் பெற்று வருகிறார்கள். ஆனால், என். சி. சி.-யிலே பயிற்சி பெற்று பிற்காலத்திலே இராணுவப் பயிற்சி பெறுவதற்கும், இராணுவப் பள்ளியிலே சேருவதற்கும் சிறந்த வாய்ப்புகளிருக்கின்றன. அந்த முறையிலேதான் மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி அளிக்கப்படுகிறது. நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளத்தக்க அளவுக்கு கடந்த 4 ஆண்டுகாலமாக தொடர்ந்து All India Banner- ஐ தமிழ்நாட்டு தேசிய மாணவர் படைதான் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் பெற்றிருக்கிறது. மாணவர்களுக்கு டெல்லி அரசாங்கத்தின் சார்பாக குடியரசு நாளன்று அந்தப் பரிசுகளையெல்லாம் வழங்குகிறார்கள். தொடர்ந்து மாணவர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு எதுவும் செய்யாமலிருக்கிறது என்பதற்காக, இந்த ஆண்டு ரூ. 3,000 ஒதுக்கி, பரிசுகள் வழங்குகின்ற தன்மையையும், அவர்களை ஊக்குவிக்கிற தன்மையையும் மேற்கொண்டிருக்கிறோம்.

Archaeological excavations near Vridhachalam

* 228 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether Neolithic stones tools have been unearthed near Nellur near Vridhachalam in this State on [illegible]th December 1974; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, some years back, the experts of Archaeological Department have excavated many old sites and have opened some old burials and examined their contents. As a result of the excavations, there is a growing feeling that ancient civilisation similar to Mohanjo-Daro—Harappa existed in South India also. May I know from the Hon. Minister for Education and Tourism whether it is a fact and whether he would contact the Department concerned and enlighten this House with up-to-date information?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அகழ்வாராய்ச்சியிலே கற்கருவிக் காலம், பிற்கருவிக் காலம் போன்றவைகளைப் பற்றிய பல்வேறு பொருள்கள் அங்கங்கு கிடைக்கின்றன. அதை அவ்வப்பொழுது அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரீகங்களுக்கு முற்பட்ட காலப் பொருள்கள் எல்லாம் கூட ஆங்காங்கு கிடைக்கின்றன. விருத்தாசலத்திற்குப் பக்கத்தில் நெல்லூரில் இப்படிப்பட்ட பொருள்கள் கிடைத்தனவா என்று கேட்கப்பட்டதற்கு இல்லை யென்று குறிப்பிட்டேன். வேறு பல இடங்களிலே கிடைத்திருக்கிறது. தனிக் கேள்வி போட்டால், அதனுடைய விவரம் அளிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மொகஞ்சதாரோ-ஹாரப்பா நாகரீகம் தமிழ்நாட்டு நாகரிகத்தை ஒத்தது என்று ஃபாதர் ஈராஸ் போன்றவர்கள் சொல்கிறார்கள். அங்கே கிடைத்தமாதிரி தமிழ்நாட்டில் எங்கெங்கு கிடைத்திருக்கிறது என்று ஆராய்ச்சி ஏதாவது உண்டா, அதுசம்பந்தமாக ஏதாவது விவரம் இருக்கிறதா என்று அறியலாமா?

1975 நவம்பர் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரம் இப்பொழுது என்னால் கூற இயலாது என்றாலும் ஃபாதர் ஈராஸ் அவர்கள் நாகரிகம் இங்கிருந்து அங்கு பரவிற்று என்பதற்கு பல்வேறு குறிப்புகளையும், அதிலுள்ள ஏடுகளில், பானைகளில் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, டிசைபர் பண்ணும்பொழுது இந்தியாவில் பல்வேறு மொழிகளில் சித்திர எழுத்துக்களாக இருக்கின்றன. சித்திர எழுத்துக்களை எந்த மொழியில் வைத்துப் பார்த்தால் வருகிறது என்று பார்க்கும் பொழுது தமிழ் மொழியில்தான் வந்தது. மற்ற மொழிகளில் வரவில்லை என்றும், ஆகவே, இந்த நாகரிகமாக இருக்கக்கூடும் என்ற கருத்தில் பல்வேறு அமைப்புகள், நாகரிக அமைப்பு முறை, செங்கல் மற்றவைகளை ஒப்பிட்டு ஈராஸ் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதுபற்றிய முழு விவரத்தையும் கூற வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரங்கள் எப்படி இருக்கிறது என்று ஆராய்ந்து சொல்லலாம்.

வெள்ளிக் குறியிடாத வினாக்கள்

Supply of power from other States.

Q. 1—

THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

the amount paid to Mysore State and Kerala State for purchase of power during the calendar year 1972 and till the end of June 1973?

A.—

The particulars are furnished below:—

State.	Amountpaid in 1972.	Amount paid in January 1973 to June 1973.
(1)	(2)	(3)
	(RUPEES IN LAKHS.)	
Karnataka	8.58	4.62
Kerala	226.60	43.07

விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—:

மாநிலம்.	1972-ல் செலுத்தப்பட்ட தொகை.	ஜனவரி 1973 முதல் ஜூன் 1973 வரை செலுத்தப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
கர்நாடகம்	8·58	4·62
கேரளா	226·60	43·07

Allotment of Tractors.

Q. 2—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number and type of tractors applied for by the farmers in the State with the Agro-Industries Corporation, Limited, as on this date ; and

(*b*) the number of pending applications for each type of tractors as on this date ?

A.—

(*a*) & (*b*) A statement* is placed on the table of the House.

விடை—

(அ) & (இ) விவர அறிக்கை *ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*622–625 ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Industrial Co-operatives

Q. 3—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

the places where Industrial Co-operatives have been formed in the State as on this date ?

A. —

A statement* is placed on the table of the House.

அவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அரவாக்குறிச்சி தொகுதியில் குழாய்க் கிணறுகள்.

வினு 4—

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவாக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதியில் குடிநீர் வாரியத் தினரால் இதுவரை தோண்டப்பட்ட குழாய்க் கிணறுகள் எத்தனை ?

(இ) எந்தெந்த கிராமங்களின் அருகில் தோண்டப்பட்டுள்ளன ?

(உ) இவற்றில் குடிநீர் கிடைத்த கிணறுகள் எத்தனை ?

விடை—

சட்ட மன்றப் பேரவை முன் விவர அறிக்கை † ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

626-68 *ம் பக்கத்தில் இணைப்பு 2 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

687–693 †ம் பக்கத்தில் இணைப்பு 3 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 நவம்பர் 7

சாலைப் பணிகள்.

வினா 5—

திரு மா. வே. நாராயணசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் ஒன்றியத்திலும், வில்லிவாக்கம் ஒன்றியத்திலும் **1973–74** ஆண்டில் ஊரக சாலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சாலைப் பணிகள் யாவை?

(இ) அவற்றில் சாலை அமைத்து பணி முடிக்கப்பெற்றவை யாவை?

விடை—

(அ) மாதவரம் ஒன்றியத்தில் கொடுங்கையூர் சாலை மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டது. வில்லிவாக்கம் ஒன்றியத்தில் எந்தச் சாலை வேலையும் **1973–74** ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(இ) கொடுங்கையூர் சாலை மேம்பாடு வேலை முடிந்துவிட்டது.

சமுதாயக் கூடங்கள்.

வினா 6—

நம்முடைய நாட்டிலேயே சின்கோனு துறை மூலம் செய்யப்படுகிறது. அந்த பாலிடின் மருந்து பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் திட்டம் 1965-ம் ஆண்டு வரையில் 'அட்டாக் ஃபேஸ்' தீவிரப் பணியாக நடைபெற்றது. அதற்குப் பிறகு 'மெயின்டனன்ஸ் ஃபேஸ்' என்ற வகையில் தீவிரம் தானுகவே குறைந்து விட்டது. 1965-66-ல் இருந்து 1974 வரை மலேரியா வளர்ச்சி எங்கும் காணப்படவில்லை. சென்ற ஆண்டு அந்த வளர்ச்சி காணப்பட்டது. இது பரவுவதற்கு ஒவ்வொரு இடத்திலும் ஒரு சிறப்பான காரணம் இருக்கக்கூடும். தருமபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் ஆற்றோரப் பகுதி சதுப்பு நிலம் அதிகமாக இருக்கும் காரணத்தால் காணப்படுகிறது. வேறு சில பகுதிகள் நகரப் பகுதியாக இருக்குமானுல், நல்ல குடிதண்ணீர் வசதியின்மை, குடியிருப்பு இடத்தில் நெருக்கம் இருந்தால் கொசு உற்பத்தியாகிறது. இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் மணல் வெளிப் பகுதியாக இருப்பதன் காரணமாக கொசு உற்பத்தி ஏற்படுகிறது. இடத்திற்கும், நிலைமைக்கும், தேவைக்கும் ஏற்ப கொசு ஒழிப்புப் பணி நம்மால் அணுகப்படுகிறது. அந்தப் பணிகளால் பயன் ஏற்படவில்லை என்ற நிலைமை ஏற்பட்டால் வேறு திட்டங்கள் பற்றிப் பரிசீலிக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் வேறு விதமான மருந்துகள் பயன்படுத்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : பாலிடின் மருந்து மார்க்கெட்டில் அதிகமாகக் கிடைக்க வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த மருந்து கிடைப்பது பற்றி அங்கத்தினர் அவர்கள் சொன்னது கவனத்தில் கொள்ளப்படும்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974).

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன்மொழிகையில், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 53/1961) சில விதித்துறைகள் செயல்படுத்தப்பட்ட போது நடைமுறையில் காணப்பட்ட சில இடர்பாடுகள் காரணமாக, இச்சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்த இச்சட்ட முன் வடிவு விழைகிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

மேற்சொன்ன சட்டத்தின் 18-வது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள தகவின்மைகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் உட்பட்டவராக இருந்தாரா அல்லது உட்பட்டவராகிறாரா என்பதை முடிவு செய்வதற்கான விதித்துறை ஏதும் அச் சட்டத்தின் மேற்சொன்ன பிரிவில் இல்லை. எனவே, 28-வது பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவில் அடங்கியுள்ள விதித்துறையை யொட்டி கூட்டுறவுச் சங்க உறுப்பினராவதில் உள்ள தகவின்மையை முடிவு செய்வதற்கான அதிகாரத்தைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அளிப்பது அவசியமானதாகும் என்று கருதப்பட்டுள்ளது.

கூட்டுறவு வளர்ச்சி நிதி, கூட்டுறவுக் கல்வி நிதி ஆகியவற்றிற் கான நிதி ஒதுக்கத்தை, சங்கத்தின் பொதுக்குழு நிதி ஒதுக்கம் செய்யவேண்டும் என்பதற்காகக் காத்திராமல், தணிக்கைச்

* 1975 அக்டோபர் 29 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

சான்றிதழை பதிவாளர் வழங்கியதற்குப் பிறகு, சங்கத்தின் நிகர ஆதாயங்களிலிருந்து நேரடியாக ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் கருதப்பட்டுள்ளது.

மேற்சொன்ன சட்டத்தின் 27-வது பிரிவைச் சேர்ந்த (3) உட் பிரிவின் (ஆ) பகுதியில் வரம்பு நிபந்தனையின் கீழ், குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஓராண்டுக்கொருமுறை பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும். சங்கத்தின் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் குழு நிர்வாகத்தில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட வழி ஏற்படுவதோடு, குழு பயன் தரத்தக்க பணி எதுவும் தொடர்ந்து செய்வதற்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே, குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஓராண்டுக் கொருமுறை பதவியிலிருந்து ஓய்வு பெறுதல், அது போன்று அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படக்கூடிய பதவிக் காலியிடங்களை நிரப்புவதற்காக தேர்தல் நடத்துதல் ஆகிய இந்த முறையைக் கைவிடுவது என்றும், குழுவின் உறுப் பினர்கள் அனைவரையும் தேர்ந்தெடுக்க மூன்றாண்டுக்கொருமுறை தேர்தல் நடத்துவதற்காக விதித்துறை இயற்றப்படலாம் என்றும் கருதப்பட்டுள்ளது.

சங்கம் ஒன்றின் புத்தகங்களைக் கைப்பற்றிய விசாரணை அதிகாரி, அப்புத்தகங்களை, அவருக்கு மேலுள்ள உயர் அதிகாரியின் அனுமதியைப் பெறாமல் அறுபது நாட்களுக்கு மேல் வைத்திருக்கக்கூடாது என்பதற்கு இச்சட்டத்தின் 65-வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (b) பகுதியின் இரண்டாவது வரம்பு நிபந்தனை வகை செய்கிறது. பொதுவாக, விரிவான ஆய்விற்குப் பிறகு 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்தி முடிப் பதற்கு விசாரணை அதிகாரிக்கு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. காவல் துறையினரிடம் குற்றப் புகார் கொடுத்துள்ள வழக்குகளில் விசாரணை அதிகாரி, அந்தப் பதிவேடுகள் பிறரால் திருத்தம் செய்யப்படாமல் இருப்பதற்காக அப்பதிவேடுகளை ஆறு திங்களுக்கு மேல் வைத்திருக்க வேண்டியது அவசிய

மாகிறது. எனவே, விசாரணை அதிகாரி, தனக்குமேல் உள்ள அதிகாரியின் அனுமதியைப் பெறுமல் அப்பதிவேடுகளை ஆறு திங்கள் கால அளவிற்கு வைத்திருக்கும் வண்ணம் அக்கால அளவை அதிகப்படுத்துவது என்று கருதப்பட்டுள்ளது.

மேற்சொன்ன சட்டத்தின் 71-வது பிரிவு (1) உட்பிரிவின் முதல் வரம்பு நிபந்தனையில் வரும் "நடத்தக்கூடாது" —'Shall not be held' என்னும் சொல்லுக்குப் பதிலாக "தொடங்கக் கூடாது" shall not be 'Commenced' என்னும் சொல்லை அமைத்துக் கொள்வதென்றும் கருதப்பட்டுள்ளது. இவ்விதித்துறை மேலும் தெளிவாகவும் குறிப்பாகவும் அமைய வேண்டுமென்கிற நோக்குடன் இத்திருத்தம் செய்யப்படுகிறது.

குழுவை மீண்டும் அமைக்க நேரிடும்போது அல்லது ரத்து செய்யப்படும்போது அல்லது சங்கத்தைக் கலைக்க நேரிடும்போது மேற்படி சங்கத்தின் பதிவேடுகள், சொத்துக்கள் இவற்றின் சுவாதீன ஒப்படைப்பைப் பெறுவதற்கான நடைமுறையை இச் சட்டத்தின் 107-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு வரையறுக்கிறது. ஒரு சங்கத்தின் நியமனக்குழு ஒன்றிற்குப் பதிலாக மற்றொரு நியமனக் குழு அமைக்கப்படும்போது, அச் சங்கத்தின் பதிவேடுகள், சொத்துக்கள் இவற்றின் சுவாதீன ஒப்படைப்பைப் பெறுவதற்கான நடைமுறையை மேற்சொன்ன உட்பிரிவு தெளிவாக்கவில்லை. மேற்சொன்ன உத்தேசக் கருத்தைத் தெளிவாக்குவதற்காக இச்சட்டத்தின் 107-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவைத் திருத்த வேண்டுமெனக் கருதப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளிலிருந்து விலக்கு பெறுவதற்காக, அல்லது இவ்விதிகளைத் திருத்த வடிவில் பொருந்தச் செய்வதற்காக வகை செய்து இந்த ஆணைகளை கடந்த ஒரு தேதியிலிருந்து செயலுக்குக் கொண்டுவர மேற்படி சட்டத்தின் 111-வது பிரிவையும் திருத்தக் கருதியுள்ளது.

மேற்சொன்ன கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கவே இச்சட்ட முன்வடிவு விழைகிறது. இப்பிரேரணையை ஏற்குமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எட்டு பில்களும் ஒரு ரெஸல்யூஷனும் இருக்கின்றன. இன்றைக்கே இவற்றை முடித்து விடவேண்டும். இல்லை என்றால் நாளைய தினம் நான்-அபிஷியல் டே, அப்போது பில்களை எடுக்க வேண்டியிருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த மசோதாக்களை எல்லாம் சீக்கிரமாக முடித்தால்தான் மிக முக்கியமான ஒரு மசோதா வர இருக்கிறது, அதை முடிக்க முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: எட்டு மசோதாக்களையும் ஒரு ரெஸல்யூஷனையும் ஒரே நாளில் மூன்று மணி நேரத்தில் முடித்துவிட வேண்டும் என்று சொல்வது என்றால் ஒழுங்கான முறையில் அவற்றைச் செய்யமுடியாது. ஆகவே நாளைக்கும் அவற்றை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை நான்-அபிஷியல் டே. அது வேண்டாமென்றால் வைத்துக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் ஆண்டுக்கு ஒரு தடவை மூன்றில் ஒரு பங்கு நிர்வாகஸ்தர்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் மூன்றில் ஒரு பங்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றிருப்பதற்குப் பதிலாக, ஒரே தடவையில் நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பது என்றிருப்பது வரவேற்கத் தக்கது. கடந்த காலத்தில் இருந்த முறை சரியானதாகப் பயன்பட வில்லை.

இதில் புதிதாக ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் ஐந்து சதவிகிதத்தை கூட்டுறவு வளர்ச்சி நிதிக்காகவும், இன்னொரு இரண்டு சதவிகிதத்தை கல்வி நிதி என்றும் ஒதுக்கக்கூடிய முறை இருப்பது தேவை இல்லாதது, அவசியம் இல்லாத ஒரு ஏற்பாடு.

1975 நவம்பர் 7] [திரு. சோ. அழகர்சாமி]

பல சங்கங்களுக்கு கூட்டுறவு ஸ்டோர்ஸ் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைட்டீஸ் இருக்கின்றன. அவை அரசின் நிதி உதவியை எதிர்பாராமலேயே திறமையாகத் தங்கள் வியாபாரத்தை நடத்தி வருகிறார்கள். அவற்றிற்கு இந்த வளர்ச்சி நிதி தேவைப் படுகிறதா? லாபத்தில் 5 சதவிகிதம் என்றால் ஒவ்வொரு சங்கமும் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் அதிகமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. கல்வி நிதி சம்பந்தப் பட்ட வரையில் இவ்வளவு ஏன் செலவழிக்கிறோம் என்று சொல்லப்படவில்லை. ஆக, வளர்ச்சி நிதிக்காக 5 சதவிகிதம், கல்வி நிதிக்காக 2 சதவிகிதம் என்றிருப்பது அவசியமல்லை. அதை நீக்கவேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்களில் உள்ள நிர்வாகஸ்தர்கள் — மாண்புமிகு திரு. ஆதித்தனர் அவர்கள் கூட்டுறவு அமைச்சராக வந்த பிறகு — தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் ஆறு பேர்கள் என்றால் நியமனம் செய்யப்படக்கூடிய நிர்வாகஸ்தர்கள் 7 பேர்கள். அப்படி வருகிறபோது இது நியமனம் செய்யப்பட்ட போர்டாகத் தெரிகிறதே தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாகத் தெரியவில்லை. ஆகவே, ஜனநாயக முறைப்படி பங்கு போட்டிருக்கும் உறுப்பினர்கள் சேர்ந்து அவர்களுக்குப் பிடித்தமானவர்களை டைரக்டர்களாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு ஏற்பாடு இருக்க வேண்டுமே தவிர நாமே நியமனம் செய்வது என்றிருந்தால் கூட்டுறவு என்ற பெயரே அதற்குத் தேவையில்லை. அப்போது தேர்ந்தெடுக்கக்கூடிய அவசியமில்லாமல் போய் விடுகிறது. பங்கு மூலதனம் போடும்போது நாம் நிதி உதவி செய்கிறோம். ஆகவே, அது செம்மையாக நடைபெறுகிறதா என்று கண்காணிப்பதற்கு சர்க்காரின் ஒரு அதிகாரி செகரட்டரியாக எல்லாச் சங்கங்களிலும் இருக்கலாம். மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக சர்க்கார் அதிகாரி ஒருவரை செகரட்டரியாக நியமிக்கலாம். அதில் ஆட்சேபணையில்லை. அரசாங்கத்திற்கு ஒரு செகரட்டரி போதாது என்றால் இரண்டு அல்லது மூன்றுபேர்களை, பதினைந்து பேர்கள் டயரக்டர்கள் அல்லது நிர்வாகஸ்தர்களாக உள்ள சங்கங்களில் அரசாங்கப் பிரதிநிதிகளாக நியமனம் செய்யலாம். ஆனால் நியமனம் செய்வது என்பதில் இப்போதிருக்கிற நிலை கட்சிக்

கிளைகளாக ஆங்காங்கு இன்று கூட்டுறவுச் சங்கங்கள் செயல் படுகின்றனவே தவிர உண்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக இல்லை.

2,400 லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகளில் 1,400 கலைக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். மார்க் கெட்டிங் சொஸைட்டீஸ், மூன்று சங்கங்கள் என்றால் மூன்று டயாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். பங்குத் தொகை செலுத்திய மூவாயிரம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கவேண்டியது மூன்று பேர்களை.

பின், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் சென்டர்ஸ் என்று ஆரம்பிக்கப்பட்டது. அவை இன்று செயல்படவில்லை.

வீக்கர் செக்ஷனிலிருந்து, பெண்களிடையேயிருந்து தேர்ந் தெடுக்கபடவேண்டும் என்று சொன்னால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். அவரை அத்தனை பேர்களும் சேர்ந்து வோட்டு போட்டு தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதேபோல் குறைந்த வருமானம் உள்ள நிலம் படைத்தவர் கள் பிரதிநிதி என்றால் அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் அவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிர்வாகத்திலே கட்டாயம் இடம் இருக்க வேண்டும். இரண்டு பேர்கள் டயாக்டர்களாக இருக்க வேண்டும் என்றால் அவர்கள் இரண்டு பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

சென்ட்ரல் பாங்காக இருந்தாலும் சரி அல்லது மாநில வங்கிகளாக இருந்தாலும் சரி அல்லது பிரைமரி சொசைட்டி களாக இருந்தாலும் சரி நேரடியாக அரசாங்கமே நியமனம் செய்யாமல் நிர்வாகத்தில் இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களின் காலத்தில் அப்படி ஒரு ஏற்பாடு வரவேண்டும். திரு. ஆதித்தனார் அவர் கள் சொன்னார்கள் ஐந்தில் ஒரு பங்குதான் நியமனம் செய்கிறோம் என்று.

1975 நவம்பர் 7] [திரு. சோ. அழகர்சாமி]

ஆனால் மறைமுகமாக லிப்ட் இரிகேஷன் சொஸைட்டீஸ், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் சென்டர்ஸ் என்று இல்லாத சங்கங்களை உற்பத்தி செய்து டயரக்டர்களாக நியமனம் செய்வது என்று செய்து வரப்படுகிறது. அதையெல்லாம் நீக்கவேண்டும். இல்லையென்றால் எதிர்காலத்தில் உங்களுக்குத்தான் கஷ்டம். பிறகு ஆட்சிக்கு வரக் கூடியவர்கள் அப்படி நியமனம் செய்வார்கள். பிறகு இந்தக் கட்சியில் இருப்பவர்கள் வரமுடியாது.

ஆக, இந்த டெவலப்மென்ட் பண்ட், கல்வி நிதி இவை அவசிய மில்லாதவை. இவற்றை நீக்கிவிட வேண்டும். ஒரே தடவையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நியமனம் செய்யக்கூடிய முறையை நீக்கவேண்டும். ஆக, இப்படிச் செய்து கூட்டுறவு ஸ்தாபனங்கள் -- மக்களுக்குக் கடன் வழங்குவது, உணவுப்பொருள்கள் விநியோகிப்பது போன்ற வைகளை நல்ல முறையில் செய்வதற்கு -- நல்ல முறையில் செயல் படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவு சட்டத்தை திருத்தம் செய்கிற வகையில் ஒரு மசோதாவை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக் கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து இதைப்பற்றி ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அந்தக் குழு ஒரு அறிக்கை தந்திருக்கிறது. இன்று அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்குப் பதிலாக அந்தக் கமிட்டி சொன்ன சிபார்சுகளின் அடிப்படையில் முழுமையான மசோதா ஒன்றைக் கொண்டு வந்திருப்பார்களானால் நல்லபடியாக இருந்திருக்கும் என்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு நிர்வாகத்தின் தகுதியின்மை பற்றி ஆராய்வதற் கான அதிகாரம் ரெஜிஸ்டிராருக்குத்தான் என்று ஒரு பிரிவைச் சேர்த்திருக்கிறார்கள். இந்த நிர்வாகிகள் ஒழுங்காக நடக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம்,

ஒரு அதிகாரியிடத்தில் ஒரு கோரிக்கை அல்லது மனு தந்தால் இஷ்டத்திற்கு அவர்கள் அதுகுறித்து முடிவு செய்கிற நிலை இன்று இருந்து வருகிறது. கோர்ட்டில் வழக்குகள் எப்படி நடைபெறுகின்றனவோ அதேபோல் ரெஜிஸ்ட்ரார் வாரத்திற்கு ஒரு நாள் அல்லது மாதத்திற்கு இரண்டு நாட்கள் என்று வைத்துக்கொண்டு வழக்குகளை அவர்கள் விசாரணை செய்து முறையாக தீர்ப்பு வழங்குகிற ஒருநிலை உருவாகவேண்டும். இல்லை என்றால் இந்த அதிகாரத்தைக் கோர்ட்டுக்கே விட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

இன்றைய தமிழக அரசை தொழிலாளர் நல அரசு, தொழிலாளர் நல அரசு என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள். இன்னும் மத்திய அரசு 8.33 சதவிகிதம் போனஸ் என்பதை 4 சதவிகிதமாகக் குறைத்த நேரத்தில் அவர்கள் எதிர்ப்புக்காட்டி போராடினார்கள். எந்த நேரத்திலும் இந்த அரசு தொழிலாளர் நல அரசு, தொழிலாளர் நல அரசு என்று சொல்ல அமைச்சர்கள் தவறுவதில்லை. ஆனால் இன்று கொண்டுவரப் பட்டிருக்கிற இந்த மசோதாவில் உள்ள ஒரு பிரிவு எந்த அளவிற்கு தொழிலாளர்களுக்கு விரோதமான அரசு என்பதைத் தெளிவாக்கிக் கொண்டிருக்கிறது. ஒரு கூட்டுறவு நிர்வாகத்தில் லாபம் இருக்கிற நேரத்தில் அந்த லாபத்தில் பங்கு பெறக்கூடிய முதல் உரிமை அந்தக் கூட்டுறவு நிறுவனத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு இருக்கவேண்டும் என்ற கருத்தை இந்த அரசு நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால்தான் நடைபெறுகிற திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர் நல அரசு என்பதற்கான ஒரு ஆதாரமாக இருக்கும். ஆனால் அவை முன்னால் வந்திருக்கிற இந்த மசோதாவைப் பார்க்கிறபோது முதல் உரிமை கூட்டுறவு வளர்ச்சி நிதிக்கும், கல்வி நிதிக்கும், வேறு பல வளர்ச்சி நிதிகளுக்கும் என்று ஒதுக்கிவைத்துவிட்டு நான்காவதாகத்தான்

towards payment of bonus to members and paid employees of the registered society at such rate and subject to such conditions as may be specified in the rules;

என்று இதில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுடைய நலன் இதிலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்து இந்த மசோதாவை எதிர்த்து நான் அமர்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கூட்டுறவு இலாகா அமைச்சர் இந்தச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கும் நிலையில், அந்தச் சில திருத்தங்களை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

குறிப்பாக, அங்கத்தினர்களைச் சேர்ப்பதில் ஏற்பட்டு இருக்கின்ற முறையானது வரவேற்கத்தக்கது. இதுவரையிலும் இருந்த முறை, இருக்கின்ற கமிட்டிகள் விரும்பினால் அவர்களுக்கு வேண்டியவர்களை சேர்த்துக் கொள்ளலாம், தங்களுக்கு வேண்டாதவர்களை—கூட்டுறவு சங்கத்தில் சேர வேண்டுமென்று அதற்கான கட்டணம், பாரம் கொடுத்தாலும்—சேர்ப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை என்று சொல்லும் சூழ்நிலை இருந்தது. அதை மாற்றி, அந்த அதிகாரத்தை உயர்மட்ட அதிகாரி ஒருவரிடத்தில் இப்போது கொடுப்பதால் நிச்சயம் இதுவரையிலும் நடைபெற்றுக்கொண்டிருந்த ஒழுங்கீனங்கள் மாற்றப்படுவதற்கு வழிவகை செய்யும் என்ற எண்ணத்தில் இந்த ஷரத்து கொண்டு வரப்பட்டு இருப்பதால், அதை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, நண்பர் அழகர்சாமி சொன்னதுபோல், இதற்கு முன்னால் இருந்த கூட்டுறவு அமைச்சர் தன்னுடைய நுண்ணிய அறிவு ஆற்றலால் பல்வேறு சட்டத் திருத்தங்களை இதிலே கொண்டு வந்து இருக்கிறார்கள். அந்தத் திருத்தங்கள் எல்லாம் ஒருவேளை இந்த அரசு ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் இன்னொரு கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் நேரத்தில், நிச்சயமாக அது உங்களுக்கு அனுகூலமாக இருக்காது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு கூட்டுறவு சங்கத்தின் கமிட்டியில் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் தேர்வு முறையில் எடுப்பதற்கு பதிலாக நியமன முறையில் எடுக்கும் சட்டமானது இப்போது நேரில் இருக்கிறது. இது முன்னாள் கூட்டுறவு அமைச்சரின் நுண்ணிய

அறிவு ஆற்றலால் திருத்தப்பட்டது என்று சொன்னார்கள். ஒரு வேளை எதிர்காலத்தில் அரசு மாறியது என்று சொன்னால் உங்களுக்கு விரோதமாக அமையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் தருணத்தில், அந்த ஷரத்தை மாற்றி ஜனநாயக அடிப்படையில் எல்லா அங்கத்தினர்களும் தேர்வு முறையில் வரவேண்டும் என்ற முறையில் திருத்தத்தை இன்றையதினம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தால், அதை ஏகமனதாக நிறைவேற்றித் தரத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திருத்த சட்ட முன்வடிவில் அது எல்லாம் இல்லை. பொது விவாதம் வரும்போது அது பற்றி பேசலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : முக்கியமான விஷயம் சார். இந்தக் கூட்டுறவு சங்கங்களில் இருக்கின்ற நிதியை எந்தெந்த முறையில் பகிர்ந்து கொள்வது என்பதற்குத் திருத்தம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இப்போது எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களில் வருகின்ற நிதி பல்வேறு முறையில் துஷ்பிரயோகம் செய்யப் படுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அன்பளிப்பு, நன்கொடை என்ற முறையில் நிதியைப் பல்வேறு முறையில் துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு அரசியல் மாநாட்டிற்கும் பணம் வசூல் செய்கிற போது, ஆங்காங்கு இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து பணம் வசூலிக்கிறார்கள். அது சரியா தப்பா என்று நான் கூறுவதற்கு இல்லை என்றாலும் அதற்கான கணக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வைப்பது இல்லை.

இரண்டாவதாக, அன்பளிப்பு என்ற முறையில் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படுகின்றவர்களுக்கு கார்கள், இன்னும் பல பொருள்கள் அளிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட அன்பளிப்

பிற்கான பணம் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தே எடுத்து செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதற்கான கணக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் இல்லை. ஆகவே, இந்த நிலையினை மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்று இதற்கான சட்டத்தைத் திருத்த வேண்டும். அல்லது இவ்வாறு முறைகேடுகள் ஏற்படாத வகையில் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை, 1/3 அங்கத்தினர்கள் பதவி விலகுகிற முறையை மாற்றி, ஒரு முறை தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்கள் அத்தனை பேருமே 3 ஆண்டுகள் பதவி யில் இருப்பார்கள் என்று கொண்டு வந்துள்ள திருத்தம் வரவேற் கத்தக்கது. ஏனென்றால் 3 ஆண்டுகள் ஒரே கமிட்டி இருந்து செயல்பட்டால்தான், ஒரு கூட்டுறவு சங்கம் நல்லமுறையில் செயல் பட வழிவகை இருக்கும்.

அது மட்டுமல்லாமல், இப்போது ஒரு சிக்கலான நிலைமை இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் பதவி விலகும்போது, முன்பு அமைக்கப்பட்ட கமிட்டி அங்கத்தினர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக் கின்றனர், அவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பதவியில் இருப்பார்—6 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால்—இரண்டு உறுப்பினர்கள் விலகும்போது—புதிதாக இரண்டு உறுப்பினர்கள் வருகிறார்கள், அவர்கள் தலைவருக்கு எதிராக செயல்படுகிறார்கள்; அடுத்த ஆண்டும் இதே நிலைமை ஏற்படுகிறது. அதற்கு அடுத்த ஆண்டும் இதே நிலைமை ஏற்படுகிற நேரத்தில், இந்த ஆறு உறுப்பினர்களும் தலைவரை எதிர்க்கும் நிலையில், தலைவர் பதவி வகிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. தலைவருக்கும், அங்கத்தி னர்களுக்கும் ஒரு உடன்பாடு இல்லாத நிலையில் ஒரு சங்கம் செயல்படுகிறது என்றால், அந்தச் சங்கம் உண்மையில் எவ்வாறு சிறப்பாக செயல்பட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

ஆகவே, ஒரு சங்கத்தில் அங்கத்தினர்களுக்குத் திருப்தி இல்லாத வகையில் ஒரு தலைவர் இருக்கிறார் என்று சொன்னால், அந்தத் தலைவரை மாற்றுவதற்கு உள்ள அதிகாரம் அந்த அந்தக்

கமிட்டிகளுக்கு வழங்கப்படவேண்டும். இப்போதுள்ள சட்டத்தில் அதற்கு வழி வகையில்லை. அதை மாற்றுவதற்குள்ள முறையில் சில நல்ல அம்சங்கள் இந்தச் சட்டத்தில் இருப்பதால், இந்த மசோதாவை நான் வரவேற்று, அமர்கிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் இந்த மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சந்தானம் கமிட்டி இந்தக் கூட்டுறவு சட்டத்தை நல்ல முறையில் திருத்தவேண்டும் என்பதற்காக சிறந்த ஆலோசனைகளைச் சொல்லி இருக்கிறது. அந்த ஆலோசனைகளில் ஒன்று, தலைவர்கள் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்கக்கூடாது என்பதாகும். அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கலாம். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நிறைய நடந்து கொண்டு இருக்கின்றன என்பதை நான் அமைச்சர்களுக்குச் சொல்லித் தெரியவேண்டியது இல்லை. ரொம்பவும் சுலபமாக பொதுமக்களின் ரூபாயையும், அரசாங்கத்தின் ரூபாயையும் — ரூ. 10,000, ரூ. 15,000 — என்று எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். அவர்கள் மீது எந்த விதமான வழக்கும் தொடர முடியவில்லை. தலைவர் மாத்திரம் இல்லாமல் அதிலே இருக்கும் செயலாளர்களும் அந்த மாதிரி செய்கிறார்கள். உரத்தை அவர்களிடத்தில் விற்கச் சொல்லிக் கொடுத்தால், உரத்தை விற்ற ரூபாயை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு, கடுமையான தண்டனையை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும், அவர்களைப் பிடித்து சிறையில் தள்ளக்கூடிய நிலையில் சட்டத்தில் வகை செய்ய வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு—மற்ற மாநிலங்களில் இருப்பதாக அறிகிறேன்—இந்த நாட்டிலே கடன் கொடுப்பதற்கு நாதி கிடையாது. எந்த மாதிரி கூட்டுறவு நாணயச் சங்கங்களிலும் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள். வாக்களிப்பதற்கு உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்களுக்குக் குறைந்தபட்சம் ரூ. 200 கடன் கொடுத்து வாங்க முடியாது என்ற நிலை இருக்கிறது. பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் அவர்கள் குடும்ப செலவிற்கு ரூ. 200—ரூ. 250

கடன் கொடுத்துத் திரும்ப வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தித் தந்தால், அவர்கள் லேவாதேவிக்காரர்களிடமும், கந்து வட்டிக்கு கடன் கொடுக்கக் கூடியவர்களிடமும் போகாமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் ஒரு தொகை கடன் கொடுக்கும் நிலையை ஏற்படுத்தும் வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு சட்டத்திலே கொண்டு வரப்பட்டு இருக்கும் திருத்தங்களை வரவேற்று ஓரிரு கருத்துக்களை நான் சொல்வதற்கு விரும்புகிறேன்.

இப்போது இருந்து வந்த முறையை மாற்றி, மூன்று வருஷம் தொடர்ந்து பதவி வகிக்கலாம் என்று கொண்டு வந்தது நல்ல முறைதான். பொதுவாக கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நாணயச் சங்கங்கள் என்று சொன்னால், இன்றைய தினம் அவற்றிலே சில நேரங்களில் நாணயம் இல்லாதவர்கள் அங்கம் வகிப்பதால் கூட்டுறவு சங்கத்தின் நோக்கமே கெட்டு விடும் சூழ்நிலை இருக்கிறது. மாவட்ட அளவில் இருப்பவர்கள் சிலர் தவறான பாதையில் செல்வதால் சில முறைகேடுகள் நாட்டிலே நடைபெற்று வருகின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால், இன்று ஒரு கூட்டுறவு சங்கத்தில் ஆட்களை நியமிக்கும் பொறுப்பு எல்லாம், அதனுடைய பெரும் தலைவருக்கு இருக்கிறது. முதலமைச்சர் நினைத்தால் கூட செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதம் அல்ல. இப்போது சபை முன் உள்ள சட்டத் திருத்தத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டும். பொதுவாக, என்ன வேண்டுமானாலும் சொல்வது என்பது முறையல்ல. திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

(முற்பகல் 10-30)

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பொதுவாக இந்தக் குறைபாடுகளை, சீர்கேடுகளை எல்லாம் நீக்க திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பதற்காக ஆலோசனை சொல்கின்றோம். இன்றையதினம் கூட்டுறவு முறையால்தான் மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும். அந்த முறையால்தான் பொதுமக்கள் நல்வாழ்வு பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்று வரும் சிறப்பான முறையை இந்தியாவில் உள்ள அனைவரும் பாராட்டியிருக்கின்றனர். ஆகவே, இன்னும் சீர்திருத்தங்களைச் செய்து பொதுமக்களுக்கு மேலும் நன்மை செய்யக் கூடிய அளவுக்குச் செய்தால் நன்றாக இருக்கும். மூன்று வருடம் தொடர்ந்திருப்பது நல்ல அம்சம்தான். இவற்றையெல்லாம் வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தைப் பற்றி அநேகமாக எல்லா உறுப்பினர்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஒரு ஆண்டுக்கு ஒரு முறை கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தலை வைப்பதால், சங்கத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டங்களைப் பற்றியும், சங்கத்தில் பொறுப்பேற்றிருக்கின்ற இயக்குநர்களுடைய நேரம் வீணாவதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். 10 ஆயிரம் சங்கங்கள் இருந்து, ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் என்றால், சிறிய சங்கமாக இருந்தால் 500 ரூபாய் என்ற அளவிலும், 5,000-க்கு மேற்பட்ட பெரிய சங்கங்களில் 1,000 ரூபாய் என்ற அளவிலும் செலவாகிறது.

ஆகவே, சங்கங்களில் தேர்தல் செலவினத்தைக் குறைக்க வேண்டும், ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் என்பதால் சங்கங்களில் வேலைகள் தாமதப்படுகின்றன, சங்கங்கள் சிறப்பாக செயல்படவேண்டும் என்பதற்காகத்தான் மூன்றாண்டுக்கு ஒரு முறை தேர்தல் என்று இப்போது போடப்பட்டிருக்கிறது. இதை எல்லோரும் ஏகமனதாக ஒத்துக் கொண்டிருக்கிறோம். இது முக்கியமான திருத்தம்.

1975 நவம்பர் 7] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

அடுத்ததாக, தொழிலாளர்கள் பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் தொழிலாளர்களைப் பற்றி இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை என்ற குறையைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் தொழிலாளர்களுக்கு என்று தனியாக கடன் கொடுக்கின்ற ஒரு முறை வேண்டும் என்று சொன்னார்கள். கடன் ரிசர்வ் பாங்கியிலிருந்து வாங்குகிறோம். அவர்கள் இன்னின்னாருக்கு இன்னின்ன முறையில் கடன் கொடுக்க வேண்டும் என்ற விதி முறையோடு, அந்தந்த ஆண்டுக்கு பட்ஜெட் போட்டு பணத்தை நமது மாநில வங்கிக்குக் கொடுத்து, அதற்குப் பிறகு மத்திய வங்கிக்கு இன்னின்ன கடன்களுக்குக் கொடுக்க வேண்டும், குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் என்ற முறையை வைத்திருக்கிறார்கள். சொத்து இல்லாதவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு கொடுக்கின்ற திட்டம் வேண்டும் என்றால், அதற்காக பண ஒதுக்கீடு செய்து, தனியாக அதுபற்றி பரிசிலனை செய்ய வேண்டுமே தவிர, தற்போதுள்ள நடைமுறைப்படி சொத்து இல்லாதவர்களுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு கடன் கொடுக்க எந்த விதியும் கிடையாது. ஆகவே, இந்தப் பிரச்னையைப் பற்றி பின்னால் யோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாயகம் அவர்கள் இந்த சர்க்கார் தொழிலாளர் சர்க்கார் அல்ல; ஆகையால்தான் நிதி ஒதுக்கீட்டில் கல்விக்கும், வளர்ச்சி நிதிக்கும் ஒதுக்கியிருக்கிறது, மற்றதற்கெல்லாம் ஒதுக்கிவிட்டு கடைசியில் தான் போனசுக்கு என்று ஒதுக்கியிருக்கிறது என்றார்கள். மற்ற செலவினங்கள் அன்றாடம் செய்யப்பட வேண்டிய செலவினங்களாகும். மத்திய அரசாங்கம் போட்டிருக்கின்ற சட்டப்படி லாபம் கிடைத்தால்தான் போனஸ் என்று போட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் லாபம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் 4 சதவிகிதம் போனஸ் என்றிருந்தது. அப்படி இல்லாமல் இப்போது லாபம் கிடைத்தால்தான் போனஸ் என்று மத்திய அரசாங்கத்தில் சட்டம் போட்டிருக்கிறார்கள். அதையெல்லாம்

எடுத்துக்கொண்டு தொழிலாளர்களை இந்த அரசாங்கம் மோசம் செய்ய விரும்பவில்லை. ஆகவேதான், கிடைக்கின்ற லாபத்தில் அத்தியாவசியச் செலவுகள்போக, மற்றவற்றிற்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

கல்வி வளர்ச்சிக்கும், மற்ற வளர்ச்சிகளுக்கும் பணம் தேவை யில்லை என்று திரு. அழகர்சாமி சொன்னார்கள். அவருக்குச் சொல்லிக் கொள்ளுவேன், சில சங்கங்களில் அதிகமான சொந்தச் செலவால் வளர்ச்சிக்கு வழி செய்ய முடியவில்லை. கல்வியைப் பொறுத்தவரையில், கூட்டுறவுப் படிப்புக் கல்லூரி ஒன்று நடை பெற்று வருகிறது. அதற்கு 4½ லட்ச ரூபாய் செலவில் கட்டிடம் ஒன்று வாங்கியிருக்கின்றோம். அதை மேலும் விஸ்தரிக்க வேண்டிய செலவினங்கள் தேவைப்படுகின்றன. 7 கூட்டுறவுப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் படிக்கின்ற மாணவர்களுக்கு கூட்டுறவு பற்றி நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டும். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், திரு. வகாப் சொன்னதைப் போல், இந்தத் துறையால் மக்கள் எவ்வளவு தூரம் பயனடைய முடியும் என்பதை தமிழகக் கூட்டுறவுத் துறை இந்தியாவுக்கே எடுத்துக் காட்டாக இருந்து காட்டிக் கொண்டிருக்கிறது.

நமது மத்திய வங்கிகள், இந்தியாவுக்கே முன் உதாரணமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்ற சூபர் மார்க்கெட் போன்றவை, கிட்டதட்ட 9,000 இடங்களில் அப்பண்டங்களை வழங்கிக் கொண்டு வருகின்றன. அதில் கூட்டுறவுத் துறை 7,000 இடங்களை எடுத்து செய்து வருகிறது. எஞ்சியுள்ளதில் 1,000 இடங்களில் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் செய்கிறது. இப்படிச் செய்யும்போது, கூட்டுறவு சம்பந்தமான படிப்பை நல்ல முறையில் படித்து அதில் தேர்ச்சி பெற்றவர்கள் இந்தச் சங்கங்களில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவேதான், நல்ல முறையில் பயிற்சியளிக்க, மேம்பாடு செய்ய கல்வி நிதி வைத்திருக்கிறோம். முன்னர் சொன்னதுபோல், இது அல்லாமல் வளர்ச்சி நிதி என்று வைத்திருக்கிறார்கள்.

1975 நவம்பர் 7] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

பல சங்கங்களுக்குக் கட்டிடம் தேவைப்படுகிறது. தற்போது அவர்கள் அநியாய வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், எதிர்கால வளர்ச்சிக்காக இந்த வளர்ச்சி நிதிகளை எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது.

சில இடங்களில் உரங்களை வைக்க 'கோடவுன்' தேவைப் படுகிறது. ஆகவேதான் மொத்தமாக வளர்ச்சி நிதிக்கு, கல்வி நிதிக்கு நிகர லாபத்திலிருந்து 10 சதவிகிதம் எடுத்துக் கொண் டிருக்கிறோம். அதிகமான அளவில் வளர்ச்சிக்கு என்று பணத்தை எடுத்து, அங்கே வேலை செய்கிறவர்களுக்கு போனஸ், மற்ற விகிதாசாரங்கள் கிடைக்காத அளவுக்கு நாம் செய்யவில்லை.

இப்படிச் சட்டத்தை வைத்திருக்கிறீர்களே, அடுத்தாற்போல வேறு சர்க்கார் வந்தால் உங்கள் கதி என்ன ஆகுமோ என்றார்கள். அவர்கள் சொன்னதிலிருந்து நாங்கள் சுயநலக்காரர்கள் இல்லை என்பது தெரிந்திருக்கும். ஏதோ இதற்கு முன்பிருந்த அமைச்சர் மிகத் திறமையாகக் காரியமாற்றியிருக்கிறார் என்று நமது உறுப்பினர்கள் சொன்னார்கள். மிகத் திறமையாகச் செய்த காரியம் எங்களுக்கே பயன்படாமல் போய்விடுமோ என்று நீங்களே சொல்லுகிறீர்கள் என்றால், நாங்கள் மோசக்காரர்கள் அல்ல, சுயநலக்காரர்கள் அல்ல, சுயநலத்துக்காகச் செய்யவில்லை என்பதை நீங்களே நிரூபித்துக் காட்டியதற்கு நன்றி தெரி வித்து, இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 60/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

Clause 4

MR. SPEAKER: The question is:

"That Clause 4 do stand part of the Bill"

THE HON. THIRU MANNAI. P. NARAYANASAMY: Sir, I move:

"In new clause (*aa*) of sub-section (3) of section 27 proposed in sub clause (1) of clause 4, *for* the figures "1974" *substitute* the figures "1975".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 4, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 5 முதல் 10 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THE HON. THIRU MANNAI. P. NARAYANASAMY: Sir, I move:

"In the enacting formula, *for* the words "Twenty fifth Year", *substitute* the words "Twenty-sixth Year."

1975 நவம்பர் 7]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:

Sir, I move: "In clause 1, in sub-clause (1), *for* the figures "1974", *substitute* the figures "1975".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட வேண்டும்."

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, விவசாயத் தொழிலாளிகளுக்குக் கடன் சம்பந்தமாக ஒன்று சொன்னார்கள். அது கோவாபரேடிவ் கடனைக முதலில் கொடுக்கிறார்கள். அந்த மாதிரி கொடுப்பது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வந்திருக்கின்ற அமெண்டுமெண்டில் நீங்கள் சொல்வது வரவில்லை. பொதுவான கருத்தைச் சொல்லுகிறீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நிதி சம்பந்தப் பட்ட வரையில் 5 சதவிகிதம் வளர்ச்சி நிதி, 2 சதவிகிதம் கல்வி நிதி என்றிருப்பதை இரண்டுக்கும் 2 சதவிகிதம் என்று ஆக்கலாம். 5 சதவிகிதம் என்பது அதிகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 5 சதவிகிதம், 2 சதவிகிதம் என்பது இப்போது கொண்டு வரப்படவில்லை. ஏற்கனவே இருப்பதுதான்.

திரு. சோ. அழகர்சாமி: நியமனம் பண்ணுவது விஷயமாகச் சொன்னார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட டைரக்டர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இந்தத் திருத்தத்தில் வரவில்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவில் குறிப்பிடப் பட்டுள்ள விஷயத்தைப் பற்றித் தான் சொன்னார்கள். தேர்தல் நடக்க வேண்டும் என்று சொல்லி ஒரு இரண்டரை வருஷம் ஆகிவிட்டது.

It opens the flood-gates of the entire co-operative field. அப்படித் தான் இந்த மசோதா இருக்கிறது. இது தேர்தல் பற்றிய விஷயம் ஆகையால் இதைச் சொன்னேன்.

You have restricted the discretion. Anyway, it opens the flood-gates of the entire co-operative field.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, 5 சதவிகிதம், 2 சதவிகிதம் என்று லிமிட் இருக்கிறது. 5 சதவிகிதம் என்றால் 5 சதவிகிதத்துக்கு மேல் போகாமல் இருக்கும். 2 சதவிகிதம் என்றால் இரண்டு சதவிகிதத்திற்கு மேல் போகாமல் இருக்கும். தேவையானால் இதை மறுபடியும் பரிசீலனை செய்யும்படியான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] 1975 நவம்பர் 7]

நியமனம் பற்றிச் சொன்னார்கள். 5 சதவிகிதம் நியமன உறுப்பினர்கள் என்று வைத்திருக்கிறோம். 10 பேர்கள் இருந்தால் அதில் இரண்டு பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். வீக்கர் செக்ஷனைச் சேர்ந்தவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒரு அரிசன், ஒரு பெண் உறுப்பினர், ஒரு சிறு விவசாயி—இந்த மூன்று பேர்கள் இருக்க வேண்டாமா? யார் வந்தாலும் பணக்காரர்கள் என்ற நிலைமையை மாற்ற 3 வீக்கர் செக்ஷனைச் சேர்ந்தவர்களை வைப்பதில் என்ன கஷ்டம் என்று தெரியவில்லை. எலெக்ஷனே தேவையா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. அதை எல்லாம் இப்போது பேச வேண்டாம். தேவையில்லை என்று எல்லாம் சொல்லக் கூடாது. தேவை என்ற காரணத்தால் தான் வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 60/1974), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1975).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

* 1975 நவம்பர் 4 ஆம் தேதிய அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment:

"That the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (L.A.) Bill No. 52 of 1975) be circulated for eliciting public opinion thereon.

The amendment was duly seconded.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த சட்டத் திருத்தத்திலே எங்களுடைய கட்சியின் சார்பாக இரண்டொரு ஆலோசனைகளைக் கூற விழைகிறேன்.

இந்த சட்டத்தில் பல்வேறு அம்சங்கள் புதைந்திருக்கின்றன. குறிப்பாக, 92-வது ஷரத்தில் ஒரு திருத்தம் வந்திருக்கிறது. இந்த 92-வது திருத்தத்தில் ஒரு மேம்பாடு என்னவென்றால் இப்போது இருக்கிற தணிக்கைக் கட்டணம் 1½ சதவிகிதம் ஆக இருக்கிறது. அதை 3½ சதவிகிதம் ஆக உயர்த்த வேண்டுமென்று அந்தத் திருத்தத்திலே கூறப்பட்டிருக்கிறது. இதை நான் ஆட்சேபிக்கிறேன்—எதிர்க்கிறேன். இப்போது இருக்கிற 1½ சதவிகிதத்தைக் கொடுக்கக் கூட இயலாத நிலையில் பல நிறுவனங்கள் இருக்கின்றன. இந்தத் தணிக்கைக் கட்டணத்தை விட அதிகமாகக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் நிதர்சனமாக சிந்திக்கும்போது அதிகமாகக் கொடுக்க வேண்டிய தேவை இல்லை என்பது என்னுடைய துணிச்சலான கருத்து.

இந்த மாதிரியான கட்டணங்கள் எவ்வளவு குறைவாக இருக்க வேண்டும் என்பதை நாம் ஒரு கணம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு பல்வேறு நிறுவனங்களில் வேலை செய்கிற ஊழியர்களுக்குப் போதுமான சம்பளம் இல்லை, ஓய்வூதியம் இல்லை, வேறு எந்தவிதமான சலுகையும் இல்லாமல் அவர்கள் தத்தளித்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் 1½ சதவிகிதம் என்று இருப்பதை 3½ சதவிகிதம் ஆக நிர்வாகச் செலவுகளுக்கு என்று உயர்த்துவது என்று சொன்னால் அது பொருத்தம் இல்லாத வாதமாக இருக்கும். அதற்கு ஒரு

1975 நவம்பர் 7] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வரம்பு வைக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதிக வருவாய் உள்ள ஒரு ஸ்லாப் முறையைக் கையாண்டால் பொருத்த மாக இருக்குமென்று கருதுகிறேன்.

எனவே, தற்போதுள்ள 1½ சதவிகிதம் என்று இருப்பது தான் பொருத்தமானதாக இருக்குமென்று கருதுகிறேன். அதிலேயும் ஒரு மேக்சிமம் போட வேண்டும். இவ்வளவு வருவாய்க்கு மேலாக—இவ்வளவு பெர்சண்டேஜ் என்ற ஒரு வரையறையையும் நிச்சயமாக இந்தச் சட்டத்தில் கொண்டு வரவேண்டும்.

வேறு சில ஷரத்துக்களிலும் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. 47-வது ஷரத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது அறங்காவலர்கள் சம்பந்தமானது. அறங்காவலர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், கூடிய மட்டும், ஆண்டவன் பால் நம்பிக்கை உடையவர்களை அதிகாரிகளாக நியமனம் பண்ணுவது தான் பொருத்தமானதாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். திருக்கோயில்களில் திரு உருவ வழி பாட்டில் நம்பிக்கை உடையவர்களை அறங்காவலர்களாக நியமித் தால் நிச்சயமாக பாமர மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வர்களாக ஆவார்கள்—பாமர மக்கள் ஒத்துழைக்கக் கூடிய நிலை ஏற்படும் என்ற கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அறங்காவலர்கள் நியமனத்தில் பல்வேறு மாற்றங்கள் தேவை என்பதையும் நான் வலியுறுத்துகிறேன். அறங்காவலர்களாக நியமிக்கப்பட்ட உடன் அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களை தனக்குக் கீழ் சிப்பந்திகளாக நியமனம் செய்யும் நிலைமையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சிப்பந்திகளை நியமிக்கும்போது 31 சதவிகிதம் பிற்பட்டவர்களையும் 18 சதவிகிதம் ஷெட்யூல்ட் காஸ்ட்டைச் சேர்ந்தவர்களையும் நியமிக்க வேண்டுமென்று வலி யுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டினில் பார்க்கும்போது, அங்கே ஒரு குறிப் பிட்ட—ஒரு மேம்பாடான இனத்தைச் சேர்ந்தவர்களையே பெரும் பான்மையாக நியமிக்கின்ற ஒரு நிலை இருந்து கொண்டு

இருக்கிறது. நான் மேலே கூறிய 31 சதவிகிதம்—18 சதவிகிதம் என்ற முறையை அங்கே கையாளுவது இல்லை. எனவே, அந்த முறை மாற்றப்பட்டு பிற்பட்டவர்களும் ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்களும் நியமிக்கப்பட வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் இதை நான் உணர்ச்சி மிக்க ஒரு விஷயமாகக் கூற விரும்புகிறேன். அங்கே ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்களும் மற்ற பொறுப்பானவர்களும் வேலை கேட்டால் கொடுப்பதில்லை என்ற நிலைமை உருவாகி இருக்கின்றது. இந்த நிலையை மாற்றி இனி வருங்காலத்திலாவது அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, தெய்வீகப் பேரவை சம்பந்தமாக 35-வது பிரிவில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவை நான் வரவேற்கிறேன். தெய்வீகப் பேரவை சீரோடும் சிறப்போடும் நடக்க வேண்டுமானுல் அந்த நிர்வாகம் நல்ல டைரக்டர்கள் கையில் இருக்க வேண்டும். நாட்டில் எப்படி நல்ல நெறிமுறைகளை பிரச்சாரம் செய்கிறுர்களோ அதே மாதிரி தெய்வீகப் பேரவையிலுள்ள எல்லோரும் நல்ல காரியங்களை நற்பணிகளை ஆற்றுபவர்களாக இருக்கவேண்டும், நற்பணிகளை ஆற்ற முற்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக இந்த தெய்வீகப் பேரவையைப் பொறுத்தவரையில் இன்னும் பல்வேறு மாற்றங்களைச் செய்தாக வேண்டும். இப்படி ஒரு பீஸ் மீலாக லெஜிஸ்லேஷன் கொண்டு வராமல் நல்ல ஒரு சட்டமாக, காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷனைக் கொண்டு வந்தால் சிறந்ததாக இருக்குமென்ற ஆலோசனையையும் அளிக்க விரும்புகிறேன். இதிலே கூறப்பட்டிருக்கிற கட்டணத்தை எக்காரணத்தைக் கொண்டும் அதிகமாக்கக் கூடாது என்ற கருத்தை இன்னொரு முறை வலியுறுத்திக் கூறி அமைகின்றேன்.

திரு. எ. ஆர். சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மசோதா மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1975 நவம்பர் 7] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

இந்த மசோதா பல்லாண்டுகளாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒன்று. இந்த டிரஸ்டுகள் சரியாக செயல்பட வில்லை. அவை சரியாக நல்ல நிர்வாகத்தின் கீழ் செயல்பட வேண்டும் என்பது தான் சர்க்காரின் எண்ணம். அதை இந்த செக்ஷன் 3-ஐக் கொண்டு வந்து நல்ல முறையில் செய்திருக் கிறார்கள். அதே மாதிரி செக்ஷன் 45-ஐப் போட்டு ஈ.ஓ. நியமனம் செய்யும் விஷயத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள் —அதை வரவேற்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட 'மட்' போன்ற ஸ்பெசிஃபிக் எண்டோ மெண்டுகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதுதான் கொஞ்சம் வருந்தக்கூடிய ஒன்று. மடங்கள் தான் நமது நாட்டில் நடக்கக்கூடிய நாச காரியங்களுக்கெல்லாம் முதலிடமாக இருக்கிறது. அதற்கு என் விதிவிலக்குக் கொடுக்கிறோம் என்று தெரியவில்லை. மடங்கள் இன்றைக்கு நாம் எடுக்கக் கூடிய பல நல்ல காரியங்களுக்கெல்லாம் இடையூறுகள் விளைவித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, அவற்றிற்கு விதிவிலக்கு கொடுப்பது சரியல்ல என்பது என் கருத்து.

அடுத்து, செக்ஷன் 52இல் ஈ.ஓ.க்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கவேண்டிய ஒன்று. டிரஸ்டுகள் நியமனம் செய்யப்பட்டவுடன் அவர்கள் செய்வதெல்லாம் தனக்கு வேண்டியவர்களை சிப்பந்திகளாகப் போட்டுக்கொள்வது தான். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். ஆடிட் சம்பந்தப் பட்ட வரை 1-லிருந்து 3½ சதவிகிதம் ஆக உயர்த்தப் பட்டிருப்பதை வரவேற்கிறேன். என்ன காரணத்தாலோ, சில கோயில்கள் 10, 15 ஆண்டுகள் ஆடிட் செய்யப்படாமல் இருக் கின்றன. அதை அவர்களுக்குக் கொடுக்கும்போது சிப்பந்தி களுக்குப் பணச் செலவு "ஜாயிண்ட் பண்டி"-ல் இருந்து கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்று தெரிகிறது. அதனாலே தான் "சிலாப் சிஸ்டம்" 1½-யில் இருந்து 3 ஆக இருக்கிறது. ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இந்த "ஆடிட் பீஸ்" இல்லை. இப்பொழுது இதில் மாற்றம் செய்தால் நன்றாக வேலை செய்யக் கூடியதற்கும் இந்த செக்ஷன் 92 கொண்டுவந்து விடும். 1½—3 என்று இருக்கிற "சிலாப் சிஸ்டத்தை" நான்

வரவேற்கிறேன். அதனால் ஏற்படக்கூடிய செலவை விட வரவு அதிகமாக இருக்கும். இன்றைக்கு அதைச் சரியாகச் செய்யாத தினால் பல்வேறு தவறுகள் நடந்து, வசூல் செய்வதற்குக் கால தாமதம் ஏற்பட்டு, காலாவதிகூட ஆகிவிட்டது. ஆகையால், இதை வரவேற்கிறேன்.

நம்முடைய அரசு மிகவும் சிரமப்பட்டு 14 ஆவது செக்ஷனைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமைகளை மாற்றுவதற்கு ஈ.ஓ.க்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டும் போதாது. "பாலோ அப் ஆக்ஷன்" எடுத்துக் கொள்ள வேண்டும். இது வரவேற்கக் கூடிய மசோதா, இது மிகவும் பயன்படக்கூடிய மசோதா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

முக்கியமான திருத்தம் "ஹெரிடிடரி டிரஸ்டிக்கள்" பற்றியது. இத்தனை ஆண்டுக் காலமாக ஹெரிடிடரி டிரஸ்டிகள் இருந்து வருகின்ற நிலைமை இருந்தது. முன்பெல்லாம் ஹெரிடிடரி டிரஸ்டிகள் என்பவர்களை நீக்குவது என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுத்துத்தான் வேறு டிரஸ்டிகளை நியமிக்க முடியும். அதுவும் நோட்டீஸ் கொடுத்துத்தான் நியமிக்க வேண்டும். இந்தப் புதிய திருத்தத்தின் நோக்கம் இப்படி நோட்டீஸ் கொடுக்க வேண்டியதில்லை. அதற்கு அவசியமும் இல்லை என்பதாகும். யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்பது வரவேற்கத் தக்கதாகும்.

ஹெரிடிடரி டிரஸ்டிகளைப்பற்றிச் சர்க்காரின் கொள்கை என்ன வென்றால் அரசியல் சட்டத்தின் 19-வது ஷரத்தின்படி சொத்து உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தச் சொத்து உரிமை வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினால், அந்த அடிப்படை உரிமையை வைத்துக்கொண்டு இந்த உரிமையை வலியுறுத்து கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் எந்தச் சமுதாய மாற்றத்தையும் செய்ய முடியாது என்கிறார்கள். இந்த அரசியல் சட்டப் பாதுகாப்பு என்பது அமெரிக்க தேசத்தில்தான்

இருக்கிறது. அந்த அரசியல் சட்டத்தைப் பார்த்துக் காப்பி யடித்ததினுல்தான் இந்தச் சொத்து உரிமை என்பது இங்கே வந்தது.

திருப்பனந்தாள் மடம், அது மட்டுமல்ல ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலுக்கு இராமநாதபுரம் ராஜா டிரஸ்டி. ஆடிக்காற்றிலே அம்மிக் குழவியே பறந்து விட்ட பிறகு, ராஜாக்களையெல்லாம் ஒழித்து விட்ட பிறகு, ராஜா என்ன டிரஸ்டி? அவரைப் போட வேண்டிய அவசியம் என்ன? திருப் பனந்தாள் மடம் எதற்கு? காசிக்குப் போகிறவர்கள் திரும்பி வரமாட்டோம் என்று தங்கள் சொத்துக்களை அங்கே ஒப்படைத்து விட்டுப் போவார்கள். திரும்பி வந்த பிறகு வாங்கிக் கொள்வார்கள். அங்கே எந்தவிதமான மதப் பிரச் சாரமும் கிடையாது. இந்த மாதிரிப் பலவற்றைச் சொல்ல முடியும்.

தஞ்சாவூரிலே வேதபாடசாலையிலே 5 பேர் வேதம் படிக் கிருர்கள். அதற்கு 255 ஏக்கரா. ரிலிஜியஸ் பர்ப்பஸ் இருந்தாலும் சரியான கண்காணிப்பு இல்லாவிட்டால் பாழ்பட்டு விடும். வட இந்தியாவிலே கிருஷ்ணனுக்கு ராதை மனைவியா என்பதைப்பற்றிக் கோர்ட்டிற்குப் போனர்கள். ராதை கிருஷ்ணனின் மனைவி இல்லை என்று தீர்ப்பு வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் இந்த மசோதா விற்குப் புறம்பான விஷயங்கள். இவைகளைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிடுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கிருஷ்ணன் படத்திற்கு திருவாரூரிலே 100 ஏக்கரா இருக்கிறது என்று குறிப்பிட்டதால் இதுமாதிரிப் பல விஷயங்கள் இருக்கின்றன என்பதால் இதைக் குறிப்பிடுகிறேன்.

[திரு. என். கே. பழனிசாமி] [1975 நவம்பர் 7
(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

இந்த முறையிலே இருக்கிறது சொத்து உரிமை. இந்தச் சமயத்திலே பேசப்படுகிறது கோலக்நாத் விவகாரத் தீர்ப்பு முழுவதுமாகப் பரிசிலிக்கப்பட வேண்டும் என்று எல்லாம். 16-ம் தேதி சுப்ரீம் கோர்ட்டிலே ஜட்ஜ்மெண்ட் கொடுக்க இருக்கிறார்கள். இதை எல்லாம் மாற்றி அமைப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் மாற்று கிறார்களோ இல்லையோ இங்கே நாம் எப்படிச் சொல்ல முடியும்?

திரு. என். கே. பழனிசாமி: சர்க்கார் இந்த டிரஸ்டிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் உடனே கோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். நிர்வாகத்தையும் 'சரியாகச் செய்ய முடியவில்லை'. சர்க்காருக்குச் சேர்ந்த சொத்து, கோவிலுக்குச் சேர்ந்த சொத்து என்று பார்த்து "பொசெஷன்" எடுக்கவேண்டும். இன்னும் இந்த கபாலி கோவில்—டிரஸ்டி ஐயா முத்து, டி. வி. அந்தோணி செட்டியார். கந்தசாமி கோவில் சொத்து நிர்வாகத்திலே ஊழல் நடக்கிறது. அதிகமான ஊழல் நடக்கிறது. 200 ரூபாய் வாடகை என்று இருக்கும், சரியாகக் கணக்கு இருக்காது. 1,000 ரூபாய் வாங்குவது. இரண்டாயிரம் ரூபாய் பகடியாக வாங்குவது. இதற்குக் காரணம் ரென்ட் கன்ட்ரோல் ஆக்டிலிருந்து விதிவிலக்குக் கொடுத்திருப்பது தான்.

கோவில் சொத்துக்கள் சரியாக நிர்வகிக்கப்படாமல் விரயம் செய்யப்படுகிறது. இதற்கென்று ஒரு போர்டு போட்டால் அது பொதுமக்களிடமிருந்து வருகிற புகார்களை விசாரித்துக் கமிஷனருக்கு அனுப்பி இன்னின்ன வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும், கூறப்பட்டுள்ள புகார்கள் இன்னின்ன வகையிலே வாஸ்தவம் என்று சொல்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். டிரஸ்டிகளைப் போடுவதில் யாரை டிரஸ்டிகளாகப் போடவேண்டும் என்று சர்க்கார் அதிகாரிகள் கூறுகிறார்கள். நல்ல காங்கிரஸ் காரர்களைப் போடலாம். கட்சி சார்பற்றவர்களைப் போடலாம். ஊரிலே நல்ல டிரஸ்டியை நீக்கி கட்சிக்காரரைப் போடுவதன்

மூலம் ஊர் இரண்டாகி விடும். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஹரிஜனங்களை டிரஸ்டிகளாகப் போடுவதிலே பார்த்துப் போட வேண்டும்.

* * * *

* * * *

* * * *

திரு. என். கே. பழனிசாமி: பேசுவதற்காக (எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசியது மொத்தமும் "எக்ஸ்பன்ஞ்" ஆகப்போகிறது. நீங்கள் விளக்கம் கொடுக்கவேண்டாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் * பற்றிக் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அவர்கள் கூறிய அந்தக் கருத்துக்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: ஹரிஜனங்களைப் பற்றித் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. ஆடு வெட்டுகிற கோவில்களும் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சட்டப்படி இப்போது ஆடு வெட்டுவது, மாடு வெட்டுவது ஆகியவை தடை செய்யப்பட்டிருக்கின்றன ஆகவே, இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 11.00)

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கிற திருத்த மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

இது வரவேற்கக்கூடிய திருத்தமாகும். பாம்பரை தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் செய்துகொண்டு வந்த தர்பாருக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

இதில் மடாதிபதிகளை ஏன் விட்டுவிட்டார்கள் என்று புரியவில்லை. மடாதிபதிகளைப்பற்றி நன்கு உணர்ந்தவர்கள்தான் இந்த நிர்வாகத்தில் இருக்கிறார்கள். மடாதிபதிகளின் நடவடிக்கைகளை இன்றையதினம் நான் சொல்லித்தான் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்தத் திருத்தச் சட்டத்தில் அவர்களை விட்டுவிட்டார்கள் என்றாலும் நாளடைவிலாவது மடங்களையும் ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்றைக்கு அவர்கள் எப்படிச் செலவு செய்தாலும் கேட்பதற்கு வழியின்றி இருக்கிறோம். அங்கேயும் ஒரு எக்சிக்யூடிவ் ஆபீசரைப் போட்டு நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு வழிவகை செய்தால்தான் பொருத்தமாக இருக்கும். அப்படி ஒரு ஏற்பாட்டை இப்போது இல்லையென்று சொன்னாலும், பின்னாலாவது கொண்டுவரவேண்டுமென்ற எனது ஆலோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** துணைச் சபாநாயகர் அவர்களே, இந்து அறநிலைய மசோதாவிற்குப் பல முக்கியமான திருத்தங்களைக் கொண்டுவரும் பொருட்டு, இன்றைக்கு இந்த மசோதாவைச் சட்டசபையின் முன்னால் வைத்திருக்கிறார்கள்.

1959-இல் இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதாவைக் கொண்டுவந்த போதே எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்துதான் கொண்டுவந்தார்கள். ஆனால் இன்றைக்கு முக்கியமான பல

1975 நவம்பர் 7] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அதிகாரங்களை அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிற அடிப்படையில் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதனுல் நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்னுல் கூட்டுறவு இலாக்காப்பற்றி பேசிய மாதிரி இன்றைக்கு அறநிலையத் துறையை எடுத்துக்கொண்டால் ஆளுங் கட்சிக்காரர்களே தர்மகர்த்தாக்களாகப் போடப்பட்டு வருகிருர்கள். இன்றைக்கு அறநிலையங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகக் கிளை ஸ்தாபனங்களாக ஆகிவிட்டன என்பது ஊருக்குத் தெரிந்த உண்மையாகும். ஒரு காலத்தில் ஸ்ரீரங்கநாதனையும், தில்லை நடராஜனையும் பீரங்கி வைத்துப் பிளப்பேன் என்று சொன்னவர்கள் இன்றையதினம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர்கள் பதவிக்குப் போட்டிபோட்டுக்கொண்டு முன்நிற்பதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிருேம். இவர்கள் அறங்காவலர்களைப் பக்தியின் அடிப்படையில் போடுகிருர்களா என்ருல். . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அம்மையார் அவர்கள் கருமாரியம்மன் கோவிலுக்கு அறங்காவலராக இருக்கிருர்கள் என்று கேள்விப்படுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கங்காதீசுவரர் கோவிலுக்கா ?

திருமதி த. ந. அனந்தநாயகி: எந்தக் கோவிலுக்காவது இருந்திருப்பேன். இல்லையென்று சொல்லவில்லை. நீங்கள் இன்றைக்கு அதைக் கட்சி ஸ்தாபனமாக மாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். பல பேர்கள் இன்றைக்கு இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பதே பத்தாம்பசலி என்று நினைக்கிறவர்கள் இருக்கிருர்கள். பக்தியாவது, சாமியாவது என்று சொல்லிக் கொண்டிருந்த இப்படிப்பட்டவர்களை எல்லாம் அறங்காவலர்களாகப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதைக்காட்டிலும் இன்றைக்கு இன்னும் அதிகமான அதிகாரங்களை எடுத்துக்கொண்டு போவதற்குத் திருத்தங்கள் கொண்டுவந்திருப்பதன் காரணமாகத்

தான் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. ஜெயின் அறநிலையங்களுக்குக்கூட விஸ்தரிக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள்.

முஸ்லிம்களுடைய அறநிலையங்களை வக்ஃப் போர்டு நிர்வகித்து வருகிறது. கிறிஸ்துவர்களுடைய அறநிலையங்களை அவர்களே நிர்வகித்து வருகிறார்கள். இந்து அறநிலையங்கள் என்று வரும்போது எல்லாவற்றையும் நாங்களேதான் எடுத்துக்கொள்வோம் என்று சொல்கிறீர்களே, அறநிலையங்கள் என்றால் எல்லாம் அறநிலையங்கள்தான், முஸ்லிம்களுடைய அறநிலையங்களையும், கிறிஸ்துவர்களுடைய அறநிலையங்களையும் எடுத்துக்கொள்ள இதுபோன்றே மசோதா கொண்டுவாருங்களேன். முன்பு மிஸ்மானேஜ்மெண்டு இருந்தால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று இருந்தது. இப்போது மிஸ்மானேஜ்மெண்டு இருந்தாலும், இல்லாவிட்டாலும் எடுத்துக்கொள்ளலாம் என்பது என்ன நியாயம்? இவர்கள் எடுத்துக்கொண்டுள்ள நிர்வாகத்தில் மிஸ்மானேஜ்மெண்டே இல்லையா? மிஸ்மானேஜ்மெண்டுக்கு எத்தனை உதாரணங்கள் வேண்டும்?

தனியார்கள் நடத்துகின்ற ஸ்தாபனங்கள் பல நன்றாக இருக்கின்றன. பக்தியோடு இருக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். திறம்பட நடத்திக்கொண்டு வரக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மிஸ்மானேஜ்மெண்டு என்று இல்லாவிட்டாலும் அதை எடுத்துக் கொள்வதற்கு நோட்டீஸ் கொடுக்கலாம் என்றால் நீங்கள் அவற்றை ஒழுங்காக நடத்துவீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நீங்கள் உங்கள் கட்சிக்காரர்கள் இன்னும் நான்கு பேர்களைப் போடவேண்டும் என்பதற்காகத்தான் இப்படியெல்லாம் செய்கிறீர்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அதற்குத்தான் இப்படிப்பட்ட வலையை வீசுகிறீர்கள். *(மணி அடிக்கப்பட்டது.)* Sir, one or two amendments are very important. I must speak on them.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் மசோதாவை ஒட்டிப் பேசுங்கள். பொது அரசியலில் பேசிக்கொண்டே போனால் என்ன செய்வது? அமெண்மென்டை ஒட்டிப் பேசுங்கள்.

1975 நவம்பர் 7]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am just to the point. Now the Government is going to notify all the temples.

MR. DEPUTY SPEAKER : The first portion of your speech is not relevant to the Bill at all.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is relevant. I challenge this.

MR. DEPUTY SPEAKER : Appointment of trustees is not relevant here.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் செய்கிறதுதான். யார் யாரை டிரஸ்டியாகப் போட்டிருக்கிறீர்கள் என்கிற லிஸ்டைத் தாருங்கள். நான் நிரூபிக்கிறேன். உங்கள் சரித்திரம், வரலாறு தான் எல்லோருக்கும் தெரிந்த உண்மையாக இருக்கிறதே. உங்கள் கட்சிக்காரர்களையேதான் போட்டு வருகிறீர்கள்.

திரு. கு. காமாட்சி : ஒரு கோவிலுக்கு டிரஸ்டியாக இருக்கிறவருக்கு என்ன க்வாலிபிகேஷன் இருக்கவேண்டும்? பட்டை போட்டுக்கொண்டிருக்கவேண்டும், கொட்டை கட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்றெல்லாம் விதி இருக்கிறதா?

DR. H. V. HANDE : The hon. Deputy Speaker just now said that appointment of trustees is not relevant to the Bill. May I submit, Sir, that this particular Bill and certain amendments relate to the appointment of trustees? I am making only a submission that when such a comprehensive legislation is brought, all the points have to be discussed. The lady member being a trustee hereself, is an authority to speak on that subject. Let her be given some more time to speak on this Bill.

MR. DEPUTY SPEAKER : She has already taken 7 minutes. We know that she is an authority.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I do not want anybody's recommendation. அறங்காவலர்களாக வரவேண்டுமென்றால் he must be an active member of the ruling party.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உங்கள் ஆட்சிக்காலத்தில் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் யாரையும் அறங்காவலர்களாகப் போடவில்லையா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : நூற்றுக்கு ஒன்று இரண்டு அப்படித்தான் போட்டிருப்பார்கள். இப்போது நூற்றுக்கு நூறு போடுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் அறநிலையத்துறைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது அறங்காவலர்களாக யார் யாரைப் போட வேண்டும் என்பதற்கு அவர்கள் என்ன என்ன தகுதிகளை நிர்ணயித்தார் களோ—அந்தத் தகுதிகளில் ஒன்றைக்கூட நாங்கள் மாற்ற வில்லை. அந்தத் தகுதியின் அடிப்படையில்தான் நாங்கள் நிய மித்து வருகிறோம். கட்சிக்காரர்களைப் போடக்கூடாது என்று சட்டத்தில் கிடையாது. நாங்கள் அந்த விதிகளில், புதிதாக எதையும் புகுத்தவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்தக் க்வாலிபிகேஷன்கள் எல்லாம் சட்டத்தில் இருக்கிறது. நடைமுறையில், இன்றைக்கு, இதுதான் உங்களுக்கு க்வாலிபிகேஷன்.

திரு. செ. அரங்கநாயகம் : எந்த அடிப்படையில் நியமிக்கப் படுகிறார்கள் என்பதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். இந்து மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களை அறங் காவலர்களாக நியமிக்கவேண்டும் என்பது அந்தச் சட்டத்திலுள்ள விதி. ஆனால், பகுத்தறிவில் நம்பிக்கை உடையவர்கள்தான் இதில் இருக்கவேண்டுமென்பது கழக விதிகளில் சொல்லப்பட் டிருக்கிறது. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந் தவர்களை நியமிக்கக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், அந்த விதியையும், இந்த விதியையும் பார்க்கும்போது ஒன்றுக்கொன்று முரணாக இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே அறங்காவலர்களாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சிலரை நியமித்திருக்கிறார்கள். அண்ணா அவர்களே ஏற்றுக்கொண்ட முறையை இப்போது அண்ணா தி.மு.க. வும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நான் இப்பொழுது கேட்க விரும்புவது, சட்டத்திற்குப் பொருந்தி வருகிறதா என்பதை முதலமைச்சரிடமிருந்து எதிர்பார்க்கிறேனே தவிர, இதற்கு முன்னால் எவ்வாறு இருந்தது என்பதையல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா அவர்கள் வகுத்த நெறியில் நாங்கள் இன்றைக்கு நடைபோடுகிறோம். அவ்வளவு தான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதிலேயெல்லாம் சட்டத்தைத் தான் பார்க்கவேண்டுமேதவிர, அவர்கள் வகுத்த நெறி, இவர்கள் வகுத்த நெறி என்று பார்க்க முடியாது. சட்டம் உங்களிடம் இருக்கிறது. நீங்கள் செய்கிறீர்கள். நாங்கள் சொல்லத்தான் முடியும், செய்ய முடியாது. You can dissolve the Board on its failure to perform any function. இன்றைக்கு, ஏற்கனவே இருக்கக் கூடிய அறக்குழுக்களை அமைப்பதிலே எவ்வளவு காலதாமதம்? ஒவ்வொரு கோயிலிலும் தர்மகர்த்தாக்கள் இல்லாமலேயே பல மாதங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. ஒருவேளை அவர்களுக்கு வேண்டிய ஆட்கள் கிடைக்காததால் ஃபில் அப் பண்ணாமல் வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது. வேண்டிய ஆட்கள் கிடைத்த பிறகு ஃபில் அப் பண்ணிக் கொள்ளலாம் என்று அது வரை ஃபில் அப் பண்ணாமல் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் கலைத்து விடுகிறார்கள். 5 வருஷம்தானே போர்டு, இருந்துவிட்டுப் போகட்டுமே. பிடிக்கவில்லையென்றால் ஐந்தாவது வருஷம் வேறு ஆளைப் போடப் போகிறீர்கள். (குறுக்கீடு.) 3 வருஷங்களா?

If you want you reappoint him and if you do not want, you don't reappoint him. ஆனால், 3 வருஷத்திற்குள்ளே கலைக்கக்கூடிய அதிகாரம் எதற்கு? டிஸ்குவாலிஃபை ஆனால் தன்னாலே கலைக்கப்படலாம். டிசொலூஷன் ஆஃப் போர்ட் அதிகாரத்தைக்கூட கையிலே வைத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்றைக்கு 8 மசோதாக்களிருக்கின்றன. எத்தனை மசோதாக்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தாங்கள்

அறிவித்து விடுவீர்களானால் மற்ற மசோதாக்களிலே பேசஇருக்கக் கூடிய அமைச்சர்கள் வேறு பணியிலே ஈடுபடலாம். இப்பொழுதே சொல்லிவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா மசோதாக் களும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றுதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எல்லா மசோதாக்களையும் இன்று முடிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். திருமதி அனந்தநாயகி, நீங்கள் இன்னும் 1 நிமிஷத்திலே முடியுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 1 நிமிஷத்திலே முடிக்க முடி யாது. எல்லா மசோதாக்களையும் வரிசையாகக் கொண்டு வாருங்கள், நாங்கள் வேண்டுமானால் பேசாமல் கையைத் தூக்கி விடுகிறோம். இப்படி 1 நிமிஷத்தில் முடியுங்களென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்துழைப்புத் தாருங்கள் என்றுதான் கேட்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்தபடிதான் நடக்கிறது. அதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதெல்லாம் இம்பார்ட்டன்ட். அன்இம்பார்ட்டன்ட் பில்களையெல்லாம் வேகமாக பாஸ் செய்யுங் களேன். இதில் பல பிரிவுகளிருக்கின்றன, பேசவேண்டாமா ? நேற்றையதினம் இம்பார்ட்டன்ட் பில்லை விவாதித்துவிட்டு மற்ற வற்றையெல்லாம் வேகமாக பாஸ் செய்யவில்லையா ? எல்லா வற்றையுமா விரிவாக விவாதிக்கப் போகிறோம் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான், பில்களிலெல்லாம் அதிக நேரம் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. இன்றைக் கிருக்கிற 8 பில்களில் எத்தனை பில்களை எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று முடிவு செய்தால், மற்ற அமைச்சர்கள் வேறு பணிகளைப் பார்க்கலாம். தொடர்புடைய அமைச்சர்கள் இதைப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி அனந்த நாயகி, நீங்கள் ஏற்கனவே 12 நிமிஷம் எடுத்துக் கொண்டிருக் கிறீர்கள். இன்னும் 1 நிமிஷத்திலே முடித்து விடுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 8 பில் இருக்கிறது என்று கூறி இருக்கிறீர்கள். 4 பில்லாவது இன்றைக்கு முடிப்பதற்குப் பார்ப் போம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 4 பில்களை இன்று முடிப்பது என்றால், மீதி 4 பில்களை, அடுத்த நாள் நமக்கில்லாத காரணத்தால், அடுத்த செஷனுக்குக் கொண்டு போகலாம். 4 பில் களோடு இன்று முடித்து விடலாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அடுத்த நாள் என்று சொன்னால் நெக்ஸ்ட் அஃபிஷியல் டே. நெக்ஸ்ட் அஃபிஷியல் டே திங்கட் கிழமை. அன்று எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 12-ந் தேதியோடு நம் முடைய அவை நிகழ்ச்சிகளை முடித்துவிடுவதாக ஆய்வுக் குழு விலே முடிவெடுத்திருக்கிறோம். எலெக்ட்ரிசிட்டி போர்ட் பற்றி 10, 11, 12 தேதிகளில் விவாதிக்கவிருக்கிறோம். ஆகவே, 4 பில் களை அடுத்தக் கூட்டத் தொடரில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். பில்களையெல்லாம் அடுத்த செஷனில் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி அனந்த நாயகி, நீங்கள் 1 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இன்னும் சில செக்ஷன்கள் இருக் கின்றன. பேசித்தானாகவேண்டும். 1 நிமிஷத்தில் முடிக்க முடியாது.

அடுத்து ஆடிட் பீஸ். கோயிலிலிருந்து வருகின்ற வருமானம் வழிபாடு செய்வதற்கே போதவில்லை. சிப்பந்திகளுக்கு ஒழுங் காகப் பணம் கொடுப்பது கிடையாது. குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. சிப்பந்திகள் சம்பளத்தைக் கேட்டால் ரொம்ப வெட்கமாக இருக்கும். ஆனால், இவர்கள் ஆடிட் ஃபீஸ் 1½ சதவிகிதம் போதாது, 3½ சதவிகிதம் கொடுங்கள் என்று திருத்தம் கொண்டுவருகிறார்கள். பெரிய பெரிய கம்பெனிகளிலே யெல்லாம் 1½ சதவிகிதம்தான். கோயிலிலே எதற்கு 3½ சத விகிதம்? கோயில்களுக்குச் சொத்தை எதற்குக் கொடுத்தார்கள்?

இந்து சமயத்தைப் பரப்புவதற்கும், கோயில் வழிபாட்டை நடத்துவதற்கும்தான் சொத்துக் கொடுத்தார்கள். அதற்குப் பயன்படாமல், அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் ஆடிட் ஃபீஸ் கொடுக்கவும்

* * * *

செலவழிக்கப்படுகிறது.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்கள்

* * * *

என்று சொன்னதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். அம்மையார் அவர்களுடைய நேரம் முடிந்து விட்டது. ஆகவே, அடுத்த உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்த அறநிலைய மசோதாவை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். சில மத ஸ்தாபனங்களையும், ஜைனர்கள் உள்ள ஸ்தாபனங்களையும் இந்தச் சட்டத்தின்கீழே கொண்டுவருவதன்மூலமாக, அந்த ஸ்தாபனங்களையும் திறமையாக நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொள்கிற முயற்சி இது என்றுதான் நான் இங்கே எடுத்துச்சொல்ல முற்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், பழனிசாமி அவர்களும் மற்றுமுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் அறங்காவலர் நியமனங்களிலே கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொன்னவை அத்தனையும் நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொன்னவைதான்.

இந்து மதக் கோயில்களிலே டிரஸ்டிகளாக வரக்கூடியவர்கள் இந்து மதத்திலே நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும். இந்து மதத்திலே பக்தி உடையவர்களாக இருந்தால் சாலச் சிறந்தது என்றுதான் நான் அன்றே சொன்னேன். இந்து மதத்

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

1975 நவம்பர் 7] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

திலே பக்தி உடையவர்களாக இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் இந்து மதத்திலே நம்பிக்கையுடையவர்களாக இருக்க வேண்டும். இந்துக் கோயில்களுக்கு டிரஸ்டிகளாக இந்துக்களைத் தான் போடமுடியும். கிறிஸ்தவர்களைப் போட முடியாது. முஸ்லிம்களைப் போட முடியாது. இந்து மதத்திலே உள்ளவர்களையே டிரஸ்டிகளாகப் போட வேண்டுமென்றுதான் சட்டம் சொல்கிறது. ஆகவே, அந்த முறையையும் நான் வரவேற்கிறேன்.

அடுத்து, சில திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தத்திலே அர்ச்சகர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு கூட ' Propagation of Hindu religions, Philosophy and sastras by the Tamil Nadu Deivika Peravai ' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இதை நான் பரிபூரணமாக வரவேற்கிறேன். இன்றையதினம் இருக்கக்கூடிய நிலைமை, பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் பிற மதம் என்று சொன்னால், குறிப்பாகப் பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் பழங்குடி மக்கள், அரிசனங்கள், மற்றவர்கள் இருக்கிற பகுதிகளுக்கெல்லாம் சென்று மத மாற்றம் செய்கிறார்கள். தமிழகத்திலே மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் பொருளாதாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடம் கட்டுகிறோம், மருத்துவ மனை வைக்கிறோம், நீங்கள் எல்லோரும் எங்கள் மதத்திலே சேருங்கள் என்று சொல்கிறார்கள். நான் இஸ்லாமிய மதத்தைக் குறிப்பிடவில்லை. வேறு மதத்துக்காரர்கள் தினமும் இம்மாதிரிச் செய்கிறார்கள். இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மடாதிபதிகள், இதிலே கண்ணும் கருத்துமாக இல்லாத காரணத்தாலேதான் அங்கங்கு இருக்கக்கூடிய இந்து மதத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வேறு மதத்திற்கு மாறிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, மதம் மாறுவதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கத்தையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல சட்டத் திருத்தங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை மிக்கப் பணிவோடு வரவேற்கிறேன். டிரஸ்டிகளாக நியமிக்கப்படுபவர்கள் நடத்தைக் கோளாறு காரணமாக அவர்கள் சேர்ந்துள்ள

இடத்திற்கு loss of prestige to the religious institution concerned 'இழுக்கு ஏற்படுத்தினால்' என்று அதையும் சேர்த்திருப்பது மிக மிக வரவேற்கத்தக்கதாகும். இப்படிச் செய்வதன் மூலமாக டிரஸ்டிகளாக வரக்கூடியவர்கள் பொறுப்பையுணர்ந்து பொறுப்பான முறையிலே செயலாற்றுவதற்கு இந்தச் சட்டம் உறுதுணையாக இருக்கும் என்றும் நான் சொல்ல விரும்புகிறேன். ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் ஏன் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள்? ஜைன மதம் இந்து மதத்திற்குப் புறம்பானது அல்ல. சாக்த மதம், பௌத்த மதம், ஜைன மதம் சீக்கிய மதம் ஆகியவைகளெல்லாம் இந்து மதத்திலிருந்துதான் தோன்றியவை. ஆலமரத்திலிருந்து கிளைகள் கிளம்புவதைப் போல சீக்கிய மதமும், ஜைன மதமும், பௌத்த மதமும் இந்து மதத்திலிருந்து ஏற்பட்ட சில கிளைகள்தான். எனவே விசாலமான இந்து மதத்திலே இந்த மற்றத் துறைகளையும் சேர்ப்பதிலே நியாயம் இருக்கிறது என்று கூறுகிறேனேதவிர வேறொன்றுமில்லை. ஜைன மதத்தையும், பௌத்த மதத்தையும் சீக்கிய மதத்தையும், சாக்த மதத்தையும் வேறு மதங்கள் என்று கொள்ளத் தேவையில்லை, அதிலே பொருத்தம் இருக்கிறது என்பதை அம்மையார் அவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன்.

அரிஜனங்களை டிரஸ்டிகளாகப் போடுகிறோம் என்று நாம் சட்டத்திலே கூறி அதற்கான விதிமுறைகளைச் செய்திருக்கிறோம். அதிலேயிருக்கின்ற சிறு கோளாறை மட்டும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிளாஸ் 9-இல் அரிசனங்களை

'if a qualified person of the Scheduled Castes or Scheduled Tribes is available. . . . '

அப்ளிகேஷன் போடும் முறைப்படி என்றால், விளம்பரம் சரியாகச் செய்யப்படுவதில்லை. அங்கேயுள்ள இன்ஸ்பெக்டர், மணியக்காரரிடத்திலேயோ கணக்குப்பிள்ளையிடத்திலேயோ 'டாம்டாம்' போட்டதாக கையெழுத்து வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். அது அரிசனங்களுக்குத் தெரியாது, அதனால் அவர்கள் அப்ளிகேஷன் போட மாட்டார்கள். இதனால் அரிசனங்கள் ஒவ்வொரு கோயிலிலும் டிரஸ்டியாக இருக்க

1975 நவம்பர் 7] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

வேண்டுமென்ற திட்டம் நடைமுறைக்கு வர முடியாமல் இருக்கிறது. இது பப்ளிகேஷன் செய்வதில் உள்ள கோளாறு. சட்டத்தில் இன்னொரு கோளாறு என்ன இருக்கிறது என்றால் 'usage of the religious institution concerned does not prohibit such filling up......'

அரிசனங்கள் கோயிலிலே டிரஸ்டியாக வருவது அந்த ஊரிலே பழக்கம் இல்லை என்று. (மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான விஷயம். அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும். நம்முடைய சட்டத்தையும் திருத்த வேண்டும், அமெண்ட்மெண்ட் கொண்டு வர வேண்டும். அதற்காகத் தான் சொல்கிறேன். அரிசனங்கள் இங்கே வருவது சம்பிரதாயம் இல்லை, முறை இல்லை என்று அந்த ஊரிலே உள்ள பெரும்பாலோர் சொல்லிவிட்டால் அரிசனங்கள் மனுப் போட்டாலும் அந்த டிரஸ்டியாகப் போடக்கூடிய வாய்ப்பு இந்தச் சட்டத்திலே இல்லை, இந்த ப்ரொவிஷன் இருப்பதை அபிஷியல் அமெண்ட்மெண்ட் கொண்டு வந்தாவது நீக்க வேண்டும். இதை வைத்துக்கொண்டிருந்தால் ஜாதி இந்துக்களை, அரிசனங்களை கோயிலுக்கு வரமுடியாத நிலைமை ஏற்படும், ஆயிரம் காந்தியடிகள் தோன்றினாலும் அரிசனங்களைக் கோயிலுக்குக் கொண்டுவர முடியாத நிலை ஏற்படும்.

தெய்வீகப் பேரவையைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது குறை, அது குறை என்று சொல்ல விரும்பவில்லை. குறைகளைச் சொல்வது சுலபம். ஆனால் செயல்படுத்துவதுதான் கடினம். அது செயல்படக் கூடிய விதத்தில் குறைபாடு இருக்கிறது என்றால் அவர்களிடத்திலே இதை எடுத்துக் காட்ட வேண்டும். அப்படிச் சொல்லி அதைத் திருத்துவதால் மக்களிடத்திலே பக்தியை வளர்க்க முடியும். இந்துவாக எல்லோரும் இருப்பதற்கும், இந்து என்ற எண்ணம் வருவதற்கும் நாம் பாடுபட்டுச் சொல்ல வேண்டும். இதைத் தெய்வீகப் பேரவை ஒன்று மட்டும் செய்ய வேண்டுமென்று அவசியமில்லை. சில நகரங்களில் சத்சங்கங்கள் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் மதத்தையும், ஆத்திகத்தையும் பரப்பக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இந்து சமய அறநிலைய கமிஷனர் வசம்

இருக்கின்ற பணத்தைக் கொண்டு அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தேவையானதைக் கொடுத்து, ஆயிரம் ரூபாயோ இரண்டு ஆயிரம் ரூபாயோ கொடுப்பதன் மூலம் இந்து மதத்தைப் பரப்பக்கூடிய காரியங்களைச் செய்யலாம். இது ஒன்றோடு மட்டும் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று அவசியமில்லை.

இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள், கோயில்களிலே பலி யிடுவது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று. அதைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டு மென்றால், கோயம்புத்தூர் ஜில்லாவிலே. . .

திரு. சி. ஆறுமுகம்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

THIRU V. KRISHNAMOORTHY (Nellikuppam): Sir, he is making disorder, as he normally does.

திரு. சி. ஆறுமுகம்: கனம் உறுப்பினரவர்கள் பக்திமானா என அறிய விரும்புகிறேன்.

திரு. க. மு. இராசகோபால்: தலைவரவர்களே, இந்து மதத்திலிருந்துதான் எல்லா மதங்களும் உருவாயின என்று சொல்கிறார்கள். அவர்கள் எந்த நூலில் அப்படிப் படித்தார்கள்? எப்பொழுது அப்படி ஆரம்பித்தது என்ற காலவரம்பைச் சொன்னால் எல்லோருக்கும் நல்லது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: திரு. ஆறுமுகம் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், பக்தி உடையவர்கள் பப்ளிஷ் பண்ணி கொள்ள மாட்டார்கள். பக்தி இருக்கிறது, பக்தி இருக்கிறது என்று பப்ளிஷ் செய்துகொள்பவர்கள் உண்மையான பக்தர்களாக இருக்க மாட்டார்கள். வாதவூரடிகளே, 'ஞானம், பக்தி இரண்டு மில் இத்தனியேனுக்கு' என்று அடக்கத்துடன் சொல்லியிருக் கிறார்கள். பக்தியுடையவர்கள் எனக்கு பக்தி இருக்கிறது, பக்தி இருக்கிறது என்று, நம்முடைய ஆறுமுகம் செய்வதைப்போல பண்ண மாட்டார்கள். அதைக் கண்டுபிடிப்பது அவர்களைப்போல இருப்பவர்களுக்குக் கஷ்டம், அவர்களுக்கு விளங்க வைப்பது கஷ்டம்.

1975 நவம்பர் 7] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானியம்மன் கோயில் இருக்கிறது. அங்கே கோழிகளை வெட்டி வெட்டிப் போட்டு விடுவார்கள். அங்கே ஐயங்கார் ஒருவர் எக்சிகியூட்டிவ் ஆபீசராக இருந்தார். அவருக்கு வேலை என்னவென்றால் வெட்டப்படும் கோழிகளை ஏலத்தில் விட்டு அந்தப் பணத்தைக் கோயில் பணத்தோடு சேர்க்க வேண்டும். அவர் எனக்கு வேண்டியவர்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, அந்தமாதிரி நிகழ்ச்சி நடந்ததாகப் பார்க்கவில்லையே.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் எங்கே பவானி அம்மன் கோயில் இருக்கிறது? எங்கே கோழி வெட்டப்படுகிறது?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, எக்சிகியூட்டிவ் ஆபிசர்மேல் சார்ஜ் ப்ரேம் பண்ணியது தெரியும், வேறு ஒரு ஊருக்கு அவரைப் போட்டுவிட்டார்கள். அந்த விவரங்களை நான் சொல்ல விரும்பவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: உறுப்பினர் பேசும்பொழுது ஐயங்கார் ஜாதியைக் குறிப்பிட்டு அவர்கள் செய்யாத காரியத்தைச் செய்து கொண்டிருப்பதாகக் கூறினார்கள். குறிப்பிட்ட ஜாதியைப்பற்றி இங்கே கொண்டு வந்து அவமானப்படுத்தக் கூடிய முறையில் பேசுவது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது கோவைமாவட்டத்தில் பவானியம்மன் கோயில் என்று சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் எந்த ஊரில் பவானியம்மன் கோயில் இருக்கிறது? எந்த ஊரிலேயும் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுவது கூடாது என்று சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. எந்தக் கோயிலிலேயாவது கோழி அல்லது ஆடுமாடுகளை உயிரோடு விடுகிறார்கள். அவைகளை ஏலத்தில் விட்டோ அல்லது எந்த முறையிலே விற்கவேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டுமே

தவிர வதைப்பது சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் எந்தக் கோயிலிலேயும் அப்படி நடைபெறுவது கிடையாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, எதிர்க்கட்சி அங்கத்தினர் பேசும்பொழுது, என்னுடைய உரிமையைக் கொண்டு பேச எழும்பொழுது, எவ்வளவு வேகமாக உட்கார வைக்க முடியுமோ அவ்வளவு வேகமாக உட்கார வைத்தீர்கள். ஆனால் உங்கள் கட்சி அங்கத்தினர் பேசும்பொழுது கருணை காட்டுகிறீர்கள். இதை எதிர்த்து நான் வெளிநடப்பு செய்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று கூறி, அவர் செய்யாத ஒரு வேலையைச் செய்ததாகக் கூறினார்கள். அது நமது சபைக் குறிப்பில் இருப்பது ஒழுங்காக இருக்காது. எனவே அதை மாற்ற ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐயங்கார் என்று தொடங்கி அதற்கு பிறகு சொன்ன கருத்துக்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பேசும்பொழுது ஐயங்கார் என்று சொன்னதற்குப் பதிலாக குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர் என்று சொல்லி, அதன் பெயரைச் சொல்லாமல் கூறினால் நல்லதாக இருக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: கோயிலிலே இதுமாதிரி நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அது பகவதி அம்மன் கோயிலா, பவானி அம்மன் கோயிலா என்று தெரியவில்லை. அதைப் பற்றி அமைச்சரிடத்திலே சொல்லி அந்த ஊரை விட்டு மாற்றினேன். எனவே, அது நடக்கக் கூடாது என்றுதான் சொல்கிறேனே தவிர வேறில்லை. ஒருவேளை என்னிடத்தில் சொன்னது கூடத் தப்பாக இருக்கலாம்.

1975 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த விஷயத்தைப் பற்றி என்னிடத்தில் கூறியதாகக் கூறுகிறார்கள். நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அப்படி என்னிடத்தில் சொல்லவில்லை. தவறு செய்பவர்களுக்கு இடங்கொடுத்து நான் மாற்றவும் இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: யாரும் தவறு செய்ததாகக் கூற வில்லை. ஆகவே, இந்தச் சட்டத்திலே. . .

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர். கனம் உறுப்பினரவர்கள் இப்படித் தவறு நடந்திருக்கிறது என்று முதலிலே சொன்னார்கள். கனம் அமைச்சரவர்கள் இல்லை என்று மறுக்கிறார்கள். இதில் எது உண்மை என்று அவை தெரிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் மரபு. ஒரு விஷயம் சொல்லப்பட்ட பிறகு, அந்த இலாக்கா அமைச்சர் மறுத்து விட்டால் அப்படி மறுத்ததைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, உறுப்பினர் சொல்வதை ஏற்றுக் கொள்வதில்லை. அந்த மரபுப்படி அவை இதை ஏற்றுக்கொள்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, வேண்டுமானால் எனக்குக் கிடைத்த தகவல் சரியாக இருந்தது என்றால் அது சம்பந்தமாக அமைச்சரிடத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

முடிக்கும் தறுவாயில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்பு கிறேன். இந்தச் சட்டத்தில் ஆடிட் பீஸ் என்பதை 3½ பர்செண்ட் என்று ஏற்றுகிறார்கள். இதனால் மட்டும் ஆடிட் ஆகிவிடுமா? எச் .ஆர். அண்ட் சி. இ.-யில் போதுமான பணம் இல்லை என்றால் இப்படி ஏற்றலாம். ஆனால் இப்படிச் செய்வதால் கோயில்கள் பாதிக்கப்படும் என்று சொல்லி இந்தக் கோயில் சம்பந்தமாகக் கொண்டு வந்த மசோதாவை நான் கூறிய கருத்திலே ஆதரித்து முழுமனதாக வரவேற்கிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்பேரில் நான் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, இந்த மசோதாவிலே சொல்லப்படாத கருத்துக்களை எடுத்துக் கொண்டு நான் விவாதிக்க விரும்பவில்லை. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மற்றவர்களைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அதற்குப் பதில் கொடுக்க வேண்டிய அவசியம் இந்த நேரத்தில் இல்லை.

பொதுவாக, மத சம்பந்தமான விவகாரங்கள் விவாதிக்கப்படும் போது மற்றவர்களின் மத எண்ணங்கள், உணர்ச்சிகள், ஆஸ்திகர்கள் கொண்டுள்ள உணர்ச்சிகளுக்கு விரோதமாகப் பேசி அவர்களுடைய உணர்ச்சிகளுக்குப் பாதகத்தை உண்டாக்கக் கூடாது என்ற கருத்தை உடையவன் நான். ஆகையால் அந்த விவகாரங்களுக்குள் போகாமல். தொகுதி இந்துப் பெருங்குடி மக்கள் கட்டளைக்கிணங்க ஒருசில கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்த மசோதாவிலே இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, எங்கெங்கு கோயில் நிர்வாகங்களிலே நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அந்தக் கோயில்களிலுள்ள நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு புதிதாக நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய அதிகாரத்தை திருத்தச் சட்டத்தின் வாயிலாக இந்து அறநிலையக் குழு பெறுகிறது. அதை நான் வரவேற்கிறேன்.

இரண்டாவதாக, இந்து ரிலிஜியஸ் என்டோமென்ட் போர்டுக்கான நிதி ஆதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்காக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எந்த நோக்கத்தோடு அவை செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கான விளக்கங்களையும் இங்கே நாம் பார்க்கிறோம். அந்த விளக்கங்களைப் பார்க்கிறபோது இந்து அறநிலையங்கள், கோயில்கள் ஆகியவற்றைச் செம்மையாக நிர்வகிக்கின்ற கடமையில் இருக்கும் இந்து ரிலிஜியஸ்

1975 நவம்பர் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்டோமென்ட் போர்டுக்குப் போகிற நிதி வசதி இருந்தால் தான் கடமையைச் செவ்வனே செய்ய முடியுமென்ற வகையில் 2½ சதவிகிதமாக இருப்பதை 3½ சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

இருந்தாலும், இப்படி நாம் சதவிகிதத்தை உயர்த்தும்போது இதிலே குறைந்த வருமானம் உள்ள கோயில்கள், அறக்கட்டளைகள் இவைகளுக்கும், அதிகமான அளவில் வருமானத்தைப் பெறுகிற கோயில்கள், அறக்கட்டளைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்த்து 'கெபாசிடி' யைப் பார்த்து இந்த முறையை அனுசரிப்பார்களேயானால் செம்மையாக இருக்கும். அதிகமான வருவாயைப் போர்டு பெற்றால் அந்த வருமானத்தை வைத்துக் கொண்டு குறைந்த வருமானம் உள்ள கோயில்களுக்குப் பங்கிட்டுத் தரும் முறையை வகுத்தால் நன்றாக இருக்கும். அதை இந்தத் துறை ஆராய வேண்டும்.

ஹெரிடடரி டிரஸ்டீஸ்—பிதுரார்ஜித அறங்காவலர்களை, நியமிக்கும்போது சில கட்டளைகளைச் செய்ய வேண்டுமென்று முன்னோர்கள் கோயிலுக்கு எழுதி வைத்துச் சென்றார்கள். கோயில்களுக்கு அந்தச் சொத்துக்கள் நிரந்தரமாக பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டது ஒன்று. இன்னொன்று டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டில் Rule against perpetuity என்ற விதி இருக்கிறது. அந்த விதியின் மாகச் சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் கஷ்டங்களைச் சந்திக்கும் வகையில் இந்தச் சட்டச் சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக நிரந்தரமாக ஒரு டிரஸ்டை ஏற்படுத்தி அதற்கு அறங்காவலர்களாக பிதுரார்ஜிதமாக நியமிக்கிறார்கள். அப்படி நியமித்தால் கூட 'அல்டிமேட் எய்ம்', கோயிலின் அப்படி நியமித்தால் கூட 'அல்டிமேட் எய்ம்', கோயிலின் நன்மைக்காக, சேரிடபிள் பர்ப்பஸ் நிறைவேற வேண்டுமென்பதற்காக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரிச் சொத்துக்கள் முழுமையும் கோயில்களுக்கே பயன்படும் முறையில் 'எஃபெக்டிவ் கண்ட்ரோல்' ஏற்பட வேண்டும்.

பழங்காலத்திலே, நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மாலை நேரத்தில் விளக்கேற்றி வைக்க அறக் கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மாலை நேரத்தில்

விளக்கேற்றி வைக்க இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் நிலம் கொடுத்திருக்கலாம். ஆனால் இந்தக் காலத்திலே அதற்கு ஐந்து ஏக்கர் நிலம் தேவையில்லை. ஆனல் வெறும் விளக்கை மட்டும் ஏற்றி வைத்து விட்டு அந்தச் சொத்து முழுவதையும் அறங்காவலர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய கொடுமையாக இருக்கிறது. கோயில்களின் பராமரிப்பு மிக மிக க்ஷீண திசையில் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட கோயில்களில் இந்த முறையை மாற்ற சட்டத்தில் வழி இருந்தால், இன்றைக்குள்ள சூழ்நிலையில் முழு வருமானமும் கோயில்களுக்குச் சேருகிற வகையில் செய்ய முடியும். பிதுரார்ஜித அறங்காவலர்கள் என்ற முறையில் சில பேர் அந்தச் சொத்துக்களையே தங்கள் பெயரில் பட்டா செய்து கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலேகூட சென்றாய சாமி கோயில் என்று இருக்கிறது. அந்தக் கோயிலுக்குரிய சொத்தைத் தனிப் பட்டவர்கள் திடீரென்று தங்கள் பெயருக்குப் பட்டா மாற்றிக் கொண்டு கோயிலுக்கு வருமானம் இல்லாமல் அது சரியாகப் பராமரிக்கப்பட முடியாத நிலைமையில் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் மிகவும் கோபம் அடைந்திருக்கும் நிலைமை இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுத்து அதைக் கோயிலுக்குத் திரும்பப்பெற வழிவகை செய்ய வேண்டும்.

கோயில் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், சீர்கேடுகளை அகற்றிடவும், சீர்கேடுகளை அகற்ற கோயில் நிர்வாகத்தை அவ்வப்போது மேற்கொள்ள ரிலிஜியஸ் என்டோமென்ட் போர்டின் வருமானத்தை அதிகரிக்கவும் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்தச் சட்டத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

திரு. முனு ஆதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறக்கட்டளைகள் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கோயில்களிலே தர்மகர்த்தாக்களை நியமிப்பதிலே தவறுகள் மட்டுமல்ல, பக்தர்களுக்குத் தொல்லை கொடுக்கும் வகையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகளைக் கொடுக்க முடியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஒன்றே குலம்

1975 நவம்பர் 7] [திரு. முனு ஆதி]

ஒருவனே தேவன்' என்று சொன்ன தத்துவத்தில் அவர் வழி வந்தவர்கள் நாம். நாம் கோயில்களின் அறங்காவலர்களாக இருப்பது நியாயமா என்பதே பெரிய கேள்வி. அந்தக் கோயில் களில் நம்பிக்கையும் பக்தியும் உள்ளவர்களை அறங்காவலர்களாக நியமித்தால் முறையாக இருக்கும். மக்கள் ஏற்றுக் கொள்ளுகிற வகையில் இருக்கும். ஆனால் அந்தக் கட்சிக்காரர்களைப் போட வேண்டுமென்றே என்னவோ கோயில்களுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் அறங்காவலர்களாக இருக்கிறார்கள். அப்படிப் போடுவது தவறு, தவறு இல்லையா என்பது ஒருபுறம் இருந்தாலும் அதனால் ஏற்படுகிற விளைவு பெரிய ஆபத்தாக முடிகிறது.

என்னுடைய தொகுதியில் ஆளவந்தார் டிரஸ்ட் என்று ஒன்று இருக்கிறது. அது இப்போது திவாலாகியிருக்கிறது. அதற்கு ஆயிரக்கணக்கான ரூபாயை வைத்து விட்டுப் போனார்கள். நம்முடைய ஆட்கள் அங்கே போய் உட்கார்ந்து அதன் காரணமாக அந்த ஆளவந்தார் டிரஸ்டுக்கு வருமானம் இருக்குமா அல்லது அதை முடித்தே விட்டார்களோ என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டு அந்த வட்டார மக்கள் வேதனை கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று திருப்போரூர் கோயிலில் நாடாளுமன்ற உறுப் பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அறங்காவலர் களாக இருக்கிறார்கள். என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? எம்.பி., எம்.எல்.ஏ என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அங்கே இருப்பவர்களை மிரட்டுகிறார்கள். மக்களுடைய நன்மைக்காகச் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, கோயில்கள், கடவுள்களை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்கள் அறங்காவலர்களாக இருந்து கொண்டு, அதுவும் எம்.பி எம்.எல்.ஏ. என்று அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவர்கள் மிரட்டுகிறார்கள். இது என்னுடைய தொகுதியில் நடக்கிறது. இதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்

மூலஸ்தானத்தில் போய் விக்கிரகத்தை ஆட்டிப் பார்க்கிறார். சிலைகள் திருட்டுப் போய்விடுகிறதே என்று விக்கிரகத்தை ஆட்டிப் பார்த்தாரா? விக்கிரகத்தை ஆட்டிக் கொண்டே அவர். . .

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். திருப்போரூர் அறங்காவலராக மடாதிபதி ஒரு சாமியார் இருந்தார். அவர் எந்த அளவுக்கு அக்கிரமங்கள் செய்திருக்கிறார் என்று அறிந்து பொதுமக்கள் அவரை ஊரை விட்டு விரட்டினார்கள். ஓடிய சாமியார் தங்க வேலையும், உண்டியையும் திருடிக் கொண்டு போனார். பொதுமக்கள் அவரைப் பஸ் ஸ்டாண்டில் பிடித்து தங்க வேலையும் உண்டியையும் கைப்பற்றினார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்தவர், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தவர் அந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு ஆகும். அவரை அறங்காவலராகப் போட்டதை அந்தப் பகுதி மக்களே ஆதரிக்கிறார்கள். அந்தக் கோவிலிலுள்ள சாமி சிலையை யாரும் ஆட்டவும் இல்லை, உருட்டவும் இல்லை.

திரு. முனு ஆதி: அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை விட்டு விட்டு வேறு எங்கோ செல்லுகிறார்கள். நான் சாமியாரைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. சாமியாரை ஓட்டியது தவறு என்று சொல்லவில்லை. எம்.எல்.ஏ.க்கள், எம்.பிக்களுக்கு இந்தப் பதவியையும் சேர்த்து ஏன் கொடுக்கிறீர்கள்? அது உங்களுடைய கொள்கைக்கு விரோதம் என்பது உங்களுக்கே புரியும்.

எவ்வளவோ பேர்கள் கட்சிக்காகப் பாடுபட்டு ஒன்றுமில்லாது இன்று உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுங்களேன். எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் இவர்களை அறங்காவலர்களாக நியமிக்கிறார்களே என்பதற்காகத்தான் சொல்கிறேன். கோவில் நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டுமென்றால் நல்லவர்களை அறங்காவலர்களாகப் போடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம்: என் அருமை நண்பர் ஆதி அவர்கள் செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மீது குற்றச்சாட்டு சாட்டிப் பேசுவது முறையல்ல என்பதால் நான் அதற்கு பதில்

அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருப்போரூரில் இருக்கிற பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களை நீங்கள்தான் அந்தக் கோவிலுக்கு அறங்காவலராக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர்கள் இணங்கியிருக்கிறார்களே அல்லாது அந்த நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் கோவிலுக்குப் போய் இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. முனு ஆதி: என் தொகுதியைப் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது, மதுராந்தகம் உறுப்பினருக்குத் தெரியுமா? நான் நல்லதைச் சொன்னால் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. முனு ஆதி அவர்கள் ஒரு உறுதி கொடுப்பார்களா—நடக்கப் போவதில்லை—ஒரு வேளை உங்கள் கட்சி ஆட்சிக்கு வருமானால் அந்தக் கட்சியில் இருக்கிற வர்கள் யாரையும் அறங்காவலர்களாகப் போடுவதில்லை என்று இப்போது உறுதி அளிப்பார்களா? அது சட்டசபை புத்தகத்தில் ஏறுமா?

திரு. முனு ஆதி: திரு. கிருஷ்ணமூர்த்தி போன்ற சிறந்த திருப்பதி பக்தர்கள் இருக்கிறார்கள், போடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆண்டுதோறும் திருப்பதிக்குப் போகிறார் அவர். வெங்கடேசப் பெருமாளைப் பார்க்காமல் இருக்கமாட்டேன் என்று போகிறார். யார் என்ன சொன்னாலும் சரி பரவாயில்லை என்று சொல்லி திருப்பதி போகிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முனு ஆதி அவர்கள் சொன்னார்கள், அண்ணா அவர்களின் கொள்கைக்கு இது புறம்பானது, ஆகவே, கட்சியில் உள்ளவர்கள் யாரையும் அறங்காவலர்களாகப் போடக்கூடாது என்று சொன்னார்கள். நீங்கள் ஒருவேளை ஆட்சிக்கு வந்தால் இந்த உறுதி மொழிப்படி நடந்துகொள்வீர்களா? அந்த உறுதியை இப்போது அளிப்பீர்களா?

திரு. கோவை செழியன்: நம் முதல் அமைச்சர் அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இம்மாதிரியான உறுதிமொழியைத் தருவீர்களா என்று கேட்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்

களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். நாங்கள்தான் ஆட்சிக்கு வரப்போகிறோம் என்பதை ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொல்லும்போது மிக ஜாக்கிரதையாகச் சொன்னேன். 'நடக்கப் போவதில்லை, அப்படி நடந்தால்' என்று சொன்னேன்.

திரு. கோவை செழியன்: நடக்கவில்லை என்றால் இந்தக் கேள்வியையே கேட்கமாட்டார்கள். நடக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது. சந்தோஷப்படுகிறேன், அதற்காக நன்றி செலுத்துகிறேன். நிச்சயமாக எங்கள் ஆட்சியில், எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலே—நாம் எல்லோரும் அண்ணாவினுடைய பாரம்பரியத்தில், பெரியாருடைய பாரம்பரியத் தில் வந்தவர்கள்—நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கோவில்களில் நம்பிக்கை இல்லாதவர்களை, நிச்சயமாகப் போடமாட்டோம். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு சிலர்—கிருஷ்ணமூர்த்தி மாதிரி இருக்கிற பக்தர்கள் யாராவது இருந்தால் அவர்களைப் போடுவோம், கோவில்களில் நம்பிக்கை இல்லாத வர்களை நிச்சயமாகப் போட மாட்டோம் என்ற உறுதிமொழியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் யார் யாரைப் போடுகிறீர்களோ அவர்கள் எல்லாம் நம்பிக்கை உள்ளவர்கள் என்று பின்னால் சாதித்துவிடுவீர்கள். இப்போது நாங்களும் நம்பிக்கை உடையவர்களைத்தான் போட்டிருக்கிறோம்.

திரு. முனு ஆதி: பொதுமக்கள் ஏற்றுக்கொள்பவர்களைப் போடவேண்டும். ஜனநாயக அடிப்படையில் அமையவேண்டும். மக்கள் விரும்புபவர்களைப் போடுங்கள். கோவிலைச் சுற்றி யிருப்பவர்கள், அந்த இடத்தின் சுற்றுப்புறங்களில் இருப்பவர்கள் விரும்புகிறவர்களைப் போடுங்கள், மக்கள் விரும்புபவர்களைப் போடுங்கள், குறைகள் ஏற்பட்டால் அவற்றைத் தவிர்க்க வேண்டும். ஒரு எம்.பி.-யைப் போட்டு, இருக்கிற பதவியோடு இதுவும் வேண்டுமா? புதிதாக இருப்பவர்களைப் போட்டால் அவர்கள் அக்கறையோடு செயல்படுவார்கள். சென்னையில் இருந்து திருப்போரூர் சென்று அந்த எம்.பி. ஜபர்தஸ்தோடு . . .

1975 நவம்பர் 7] [திரு. முனு ஆதி]

(மணியடிக்கப்பட்டது.)

முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதற்குச் சொல்கிறேன். மக்கள் மனதைப் புண்படுத்தவேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு நபருக்கு எம்.எல்.ஏ பதவி தவிர வேறு பதவி இருக்கக்கூடாது என்பது உங்கள் எண்ணம், இல்லையா? எம்.எல்.ஏ. பதவி இருந்தால் வேறு ஒரு பதவி இருக்கக்கூடாது, இருந்தால் ராஜிநாமா செய்ய வேண்டும், இல்லையா?

திரு. முனு ஆதி: நிச்சயமாக ஒரு பதவி இருந்தால் மற்றொரு பதவி தரக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா தி.மு.க. உறுப்பினராக இருக்கிற சீனிவாசன் ஒரு சட்டசபை உறுப்பினர், ஒரு யூனியன் சேர்மன். இதில் எதை ராஜிநாமா செய்யப் போகிறார்?

திரு. பெ. சீனிவாசன்: முதல் அமைச்சர் அவர்களும் முனு ஆதியும் பேசி ஒரு அரசியல் தீர்மானம் வரப்போவதில்லை. முனு ஆதி கேட்கிற கேள்விக்கு முறையாகப் பதில் சொல்லுங்கள், முதல் அமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்கிற கேள்வியை வரவேற்கிறேன். அதற்கு முன்னால் புதுக்கோட்டை தீர்மானப்படி நீங்கள் செயல்பட்டீர்களா அப்படிச் செயல் படாது எங்கள் கட்சியைப் பற்றிச் சொல்லப் போய்விட்டார்கள். உங்கள் கட்சியில் ஒரு பதவியும் இல்லாதிருப்பவர்களுக்கு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆதி ஒன்று சொன்னார், ஆதி தீர்மானிப்பதற்கு அருகதை உள்ளவர் அல்ல என்று சீனிவாசன் சொல்லி விட்டார். நன்றி.

திரு. பெ. சீனிவாசன்: முதல் அமைச்சர் அவர்கள் ரொம்பத் தாராளமாக ஒவ்வொரு வார்த்தையையும் கூட்டிக்கூட்டிப் போட்டு பேசுகிறார்கள். நாங்கள் எல்லாம் முதல் அமைச்சர் அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள்தான், முறையாகப் பயிற்சி பெற்றவர்கள் தான். பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பதவி, முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்களே போட்டி போடச் சொன்ன பதவி. போட்டி போட்டு வந்த பதவியைப் பற்றி--நம் கட்சி அடிப்படையில், ஒரு அண்டர்ஸ்டாண்டிங் — கவலையில்லை, போட்டி போட்டு வரப்பட்ட பதவிகளைப் பற்றி கவலையில்லை. ஆனால் நியமனம் பெற்று வரக்கூடாது என்பதுதான் ஒப்பந்தம். உடன்பாடு. ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் போட்டிருக்கிற பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டவர், கட்சிப் பதவிகளில் இருப்பவர்களைப் போட்டிருக்கிறீர்கள்.

திரு. முனு ஆதி: ஒரு பதவியில் இருப்பவர் இன்னொரு பதவியில் இருக்கக்கூடாது என்று சொல்கிறோம். அதாவது நாமினேஷன் பெற்று பதவியில் இருக்கிற தலைவர்கள் நிச்சயமாக எங்கள் கட்சியில் கிடையாது. பாராளுமன்ற உறுப்பினர்களைப்போடும் போது யோசித்துப்போடுங்கள். அதனால் மக்கள் பாதிக்கப்படு கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆதி சொல்கிறார் அல்லது சீனிவாசன் சொல்கிறார் என்பதற்காக இதை தொடர்ந்து செய்தால் அதனால் பக்தர்கள் மனம் புண்படும். நல்லவர்களைப் போடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இந்த இந்து சமய அறக்கட்டளைகள் திருத்த மசோதாவின் மீது நான் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸைப் பார்க்கும்போது தவருக நடக்கக்கூடிய சாரிட்டபிள் என்டோமென்ட்ஸ்பற்றித்தான் முக்கிய கவனம் செலுத்தப்பட் டிருக்கிறது. இதில் என் கருத்து என்னவென்றால் மிஸ்மானேஜ் மென்ட் நடக்கக்கூடியவற்றை எடுத்துக் கொள்வது அரசின் கடமை. அவற்றை அரசு எடுத்து நடத்துவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் எங்களைப் போன்றவர்களுக்கு இருக்காது. ஆனால் மிஸ்மானேஜ்மென்ட் இல்லாது நல்லமுறையில் நடக்கக்கூடிய பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளையும் ஒட்டுமொத்தமாக

1975 நவம்பர் 7] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

எடுத்துக்கொள்வது என்பது அவ்வளவு உசிதமல்ல. இந்த தெய்வீகப் பேரவை இந்து மதத்தைப் பிரசாரம் செய்கிற அளவில் அதில் இருக்கக்கூடிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழ் நாட்டில் பரவச் செய்வது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்குவார்கள் என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக தாழ்த்தப் பட்டவர்களும், மலைவாசிகளும் ஆபீஸ் பேரர்களாக, சர்வெண்ட்ஸ் ஆக வேலை செய்வதற்கு அறநிலையங்களில் இடம் கொடுக்க வேண்டும் என்று ஒரு ப்ரொவிஷன் செய்வதாகக் கூறியிருக்கிறார் கள். ஆனால் அதற்கு அடுத்தபடியாகப் பார்க்கும்போது அப்படி ப்ரொவிஷன் செய்தாலும்கூட

Provided the usage of the religious institution concerned does not prohibit.

என்றிருக்கிறது. அப்படி ஒரு ஆட்சேபணை அறநிலையத்துறையில் உள்ளவர்கள் தெரிவித்தால் அரசாங்கம் கொடுக்க நினைத்திருக்கிற சலுகை தடைப்பட்டுப் போகும் என்று திட்டவட்டமாக இருக்கிறது.

மேலும்

for the appointment of the member of the Scheduled Caste or Scheduled Tribe as office holders or servant of religious institution

என்பதோடு

also to empower the Executive Officer to have powers of appointment and disciplinary control over the office-holders and servants of religious institution

என்று வைத்துவிட்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனெனில் அரசாங்கம் provided the usage of religious institution does not prohibit என்று போட்டு இருக்கிற அந்த நல்ல எண்ணம் காரியம் என்று வரும்போது அடிபட்டு விடும் என்னுடைய கருத்தாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அதற்கு அடுத்தபடியாக ஆடிட் பீஸ் 1½ சதவிகிதம் என்று இருப்பதை 3½ சதவிகிதம் என்று உயர்த்தி இருக்கிறீர்கள். இது அதிகப்படியாக இருக்கிறது. இதை மிகவும் அதிகமாகக்

குறைக்க இயலாவிட்டாலும் கூட 2 சதவிகிதம் என்று வைத்தால் நலமாக இருக்கும். இதை ரிட்ராஸ்பெக்டிவ்வாக வைத்து இருக்கிறீர்கள். அப்படி வைத்ததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அப்படியில்லாமல் from the date of passing of the Act. என்று கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கூறி என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன.

* **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, இந்த நல்ல திருத்தங்களை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல கருத்துக்களைச் சொல்லி இருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்தத் திருத்தத்திலே பேசியவர்களால் முக்கியமாகச் சொல்லப்பட்ட கருத்து, தணிக்கைக் கட்டணம் அதிகமாக உயர்வு செய்யப்பட்டு இருக்கிறது என்பதாகும். அந்தக் கட்டணத்தை உயர்த்தி இருப்பதால், அற நிலையங்களின் நிலைமை பாதிக்கப்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ அற நிலையங்களின் நிதி நிலைமை பாதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. முறையாக அந்தத் தணிக்கைகள் எல்லாம் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு தணிக்கைக் குழு என்று தனியாக ஒரு விங் ஏற்படுத்தி, அது நல்ல முறையில் இன்று செயல்பட்டு வருகிறது. அரசு அலுவலாளர்கள் அதில் பணியாற்றினாலும், அதைத் தனி விங்காக வைத்து அந்தக் கணக்குகளை எல்லாம் நல்ல முறையில் தணிக்கை செய்து வருகிறோம்.

உறுப்பினர்கள் பேசும் நேரத்தில், நீண்ட நாள் காலதாமதம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். நிறைய அற நிலையங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த நீண்ட நாள் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தில்தான், தனியாக தணிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, விவைவாகத் தணிக்கை முடிய

வேண்டுமென்று அவ்வப்போது அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இப்போது தணிக்கை வேகமாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு எந்த அளவிற்குத் தணிக்கை நடைபெற்று இருக்கிறது, மாதந்தோறும் எவ்வளவு தணிக்கை செய்யப்பட்டு இருக்கிறது என்பதை எல்லாம் அற நிலையத் துறை ஆணையரும், அரசும் மாதந்தோறும் ஆய்வு செய்கிறது.

1½ சதவிகிதம் இருந்த தணிக்கைக் கட்டணத்தை 3½ சதவிகிதம் என்று ஏன் உயர்த்தினோம் என்பதற்கு நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். 1966 ஆம் ஆண்டில் இந்தத் துறையின் தணிக்கைக்கு எந்த அளவுக்கு அதிகாரிகள் இருந்தார்களோ, அதே அளவு அதிகாரிகள்தான் இன்றும் இருக்கிறார்கள். அதிகாரிகளின் எண்ணிக்கை எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிகப்படுத்தப்படவில்லை. அரசு அலுவலாளர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் ஊதிய உயர்வு, பல்வேறு விதமான சலுகைகள் காரணமாக அப்போது இருந்த செலவை விட இப்போது அதிகப்படியான செலவை அற நிலையத் துறையின் சார்பாகச் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப் போனால், 16.70 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்ட நிலைமை மாறி, 19.36 லட்சம் ரூபாய் செலவு செய்யக்கூடிய நிலைமைக்கு நாம் வந்து இருக்கிறோம். ஆனால் கோவில்களில் இருந்து எவ்வளவு தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது என்று சொன்னால், 13.18 லட்ச ரூபாய். செலவாகும் தொகை ரூ. 19.35 லட்சம். எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும் என்ற நோக்கத்தின் காரணமாகத்தான் அடிக்கடி இப்படிப்பட்ட திருத்தம் வரக்கூடாது என்ற முறையில் 1½ சதவிகிதம் என்று இருப்பதை 3½ சதவிகிதம் உயர்த்தி இருக்கிறோம்.

எல்லா நிறுவனங்களும் 3½ சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டு வரப்படவில்லை. அதிக பட்சம் 3½ சதவிகிதம் என்று போட்டு இருக்கிறோம். ரூ. 200-லிருந்து

ரூ. 999 வரையுள்ள நிறுவனங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் கிடையாது. ரூ. 1,000-லிருந்து ரூ. 5,000 வரையுள்ள நிறுவனங்கள் 1½ சதவிகிதம் கட்டணம் செலுத்த வேண்டும். ரூ. 5,001-லிருந்து ரூ. 20,000 வரையில் உள்ள நிறுவனங்கள் 2 சதவிகிதம் கட்டணம் செலுத்த வேண்டும். ரூ. 20,001-லிருந்து ரூ. 60,000 வரையில் உள்ள நிறுவனங்கள் 2½ சதவிகிதம் கட்டணம் செலுத்த வேண்டும். ரூ. 60,001-லிருந்து ரூ. 2 லட்சம் வரையிலுள்ள நிறுவனங்கள் 3 சதவிகிதம் கட்டணம் செலுத்த வேண்டும். ரூ. 2 லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள, வசதியான கோவில்களில் இருந்துதான் 3½ சதவிகிதம் வசூல் செய்ய வேண்டுமென்று போட்டு இருக்கிறோம். ஆகவே, இந்தத் தணிக்கைக் கட்டணம் ஒரு 'சிலாப் சிஸ்டத்தின்' அடிப்படையில் தான் போடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, சிறிய கோவில்கள், வருமானம் குறைந்த கோவில்கள் இதனால் எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலமாக ஒட்டு மொத்தமாக நமக்கு ரூ. 24.51 லட்சம் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிலாப் சிஸ்டத்தின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகிற காரணத்தால், கோவில்களின் நிதி நிலைமை, ஊழியர்களின் சம்பள விகிதம் பாதிக்கப்படாது என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பரம்பரை அறங்காவலர்களைப் பற்றிய திருத்தத்தைப் பற்றி கருத்து சொன்னார்கள். பரம்பரை அறங்காவலர்கள் அனைவரும் தவறாக நடந்து கொண்டு இருக்கிறார்கள், அனைத்துக் கோவில்களும் தவறான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்று நம்மால் சொல்ல முடியாது. பரம்பரை அறங்காவலர்கள் இருக்கும் கோவில்களில் அவ்வப்போது நடைபெறும் தவறான காரியங்கள், செய்து முடிக்கப்பட்ட பிறகு அரசாங்கத்தின் கவனத்திற்கு, உரிய அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. அதனால்தான் பரம்பரை அறங்காவலர்கள்

1975 நவம்பர் 7] [திரு. மு. கண்ணப்பன்]

பரம்பரையாக என்ன உரிமை பெற்று இருந்தாலும், அதைப் பாதிக்காத வகையில், அதைப் பறிக்காத வகையில், அவர்களும் பதவி வகிக்கிற வகையில், அவர்கள் செய்யும் நல்ல காரியங்களுக்குத் துணையாக இருக்கும் வகையில், நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில், பரம்பரை அறங்காவலர்களோடு, கூடுதல் அறங்காவலர்கள் நியமிப்பது என்று கொண்டுவந்து இருக்கிறோம். அப்படி நியமிக்கப்படுகிற போது, அந்தப் பரம்பரை அறங்காவலர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, உடனடியாக ஆணையாளர் அவர்கள் கூடுதல் அறங்காவலர்களை நியமிக்கலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம். ஏற்கனவே இருந்த சட்டத்தில், அவர்களுடைய நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது, தவறாக நடக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, அது நிரூபிக்கப்பட்ட பின்னாலேதான், நாம் கூடுதல் அறங்காவலர்களை நியமிக்க முடியும். இப்போது கொண்டு வரப்பட்டு இருக்கும் திருத்தத்தின் காரணமாக, அந்த மாதிரி நிலைமை இருந்தால் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு, அறிவிப்புக் கொடுத்து விட்டு, பிறகு உடனடியாக ஆணையாளர் அவர்கள் கூடுதல் அறங்காவலர்களை நியமிக்கலாம் என்று கொண்டு வந்து இருக்கிறோம்.

இப்படிப்பட்ட நிலைமையில் ஏற்கனவே பல கோவில்களில் இப்படிச் செய்து இருக்கிறோம். உடனே அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அதைத் தடுத்து நிறுத்தி விடுகிறார்கள். அந்த கேஸ்கள் முடிவதற்கு பல்லாண்டுக் காலம் ஆகிவிடுகிறது. அதற்குள் அவர்கள் கோவில் சொத்துக்களை எல்லாம் தங்களுடைய பெயருக்கு மாற்றி பட்டா எழுதிக்கொண்டு விடுகிற சூழ்நிலை எல்லாம் வருகிறது. அந்தக் கதையெல்லாம் ஏராளமாக இருக்கின்றன. அதையெல்லாம் உணர்ந்து பார்த்த காரணத்தால் தான் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கும் கோவில்களில், கூடுதல் அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தை, உடனடியாக நியமனம் செய்யும் அதிகாரத்தை ஆணையாளருக்கு நேரடியாகத் தருவதற்கு இந்த மசோதாவைக் கொண்டு வந்து இருக்கிறோம்.

[திரு. மு. கண்ணப்பன்] [1975 நவம்பர் 7

அதேபோல், அறக்கட்டளைகள், பல்வேறு மடங்கள் இவற்றை யெல்லாம் அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது அந்த நோக்கம் கிடையாது. ஏற்கனவே இருக்கும் சட்டத்தில், எந்தெந்த இடத்தில் ஊழல் நடைபெறுகிறதோ, நிர்வாகத்தில் தவறு நடைபெறுகிறதோ அவற்றை எடுத்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. இல்லை என்று கூறவில்லை. இருந்தாலும் கூட அந்த நிர்வாகத்திலே தவறு இருக்கிறது என்பதை, அந்த நிர்வாகத்திலே உள்ளவர்களுக்கு நோட்டீஸ் மூலம் தெரிவித்து, அவர்களிடமிருந்து பதில் பெற்று, அவர்கள் சொல்லும் சமாதானம் சரியல்ல என்று மீண்டும் நாம் நோட்டீஸ் கொடுத்து, அதற்குப் பின்னுலேதான் அறங்காவலாகளையோ அல்லது அதிகாரியையோ நாம் நியமனம் செய்ய முடியும். எடுத்துக்கொள்ள முடியும். இதற்கு நீண்ட காலம் ஆகும். இந்த இடைக்காலத்தில் அதை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், நேரடியாக நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். அப்படிச் சென்று விட்டால், நான்காண்டு காலம், ஐந்தாண்டு காலம், 10 ஆண்டு காலம் துறையின் நிர்வாகத்தில் அதை எடுத்துக்கொள்ள முடியாது என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்த நிலைமையை நாம் இன்று பல நிறுவனங்களில் காண்கிறோம். இவைகளெல்லாம் இருக்கின்ற காரணத்தால்தான், நிர்வாகத்தில் இருக்கும் கோளாறுகளைக் கண்டறிந்த காரணத்தால்தான், நேரடியாக அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும், ஆணையாளருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம்.

எல்லா நிறுவனங்களையும் ஒரேயடியாக எடுத்துக்கொள்ளவில்லை. எந்த நிர்வாகம் தவறாகச் செயல்படுகிறதோ, எது சரியில்லையோ அதை எடுத்துக்கொள்கிறோம். அதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் இருந்தால் அவற்றை எடுத்துக் கொள்வதற்கு வகை செய்யும் வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம்.

1975 நவம்பர் 7] [திரு. மு. கண்ணப்பன்]

அறக்கட்டளைகள் பூராவையும், மத ஸ்தாபனங்கள் பூராவையும் ஒரே நோத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமா என்று ஜோதி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கம் இல்லை என்றாலும், எங்கே மோசமான நிர்வாகம் இருக்கிறதோ அந்த நிர்வாகத்தை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு இந்தச் சட்டம் வகை செய்கிறது. இருந்தபோதிலும், நாளாவட்டத்தில் படிப்படியாக எல்லா நிறுவனங்களையும் ஆணையாளரின், அரசாங்கத்தின் நிர்வாகத்தில் கொண்டு வரவேண்டுமென்பது நம்முடைய நோக்கம் அரசாங்கத்தின் கருத்து என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது வேத பாடசாலைகள், சாமி படத்தின் பெயரால் அறக்கட்டளை ஏற்படுத்தியிருப்பது, ஆகியவை எல்லாம் சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு சொன்னார்கள். அவைகளையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குப் பல்வேறு நேரங்களில் கொண்டுவந்த காரணத்தால்தான் இன்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் எந்த இடத்தில் இருந்தாலும், எப்படிப் பட்ட முறைகளில் நடைபெற்றுக் கொண்டு இருந்தாலும், அவற்றையெல்லாம் நிச்சயமாக அரசாங்கம் கண்காணிப்பில் எடுத்துக் கொள்வதோடு, அவைகளை எல்லாம், அந்த நிர்வாகத்தை யெல்லாம் சீர்திருத்தவும் நான் நடவடிக்கை மேற்கொள்வேன் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

மடாதிபதிகளை ஏன் விட்டுவிட்டீர்கள் என்று மதிப்பிற்குரிய சுப்பையா முதலியார், எ. கே. சுப்பையா ஆகியோர் கேட்டார்கள் மடாதிபதிகளை விட்டு வைத்து அவர்கள் ஊழல் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. ஏற்கனவே மடாதிபதிகள் இருக்கக் கூடிய மடங்களுக்குச் சொந்தமான கோவில்கள், நிலங்கள் இரண்டும் சேர்ந்து மடாதிபதி நிர்வாகத்தில் இருக்கிறது.

கோவில்களில் இருக்கின்ற வருமானம், செலவுகள் இவைகளையாவது அரசாங்கம் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்ற ஆண்டு சட்டத் திருத்தம் கொண்டு வந்து, மடங்களுக்குச் சொந்தமான கோவில்களுக்கு ஆணையாளர்கள், நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று சட்டத் திருத்தம் செய்து, வெகு சீக்கிரத்திலே நிர்வாக அதிகாரிகளை நாம் நியமிக்கப் போகின்றோம். எதிர்காலத்தில் மடங்களைக் கூட நிர்வாகம் செய்ய, அதன் கணக்கு வழக்குகள் நேரடியாகக் கண்காணிக்கப்பட, அரசாங்கத்திலிருந்து அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொள்கிறோம். அதில் எந்த வகையான கருத்து வேறுபாடும் இல்லை. மாண்புமிகு சுப்பையா முதலியார் சொன்னபடி, மேலும் அரசு தீவிரமாக யோசித்து — சில சட்டச் சிக்கல்கள் எழுகின்ற பிரச்னை இருக்கிறது, அவைகளை எல்லாம் பரிசீலித்து, எதிர்காலத்தில் முடிவு செய்யலாம் என்ற கருத்தை இந்த நேரத்தில் நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அறங்காவலர் குழுவை ஏன் கலைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அறங்காவலர்களில், தனிப்பட்டவர் தவறு செய்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்க இப்போது இருக்கின்ற விதிமுறைகளில் அதிகாரம் இருக்கிறது. சில அறங்காவலர்கள், ஏதோ சில காரணங்களால் அரசின் கொள்கைக்கு விரோதமாக, கோவில் கொள்கைக்கு விரோதமாக போகின்ற நேரத்தில் உடனடியாக நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையாளருக்கு அதிகாரம் தருகிறோம். அவசியமான இடங்களில் தவிர, நிச்சயமாக அந்த அதிகாரத்தை மோசமான முறையில் தேவையில்லாத இடங்களில் பிரயோகப்படுத்த மாட்டார்கள் என்ற உத்திரவாதத்தினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசனங்கள் நியமனத்தைப் பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். அரிசனங்களாக இருக்கக்கூடியவர்கள் அறங்காவலராக இடம் பெற வேண்டும் என்று ஏற்கனவே சட்டம் செய்திருக்கிறோம். அப்படி போட்ட பிறகு, இந்த இரண்டு

1975 நவம்பர் 7] [திரு. மு. கண்ணப்பன்]

ஆண்டு காலத்தில் மட்டும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கோவில் ஊழியர்களை எடுத்துக் கொண்டால், ஊழியர்களில் எத்தனை பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் இருக்கிறார்கள் என்றால், குறைவானவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவேதான், சட்டத்தில் அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, மலைசாதியினர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஒருவராவது ஊழியராக இடம் பெற வேண்டும் என்று சட்ட திருத்தத்தில் வகை செய்திருக்கிறோம். அறங்காவலர் நியமனத்துக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஏற்கனவே சட்டத்தைத் திருத்தியாகிவிட்டது. அந்த அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களும் கோவில் நிர்வாகத்தில் இடம் பெற வேண்டும், அங்கே பணியாற்றுகிற ஊழியர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தத்தைச் செய்திருக்கிறோம்.

அதேபோல் இன்னும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, இந்தத் துறை சிறப்பான முறையில் செயல்பட, பொது மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் இங்கே பல்வேறு திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். நல்ல ஆலோசனைகளை, கருத்துக்களைச் சொல்லி, மேலும் இந்தத் துறை நல்ல முறையில் செயல்பட ஊக்கம் தந்த உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருத்தத் தீர்மானம் என்று சொல்லி திரு. என். கே. பழனிசாமி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கின்ற நல்ல கருத்துக்களை எல்லாம் அரசு நினைவில் வைத்து, அவர்கள் சொல்லியிருக்கின்ற அடிப்படையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். மேலும் அவர்கள் சொல்லியிருக்கின்ற நல்ல கருத்துக்களை எடுத்துக்கொண்டு எதிர்காலத்தில் செயல்படுத்த இந்த அரசு தயங்காது என்று சொல்லி, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 முதல் 9 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 10 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU N. K. PALANISAMY : Sir, I move :

(1) In clause 10, in sub-section (i) of Section 56, after the words " sufficient cause " *add* the following :

"without recourse to any court".

(ii) In clause (10), in section 56, *add* a new sub-section (3 as follows :—

" (3) a Board shall be constituted to receive complaints from the public against the office holders and servants attached to religious institutions and after due enquiry the Board shall make its recommendations to the Commissioner."

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

* **திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இந்த திருத்தத்தின் நோக்கம், மிஸ்காண்டக்ட் செய்து, டிஸ்மிஸ்ஸால்வ் செய்தவுடன், பொசஷன் எடுக்க, இதை இந்த மசோதாவில்

கொண்டு வரவேண்டும். டிஸ்ஸால்வ் செய்தவுடன் should hold possession அதிகாரிகள் பொசஷன் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொள்ளும்போது கோர்ட்டுக்குப் போகக் கூடாது. should not have recourse to the court

இரண்டாவது, பல இடங்களில் கோவில்களுக்குக் கட்டிடங்கள் இருக்கின்றன. அதை டிரஸ்டிகள் is collusion with the Executive Officer பகடி வாங்கிக் கொண்டு வாடகைக்கு விடுகிறார்கள். அந்த மாதிரியான இடங்களில் கம்பிளைண்டுகள் வெளி வருவதில்லை. அப்படியே அமுக்கி விடுகின்றனர். பகடி இரண்டாயிரம் மூவாயிரம் என்று வாங்கிக்கொண்டு, குறைந்த வாடகைக்கு விட்டுவிடுகிறார்கள். இதுபோன்று பல இடங்களில் இருக்கின்றன.

அதே மாதிரி கோவில் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதிலும் நடைபெறுகிறது. இந்த மாதிரி புகார்கள் வந்தால், அதை அதிகாரிகளே விசாரிக்காமல், தனியாக விசாரிக்க ஒரு போர்டு அமைக்கப்பட வேண்டும். போர்டில் புகாரை விசாரித்து கமிஷனருக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும். இந்த மாதிரியான ஊழலைப் போக்க, இப்படிப்பட்ட போர்டை அமைப்பது முக்கியம்.

இன்னொன்று டிரஸ்டு போர்டில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த கிளாசைப் பொறுத்த வரையில் சொல்லுங்கள். ஜெனரல் டிஸ்கஷன் வேண்டாம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தற்போது அறங்காவலர் பதவிக் காலம் முடிந்த பிறகு, புதிதாக வருகின்ற அறங்காவலர்கள் பொறுப்பு எடுத்துக்கொள்வதில் சிரமங்கள் இல்லை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இருந்தாலும், இப்போது அறநிலையத் துறை அதிகாரிகள் உடனடியாக எடுத்துக்கொள்ள—சில சந்தர்ப்பங்களில் நீதிமன்றங் களுக்குச் செல்லுகின்ற நிலைகளில்தான் கஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் எவ்வளவு விரைவாக எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக எடுத்துக்கொள்வதில்

ஈடுபட்டிருக்கிறார்கள். உறுப்பினர் சொல்லிய யோசனை கருத்தில் கொள்ள வேண்டிய யோசனைதான். அதைப் பரிசீலித்து, புதிதாக வருகிற அறங்காவலர்கள் உடனடியாக நிர்வாகத்தை மேற்கொள்ள என்ன வழி வகை செய்யலாம் என்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 10 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 11 முதல் 15 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே,

“தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/75) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்” என்று முன்மொழிகின்றேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, பிரதேச டிரஸ்டு போர்டில் டிரஸ்டிகளை நியமிக்க இந்த மசோதா வகை செய்கிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் காங்கிரஸ்காரர்கள் இருந்தார்கள். தி.மு.க. அரசில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு மாறி விட்டது. இந்தக் கோவில்களில் லட்சக்கணக்கான வருமானம் வருகிறது. எண்டோமெண்டு போர்டில் எடுக்கமாட்டேன் என்கிறார்கள். அரசாங்கம் படிப்படியாக இந்தக் கோவில்களை எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, நமது தொகுதியில் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று

1975 நவம்பர் 7] [திரு. என். கே. பழனிசாமி]

நினைக்கிறேன். அந்த மாதிரியான கோவில்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. அதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எந்தக் கோவிலையும் இந்தத் துறையில் எடுக்காமல், யாருக்காவது சலுகை செய்யவேண்டுமென்று இந்த அரசு இல்லை. 1967-லே இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டபோது, 9,000 அறநிலையங்கள், இந்த அறநிலையத் துறையில் இருந்தன. இந்த ஆண்டு 25,000 அறநிலையங்களை நாம் இந்தத் துறையில் எடுத்திருக்கிறோம். அதுவுமல்லாமல், தனி அதிகாரியை நியமித்து, எந்த நிறுவனங்கள் வருமானம் வரக்கூடியது என்று ஆராய்ந்து, 42,000 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்று கண்டுபிடித்து, இந்த 42,000 நிறுவனங்களையும் இந்தத் துறையின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது பல்வேறு கட்டங்களில் இருக்கிறது. நோட்டிபிகேஷன் கொடுப்பது, அவர்களிடமிருந்து பதில் வாங்குவது என்ற நிலைகள் இருக்கின்றன. இன்னும் சில இடங்களில் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். எந்தக் கோயிலில் 200 ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வந்தாலும் நிச்சயமாக அரசுத் துறையில் எடுத்துக் கொள்ளப் படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/75) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/75)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/75) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

* 1975 அக்டோபர் 31 ஆம் தேதிய தமிழ் நாடு அரசிதழ் **சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.**

(ஈ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75)

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Mr. Speaker, Sir, I beg to move:

"That the Tamil Nadu State Wakf Board (Validation of Functions of Special Officer) Bill, 1975 * (L.A. Bill No. 43 of 1975) be taken into consideration."

Under sub-section (1) of Section 64 of the Wakf Act, 1954 (Central Act 29 of 1954), the Government superseded the Tamil Nadu State Wakf Board for a period of three years from the 20th November 1967. The period of supersession was extended for a further period upto and inclusive of the 23rd May 1971 by a notification, dated the 25th May 1971. The Wakf Board was reconstituted with effect from the 24th May 1971. The Special Officer for Wakfs appointed to exercise and perform the powers and duties of the Board continued to exercise and perform such powers and duties even during the extended period from the 20th November 1967 to the 23rd May 1971. The Special Officer had in that capacity filed several suits before courts even during the extended period of supersession.

Some of these suits have been dismissed by the Courts on the ground that the notification, dated the 25th May 1971, was not a valid one as it could not have retrospective effect and consequently, the Special Officer had no jurisdiction to institute the suits. It is, therefore, necessary to validate all acts and proceedings of the Special Officer during the extended period of supersession of the Wakf Board and also to provide for the restoration of the suits and other proceedings dismissed solely on the ground that the Special Officer had no jurisdiction to institute such suits or other proceedings.

Even though the Wakf Board was reconstituted with effect from the 24th May 1971, a new Secretary was appointed to the Board only with effect from the 12th July 1971. During the period from the 24th May 1971 to the 11th July 1971, the Special Officer had exercised the powers of the Secretary to the Board.

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 25th October 1975.

It is considered necessary to validate the acts and proceedings of the special officer as the Secretary to the Board during the said period, so as to avoid such acts and proceedings being challenged in Courts. The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவில் கூறுவதற்கு அதிகம் இல்லாது போனாலும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கும் அடிப்படையை உற்றுநோக்கும்போது வக்ஃப் சம்பந்தமான நிறுவனங்களைக் கவனிப்பதற்கு ஒரு அதனுடைய குறைகளை நிரந்தரமாகப் போக்குவதற்கு ஒழுங்கான விதிகள் இல்லாததுதான் இந்த மாதிரியான குறைகள் ஏற்படு வதற்குக் காரணம். இதன் காரணமாக, சில வழக்குகள், நீதிமன்றங்களுக்குப் போகும்போது சில சந்தர்ப்பங்களில் சட்டத்திலுள்ள சில குறைபாடுகள் காரணமாக தள்ளுபடி செய்யப்படக்கூடிய முறைகள் இருக்கின்றன. இந்தக் குறைகளைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தனி மனிதர் கமிஷனை நியமித்து ஒழுங்குமுறைகள் அடங்கிய ஒரு சட்ட திட்டத்தை வக்ஃப் ஆக்டில் ஏற்படுத்துவதற்கான முறையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்கள். உண்மையிலேயே அந்த முயற்சிகள் பாராட்டுக்கு உரிய நல்ல முயற்சிகள் ஆகும். இந்த வக்ப் சம்பந்தமான நிர்வாகங்களில் அக்கறை உள்ள அனைவரும் ஈடுபட்டு நல்ல, சிறந்த, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதன் அடிப்படையில் வக்ஃப் சொத்துக்களுக்கு நல்ல பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். இதை ரெட்ராஸ்பெக்டிவ் ஆக முன்னால் நடந்தவைகளுக்குக் கூட பாதுகாப்பு ஏற்படுத்தித் தரும்படியான முறையில் செய்து தரவேண்டும். இந்த அரசு அப்படி ஏற்படுத்தித் தரும் என்று நம்பிக்கை இருந்து வருகிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும் கூட, முன்னால் ஏற்பட்ட ஒரு தவறின் காரணமாகத் தான் இந்தச் சட்ட திருத்தத்தின் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இனியாவது எதிர் காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நிகழாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒழுங்காக நடைபெறாத

1975 நவம்பர் 7] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

நிறுவனங்கள் சூபர்சிட் செய்யப்பட்டு விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் — வக்ஃப் பணிகளை தொடர்ந்து செய்ய அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்றாலும் எதிர் காலத்திலும் பாதுகாப்பான நிலைமை இருக்க வேண்டும்.

இவைகளை எல்லாம் கருத்திற்கொண்டு எல்லாவற்றையும் விட சிறந்த ஒரு காம்பிரஹென்ஸிவ் ஆக்ட் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட சட்டம் ஏற்படுத்தப்படப்போகிற காரணத்தால்தான் இந்தச் சட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, வக்ப் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. லட்சக்கணக்கான உணர்வுகள் இருக்கின்றன அவற்றை எல்லாம் சொல்லி முடியாது. ஆனால், ஓரளவுக்கு முடிந்த அளவுக்கு அவைகளைச் சமாளிப்பதற்கு இப்போது நாம் சில சட்ட முறைகளை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். நமது முயற்சிகளுக்கு இறைவன் வெற்றி அளிக்க வேண்டும். உதாரணமாகச் சொல்லப் போனால், சொத்துக்கள் எப்படி எல்லாம் விரயமாக்கப் படுகின்றன என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக, சிதம்பரம் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் பள்ளிவாசலுக்கு உட்பட்ட இடத்தில் பொது கக்கூசு கட்டப்பட்டிருக்கிறது. அந்த கக்கூசு அகற்றப்பட வேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சிகள் வீணாகிப் போயின. அக்கக்கூசைக் கட்டும் போது பள்ளிவாசலைக் கேட்டுக்கொண்டு கட்டவில்லை. தொழுகைக்குச் செல்கின்றவர்களின் நன்மையைக் கருதி அது கட்டப்படவில்லை. மாறாக, தொழுகைக்குச் செல்கிறவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு உள்ளே போக வேண்டிய நிலை இருக்கிறது. பக்கத்திலுள்ள மார்க்கெட்டுக்குத் தான் அது வசதியாக இருக்கிறது. அந்தக் கக்கூசை அகற்ற வேண்டுமென்று கேட்டால், வக்கிர புத்தி படைத்த ஒரு முனிசிபல் தலைவர் அந்தக் கக்கூசை அகற்றுவதற்கு காம்பன்சேஷன் கொடுங்கள்— முதலில் பணத்தைக் கட்டுங்கள் என்று சொல்கிறார். இதைப் போல சொல்ல வேண்டுமானால் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவைகளை இங்கே பேசுவது என்பது பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தால் இந்த மசோதாவை முழுமையாக வரவேற்கிறேன். எதிர்காலத்திலாவது ஒரு முழுமையான

காம்பிரஹென்சிவ் ஆக்ட் கொண்டு வர வேண்டும். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் அது முன்மாதிரியாக இருக்க வேண்டும். அத்தகைய சட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் ஜப்பார் அவர்கள் மசோதாவை ஆதரித்திருக்கிருர்கள். எனவே இதில் விளக்கம் அளிப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர் கூறியிருக்கிற ஆலோசனைகள் யாவும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஒரு தனி நபர் கமிஷன் நியமிக்கப்பட்டது. அக் கமிஷன் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அறிக்கையின் மீது விவாதம் நடத்தி இருக்கிருேம். விவாதத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வந்திருக்கிருர்கள். இப்போது கொண்டுவந்துள்ள சட்டத்தில், இனிமேல் வரக்கூடிய போர்டுகள் சூபர்சிடு செய்தால் என்ன செய்வது என்ற முறையில் பேசினுர்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்று நம்புகிருேம்--விரும்புகிருேம். திறமைக்குறைவு காரணமாக சூபர்சிட் செய்யக் கூடிய நிலைமை ஏற்படக் கூடாது என்று தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

]பேரவைத் தலைவர்] [1975 நவம்பர் 7

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதி காரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75).

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*1975 அக்டோபர் 25-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப் பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 7

தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1973) 9-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ், இச்சட்டத்தின் கீழ் உரிமதாரருக்குக் கொடுக்கப்படக் கூடிய தொகையிலிருந்து தனக்கு ஏற்பட்ட இழப்பு என அரசு கருதும் தொகையைக் கழித்துக் கொள்கிற தனது உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு ஒன்று அந்நிறுவன உடைமை அரசிடம் நிலைபெறும் நாளிலிருந்து ஓராண்டுக்குள் கொடுக்கப்பட வேண்டும். இருப்புப் பட்டியல்கள் அனுப்பப்பட்டு அவை முழுமை யாகப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றியும் அதற்குக் கழித்துக் கொள்ளப்பட வேண்டிய தொகைகள் பற்றியும் வரையறுக்க இயலும். முன்னாள் உரிமை தாரர்களில் சிலர் தங்களின் இருப்புப் பட்டியல்களை இன்னும் பணிந்தனுப்பவில்லை. எனவே, தொகை கழித்துக் கொள்வதென்று அரசின் உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு, அந்நிறுவனத்தின் உடைமை அரசிடம் நிலைபெற்ற நாளிலிருந்து ஓராண்டு கால அளவு அல்லது அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் அடக்கிய முழுமையான பட்டியலும், அதன் ஆவணங்கள் குறித்த பட்டியலும் அரசிடம் ஒப்படைக்கப் பெற்ற நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு, இவற்றில் எது பிந்தியதோ அக்கால அளவிற்குள் அளிக்கப்பட வேண்டும் என்கிற வகையில் அச்சட்டத்தின் 9-வது பிரிவின் தற்போதைய வரம்பு நிபந்தனைக்கு விளக்கம் அளிப்பதென முடிவு செய்யப்பட் டுள்ளது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின் 9-வது பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைக்குத் தக்கவாறு விளக்கமளிப்பது அவசியமெனக் கருதப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவமளிக்கும் கருத்துடனியற்றப்பட்டதாகும். இந்த மன்றம் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 7]

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவின் நோக்கம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இப்போது இந்த அளவிற்குக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றி எனக்குச் சில ஐயப்பாடுகள் இருக்கின்றன.

குறிப்பாக, ஏற்கெனவே இந்தத் தனியார் மின்சார நிறுவனங்களையெல்லாம் எடுத்துக் கொண்ட பிறகு ஏற்பட்ட மாறுதல்கள் என்ன என்பது தெரிய வேண்டும். குறிப்பாக,

In the present Act provision of 4 months' notice has been deleted and the submission of inventories takes place after the undertaking has vested in Government. Within a period of one year from the vesting date or within a period of three months from the date on which complete inventory of all the assets belonging to the undertaking and of its documents are handed over to the Government, whichever period is later.

என்பது இப்போது கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது இவ்வளவு காலதாமதப்பட்டிருக்க வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. நாம் எடுத்த காலத்திலிருந்து எந்த அளவிற்கு நமக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரம் தெரியவில்லை. தெரியாமல் போய் விட்டது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நமக்குச் சேர வேண்டியது எவ்வளவு, எந்த வகையிலே அதைப் பெறுவது, இந்தக் கால தாமதத்தினால் நமக்குக் கிடைக்க வேண்டிய நிதி எந்த அளவிற்கு கிடைக்காமல் இருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்கு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பழைய 1934-ம் ஆண்டு ஆக்டில்

Under the old Act four months' notice was given to the licensee prior to the take over of their Electrical undertaking.

அதிலே அவ்வளவுதான் முடியும்.

In the present Act provision of 4 months' notice has been deleted and the submission of inventories takes place after the undertaking has vested in Government. In actual working, the

inventories have been received later after the expiry of the due date prescribed under Section 16 of the Act. Unless these are received, the field check could not be done. Only in field check of inventories there is much scope for verifying non-bonafide transactions. The one year prescribed under Section 9 is coming to a close on 6th January 1975.

சில நிறுவனங்கள் இன்வெண்ட்ரீஸ் பூராவையும் எடுக்க முடியவில்லை. நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்படுகிற இழப்பை தவிர்ப்பதற்காக இந்தப் புதிய திருத்தத்தின் மூலம் செய்யப்படுகிறது. அந்த நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டதிலிருந்து ஓர் ஆண்டுக்குள் — அல்லது கொடுத்ததிலிருந்து

Within a period of one year from the vesting date or within a period of three months from the date on which complete inventory of all the assets belonging to the undertaking and of its documents are handed over to the Government, whichever period is later.

இப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஓர் ஆண்டு காலத்திற்குள் இன்வெண்டரி எடுத்து அதைப் பரிசிலனை செய்து நம்முடைய நிலையைப் பாதுகாத்துக் கொள்கிற அளவிற்கு இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எந்தெந்த நிறுவனங்கள் கொடுத்து இருக்கிறார்கள், எந்தெந்த நிறுவனங்கள் கொடுப்பதற்கு முயற்சி செய்திருக்கின்றன, எந்தெந்த நிறுவனங்கள் கொடுக்கவில்லை என்பதைப் பற்றிய விவரங்கள் தரப்படவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செங்கோட்டை நிறுவனம் கொடுக்கவில்லை. மற்ற நிறுவனங்கள் பற்றிய விவரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 42/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே; "தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I move the following amendment standing in my name:—

"For clause (b) of new sub-section (3) of Section 4 proposed posed in Clause 2 of the Bill, substitute the following:

"(b) (i) No elected member of the Council of States and no member elected to the State Legislative Council by the members of the Legislative Assembly shall be a member of the District Development Councils in more than one district; and such elected member of the Council of States or of the State Legislative Council, as the case may be, shall decide as to the District Development Councils of any one district in which he desires to serve

* 1975 அக்டோபர் 28 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 7] **[திரு. ச. இராமச்சந்திரன்]**

as a member and intimate his decision to the District Collector concerned in such form and within such period as may be prescribed.

(ii) Any member elected to the State Legislative Council by the electorates mentioned in sub-clause (*a*), (*b*) or (*c*) of Clause (3) of Article 171 of the Constitution shall be a member of every District Development Council in the districts comprised in the territorial constituency concerned."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பட வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் உறுப்பினராக எம்.எல்.சி.க்களை நியமிக்கும்போது எத்தனை டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் என்று ஒரு எல்லை இருக்க வேண்டும். எல்லை இல்லாமல் எம்.எல்.சி.க்களை 5 டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு ஒருவரே உறுப்பினர் என்று சொன்னால் எல்லா இடத்திற்கும் அவரால் போக முடியாத நிலைமை ஏற்படலாம். எல்லா டெவலப்மெண்ட் கூட்டங்களும் ஒரு குறிப்பிட்ட ஒரே நேரத்தில் தான் நடக்கின்றன. ஏற்கெனவே இருக்கக்கூடிய எம்.எல்.சி.-க்கள், சட்ட மன்றத்தால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், டிஸ்டிரிக்ட்

டெவலப்மென்ட் கவுன்சில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மதுரை மாதிரி இடத்திலே இரண்டு டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில்கள் இருக்கின்றன. அல்லது இராமநாதபுரம் பகுதியைச் சேர்க்கலாம். அப்படியில்லாமல் எல்லா இடங்களுக்கும் போவது என்றால் சிரமம் தான் ஏற்படும். எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றும்போது இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவிலே பேரூராட்சி அங்கத்தினர்கள் கலெக்டரால் நாமினேஷன் செய்யப்பட்டு ரொடேஷனில் வருவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முனிசிபாலிடி சேர்மன்கள் இந்த மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே இல்லை. எனவே அவர்களுக்கும் இதிலே இடம் கொடுத்து அவர்களின் கருத்தையும் நாம் ஏற்றுச் செயல்படுவது நியாயமாகும். பேரூராட்சி உறுப்பினர்களுக்கும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் பங்கு கொடுப்பது ஜனநாயக முறைப்படி வரவேற்கக் கூடியது என்பதால் ஜனநாயக முறைப்படி வகுக்கப்பட்ட இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்திற்கு அரசால் ஏற்படுத்தப்பட்ட கழகங்களின் (போர்டுகள்) பிரதிநிதிகள் வரவேண்டும் என்று இருக்கிறது. அதைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்திற்கு மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம் போன்றவற்றின் பிரதிநிதிகள் வருகிறபோது யார் வருகிறார்கள் என்றால் சிறிய அதிகாரிகள் வருகிறார்கள். ஏ.இ. போன்றவர்கள் வருகிறார்கள். சூப்ரெண்டிங் இன்ஜினியர் போன்றவர்கள் தான் வர வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கலெக்டர் தான் டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலின் தலைவராக இருக்கிறார். மற்ற மாநிலங்களில் "நான்-அபிஷியல்ஸ்" தலைவர்களாக இருக்கிறார்கள். அதுபோல இங்கேயும் செய்யப்பட வேண்டும் என்று கூறி, இந்த மசோதா வரவேற்கக் கூடியது என்று கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

1975 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதன் முதலாக மாவட்ட வளர்ச்சிக் குழுவில் பேரூராட்சி மன்றத்திற்குப் பிரதிநிதித்துவம் தரவேண்டும். பேரூராட்சி மன்றத் தலைவர்களை அதில் சேர்க்கலாம் என்பது தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பேரூராட்சி மன்றங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியதுபோல எல்லா பேரூராட்சி மன்றத் தலைவர்களையும் இதில் சேர்ப்பது என்றால் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பதே பெரிய அமைப்பாகி விடும். ஆகவே, இப்போது முதலில் நுழைவதற்கு வாய்ப்புக் கிடைத்ததே என்று நினைத்து, படிப்படியாக இவர்கள் ஆற்றுகிற பணிகளைப் பார்த்து, தேவையானால் பின்னால் எல்லோரையும் சேர்த்துக்கொள்வதுபற்றி கவனிக்கலாம் என்று திரு. வகாப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசுகிறபோது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் கலந்துகொள்ளும்போது, எந்த அடிப்படையில் கலந்துகொள்வார்கள் என்று கேட்டார்கள். சட்டமன்ற மேலவை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இங்கு சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும், ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றும் வருகிறார்கள். இன்னொரு பகுதியினர் ஆசிரியர் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி, உள்ளாட்சித் தொகுதியினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். இதை நாம் நன்றாக ஆராய்ந்து, சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறவர்கள் எந்த எந்த மாவட்டத்தில் தங்கியிருக்கிறார்களோ அல்லது எந்த மாவட்டத்தில் பணியாற்ற விரும்புகிறார்களோ அந்த மாவட்டத்திலுள்ள இரண்டு டெவலெப்மெண்டு கவுன்சிலிலும் கலந்துகொண்டு பணியாற்ற வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி, பட்டதாரி தொகுதி, ஆசிரியர் தொகுதி, உள்ளாட்சித்துறை தொகுதி ஆகியவற்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் அவர்களது தொகுதி அடங்கியுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அனைத்திலும் பங்கேற்றுக் கொள்ள வகை

செய்யப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தங்கள் தொகுதி மக்களுக்குப் பணியாற்ற வாய்ப்பளிக்கப்படவேண்டும் என்கிற அடிப்படையில்தான் இப்படி மேலவை உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் பணியாற்ற திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் அவர்கள் மின்சார வாரியம், குடிநீர் வாரியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்வது பற்றிக் குறிப்பிடுகிறபோது அந்தத் துறையின் தலைவர்களே கலந்து கொள்ளவேண்டுமென்று விருப்பப்பட்டார்கள். வாரியத்தின் தலைவரே கலந்துகொள்வது என்றால் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டங்களுக்குப் போவதே அவர்கள் வேலையாகப் போய்விடும். மாநில அளவில் உள்ள அதிகாரிகள் கலந்துகொள்ள முடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. துரைமுருகன் அவர்கள் வாரியத் தலைவர்களே கலந்துகொள்ளவேண்டுமென்று சொல்லவில்லை. மாவட்ட தலைமை அதிகாரிகள் கலந்துகொள்ளவேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவர் பேசும்போது நானும் கவனித்திருந்தேன். ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்டு என்று குறிப்பிட்டார்கள். மாவட்ட அளவில் யார் யார் இருக்கிறார்களோ அந்த அந்தத் தலைமை அதிகாரிகள் கலந்துகொள்வார்கள் என்கிற உறுதியினை அவருக்குத் தெரிவித்து, அதற்கான ஆணையை அரசு பிறப்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரே தலைவராக இருக்கவேண்டும் என்று அவர் சொன்னது கொள்கை பற்றிய பிரச்னையாகும். பல மாநிலங்களில் அப்படி இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவரே தலைவராக இருந்துதான் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் சிக்கலோ, கஷ்டங்களோ இருப்பதாக அரசாங்கத்திற்கு எந்தவிதமான தகவல்களும் வரவில்லை. ஆகையால், அந்தக் கருத்து கொள்கை

1975 நவம்பர் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

பற்றிய கருத்து இந்த மசோதாவில் விவாதிப்பதற்கு இடமில்லாதது என்று தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, in the District Development Council different resolutions are adopted after proper deliberations and representations made by the members participating in the meeting of the District Development Council. But the follow-up action that is being taken is not intimated to the members in the same way as is done in this House, namely, the constitution of an Assurance Committee. So, I suggest that a separate committee be constituted to go into the representations made and the resolutions passed at the meeting of the District Development Council and take follow-up action. Will the Hon. Minister be pleased to make a statement in this behalf.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த பில்லில் அது எப்படி வரும்? டி.டி.ஸி. பற்றி பொதுவாகப் பேச ஆரம்பித்தால் முடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள் தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75) பேரவையில் அறிமுகம் எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(எ) தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75).

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, சட்டமன்ற பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும், சில முறைகளை வகுத்து அதற்கேற்றபடி ஓய்வூதியம்-பென்ஷன்—வழங்கக்கூடிய திட்டம் நம் மாநிலத்தில், இந்தியாவில் முதன்முதலாக இங்கே கொண்டுவரப் படுவதாக நான் கருதுகிறேன். வேறு மாநிலங்களில் இல்லாத பெரிய சலுகை நம்முடைய தமிழ்நாட்டில் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் மிகுந்த மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வேறு சில நாடுகளில் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில், கனடா போன்ற இடங்களில் எல்லாம் இப்படி ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் ஓய்வுபெறுகிற நோக்கில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கு சட்டங்கள் இருக்கின்றன என்றாலும் முதலில் அவர்கள் ஒரு தொகையைக் காண்ட்ரிப்யூஷனைத் தந்து, சர்க்காரும் ஒரு தொகையை அதோடு சேர்த்து இணைத்து அதற்குப் பிறகு இதுபோன்ற ஓய்வூதியம் வழங்கப்படுவதுபோன்ற முறை இருப்பதாகத் தெரிகிறது.

* 1975 நவம்பர் 4-ஆம் தேதி தமிழ்நாடு அரசிதழ் சிறப் பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 7] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் மாத்திரம் சட்டமன்றத் தலைவருக்கு—சபாநாயகருக்கு—அதுவும் 68 வயதாகியிருந்து, பத்தாண்டுக்காலம் சபாநாயகராக இருந்திருப்பாரானால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது என்ற ஒரு முறை இருப்பதை அறிகிறேன்.

தமிழகத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த முறையை மற்ற மாநிலங்கள் இனிமேல் பின்பற்றுவார்கள். பின்பற்றக்கூடும் என்றே நான் நம்புகிறேன்.

முதலில் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட முன்வடிவில் 12 ஆண்டுக் காலம் சட்டமன்றப் பேரவையிலோ, சட்டமன்ற மேலவையிலோ உறுப்பினராக இருந்த அனைவருக்கும் ஓய்வூதியமாக ரூ. 250 கொடுப்பதென்று கண்டிருந்தது.

மொத்தமாக 12 ஆண்டுகள் என்று பார்க்கும்போது, சட்டமன்ற மேலவையில் இரு முறை உறுப்பினராக இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது. ஆனால் சட்டமன்றப் பேரவையைப் பொறுத்த வரையில், மூன்று முறை உறுப்பினராக இருந்தவர்களுக்கே 12 ஆண்டுகள் வரும். எனவே, இக்குறைபாட்டினை நீக்குவதற்காக இன்று இதற்கான திருத்தம் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தத்தின்படி கீழ்க்கண்ட உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாகின்றனர்:

(1) சட்டமன்றப் பேரவையில் 10 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்தவர்கள்:

(2) சட்டமன்ற மேலவையில் 12 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்தவர்கள் :

(3) சட்டமன்றப் பேரவையிலும் சட்டமன்ற மேலவையிலும் சேர்ந்து 10 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்தவர்கள்.

இவ்வாறு 10 ஆண்டுக் காலம் 12 ஆண்டுக் காலம் என்பது தொடர்ந்து இருக்கவேண்டிய தேவை இல்லை. இதனை விளக்கம் (1) கூறுகிறது.

சில வேளைகளில் சட்டமன்றப் பேரவையின் ஆயுட்காலம் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக இருப்பதும் உண்டு. உதாரண மாக, 1967-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றப்பேரவை 1971-லேயே கலைக்கப்பட்டுவிட்டது. இம்மாதிரி கலைப்பு ஏற்பட்டாலும், அது ஐந்தாண்டுகளாகவே கணக்கில் கொள் ளப்பட வேண்டும் என்பது இரண்டாவது விளக்கத்தில் கூறப்பட் டிருக்கிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள்—

பார்லிமெண்டிலோ அல்லது வேறு மாநிலப் பேரவைகளிலோ உறுப்பினராக இருந்து ஊதியம் பெற்றால், அல்லது

வேறொரு மாநிலத்தில் மந்திரியாகவோ அல்லது உதவி மந்திரியாகவோ இருந்து ஊதியம் பெற்றால் அல்லது

சட்டமன்ற அவைகளின் தலைவராகவோ, துணைத் தலைவ ராகவோ இருந்து ஊதியம் பெற்றால், அல்லது

தமிழ் நாட்டு மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்து ஊதியம் பெற்றால்,

அவ்வாறு ஊதியம் பெறும் காலத்திற்கு இச்சட்டப்படி அளிக்கப்படும் ஓய்வூதியம் நிறுத்திவைக்கப்படும்.

இதை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு முடித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2, இச் சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்"

1975 நவம்பர் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

In clause 2, in the proposed new Section 12-B,—

(a) *for* " for an aggregate period of not less than twelve years ", *substitute* the following :—

" for an aggregate period of not less than—

(i) ten years as member of the Legislative Assembly, or

(ii) twelve years as member of the Legislative Council, or

(iii) ten years both as member of the Legislative Assembly and the Legislative Council'';

(b) in the proviso, *for* 'the State' in both the places, *substitute* 'any state'; and

(c) *for* the proposed Explanations I, II and III, *substitute* the following Explanations, namely :—

" *Explanation I.*—For the purpose of computing the said aggregate period of ten years or twelve years, the period of membership in the Legislative Assembly or in the Legislative Council or in both, need not be continuous.

Explanation II.—If the Legislative Assembly is dissolved before the expiration of the period of five years, for the purpose of computing the period as member of the Legislative Assembly the period commencing with the date of the constitution of the Legislative Assembly after the general election and ending with the date of dissolution, shall be deemed to be five years.

Explanation III—For the purpose of this section, salary includes salary received under this Act and salary received as—

(i) a member of the Parliament or any other State Legislature,

(ii) a Minister or Deputy Minister of the Government of India or of any other State,

(iii) the Chairman or Deputy Chairman of the Council of States, or the Legislative Council of any other State,

(iv) the Speaker or Deputy Speaker of the House of the People, or of the Legislative Assembly of any other State. "

திரு. பி. வெங்கடசாமி, திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் முன்மொழியப்படவில்லை.

THIRU M. A. LATHEEF : Sir, in view of the official amendment, I do not want to move my amendment.

THIRU R. PONNAPPA NADAR : Sir, as the official amendment covers my amendment also, I am not moving my amendment.

திரு. துரைமுருகன் : 10 ஆண்டுக் காலம் என்று முதலமைச்சர் சொன்னார். இப்பொழுது தென்காசி கதிரவன் பை-எலக்ஷனில் வந்தார். அவரையும் சேர்த்துக்கொள்வார்களா 10 வருஷம் என்பதில் என்று கேட்க விரும்புகிறேன்.

* திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த பென்ஷன் கொடுக்கின்ற திட்டத்தை நான் வரவேற்றாலும் இந்தத் திருத்தம் மக்கள் மத்தியில் நம்மைப்பற்றிய ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கிவிடுமோ என்ற ஒரு ஐயத்தை இங்கே உங்கள் முன்னால் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கு என்னென்ன ஹாண்டிகேப்ஸ் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அட்ஜெஸ்ட் செய்கிற முறையில் நாம் எப்படியும் பென்ஷன் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று நாமாகக் கூடி இங்கே முடிவெடுக்கிற வகையில் முதலமைச்சருடைய திருத்தம் அமைந்திருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள், பொது வாழ்வில் இருப்பவர்கள் பின்னாலே அந்தப் பதவிக்கு வரமுடியாத நிலைமையில் அரசாங்க உதவி பெற்று ஆதரிக்கப்பெறுவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால் அப்படி ஆதரிக்கப்பெறுபவர்கள் எத்தனை ஆண்டுக்காலம் இந்தப் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற தகுதியையும் மக்கள் நிச்சயம் கவனிப்பார்கள். ஆனால் இன்று கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தின் மூலம் இங்கே இருக்கின்றவர்களில் கிட்டத்தட்ட முக்கால்வாசி பேர்கள் இந்த பென்ஷனுக்குத் தகுதி உள்ளவர்களாக இருக்கி

ருர்கள். 1967-லே, 1971-லே வெற்றி பெற்றிருந்தாலும் போதும், இன்னொரு முறை வெற்றி பெருவிட்டாலும் பென்ஷன் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. இப்படி 234 பேர்களும் சேர்ந்து, அவர்களுக்கேற்ற வகையில் மக்களுடைய வரிப் பணத்தில் சலுகை பெற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள் என்ற ஒரு சந்தேகம் மக்கள் மத்தியில் இருக்கும்.

பென்ஷன் கொடுப்பதில் வயதை உத்தேசித்துக் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. எனக்கெல்லாம் இந்த பென்ஷன் கிடைக்கிறது. ஆனுல் அந்த பென்ஷனைப் பெற எனக்கு உண்மையிலே கூச்சமாக இருக்கிறது. இந்த வயதிலேயே ஓய்வு பெற்ற மாதிரியும், நான் பெரிய சேவை செய்த மாதிரியும் அதற்கு ஓய்வூதியம் பெறுவது மக்களுடைய வரிப் பணத்தில் நாம் மிக அதிகமாகச் சலுகை பெறுவதாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே, முதலமைச்சர் அவர்கள் பென்ஷன் பெறுவதற்கு ஒரு முறை எம்.எல்.ஏ.வாக இருந்தால்கூடப் பாவாயில்லையென்று கொண்டு வரட்டும். ஆனுல், 50, 60 வயதானவர்கள் இனி உழைத்துப் பாடுபட முடியாது என்ற நிலைமையிருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு பென்ஷன் கொடுத்தால் பொதுமக்கள் தவருக நினைக்க மாட்டார்கள். ஆனுல் நானும் துரைமுருகனும் போய் இதை வாங்குவதென்ருல் (திரு. துரைமுருகன் குறுக்கீடு) உங்களுக்குக் கிடைக்கவில்லை யென்பது இந்தச் சட்டத்தினுடைய அதிர்ஷ்டம்.

முதலமைச்சரவர்கள் தயவுசெய்து நினைத்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் போன்ற இளைஞர்கள், 35 வயதிலே போய் ஊதியம் கேட்கும்போது — நாங்கள் அரசியலில் சேவை செய்து விட்டோம், ஊதியம் வாங்குவோம் என்று சொன்னுல், பொதுமக்கள் பார்த்தால் — கேட்டால், அவ்வளவு நன்ருக இராது

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே. ஓய்வூதியம் என்ருல் கண்டிப்பாக ஓய்வெடுக்க வேண்டுமென்று யாரையும் துரத்துவது அல்ல. அவர்கள் ஓய்வு பெறுகிற நேரத்தில் பெறுவது தான் இந்த ஓய்வூதியம். எம்.எல்.ஏ.

பதவிக்கு சீனிவாசன் அடுத்த தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. நின்று வெற்றிப் பெறப் போவதில்லையென்று நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை. இளைஞர்களுக்கு ஏன் ஓய்வு தேவை என்று கேட்க வேண்டியதில்லை. அடுத்தடுத்து தேர்தலில் வெற்றி பெறுகிறவர்களைப்பற்றி நிச்சயமாக இச்சட்டம் குறுக்கே நிற்காது. தாராள மனம் படைத்தவர்கள் இப்படிப்பட்ட ஓய்வூதியம் வேண்டியதில்லையென்று கூட, இச்சட்டம் நிறைவேறியதற்குப் பிறகு அரசாங்கத்திற்கு எழுதி விடலாம்.

திரு. பெ. சீனிவாசன்: நான் பார்க்கிற கோணத்திலே வராமல், வேறு கோணத்தில் வருகிறீர்கள். நான் இந்தி எதிர்ப்புப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கும்போதே அதைப் பற்றி சொன்னேன். எனக்குக் கொடுக்கப்பட்டதை நான் வேண்டாமென்று கூடச் சொன்னேன். நான் வாங்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களுக்குக் கிடைக்காத இருக்க முடியாதே, எப்படி வாங்கவில்லையென்று சொல்கிறீர்கள்?

திரு. பெ. சீனிவாசன்: நீங்கள் சாமார்த்தியமாகச் சட்டம் கொண்டு வந்திருக்கலாம். நீங்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' யிலேயே என்னுடைய பெயர் இல்லை — எப்படி இதை எனக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?

நான் அடுத்த தேர்தலில் நிற்பேனா என்பது பிரச்னை அல்ல. நான் அடுத்த தேர்தலில் நிற்பேன். 99, 100 வயதில் கூட நிற்பேன், ஜெயிப்பேன். ஆனால், என்னைப் போன்றவர்கள் ஓய்வூதியம் வாங்கினால் பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்? இதற்கு ஒரு வயது வரம்பை வைப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் பரவாயில்லை. மணலி போன்ற பெரியவர்கள் ஓய்வூதியம் வாங்கினால் சரி.

They deserve it.

அவர்கள் இதற்குமேல் பாடுபட முடியாது. ஆனால் 40 வயதுகூட ஆகாதவர்கள் ஓய்வூதியம் பெற வாய்ப்பிருப்பது எனக்கு என்னமோ அவ்வளவு நன்றாகத் தெரியவில்லையென்று தெரிவித்துக்

கொள்கிறேன். இதிலே நன்மை அடைகிறேன் என்ற முறையில் நான் விரும்பவில்லை. அந்த முறையில் நான் சொல்கிறேன், வயது வரம்பு வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வயது வரம்பை வைத்துவிட்டு அதற்குப் பின்னாலே இன்னும் சில சலுகைகளைக் கொடுக்கலாம். அரசாங்க டிரான்ஸ்போர்ட் பஸ்களிலே இப்பொழுது ஃப்ரீ பாஸ் தருகிறார்கள், அந்த பாஸைக்கூட ஆயுள் முழுவதும் தரலாம். அப்படி பயன் பெறுகிறவர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கும். அரசாங்கத்திற்கு அதிக நஷ்டம் வராது. பொது மக்கள் தவறாக நினைக்க மாட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது சொல்வது நண்பர் சீனிவாசன் அவர்களுடைய கொள்கையா அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: முதலமைச்சரவர்கள் இதிலே ஒரு கட்சியினுடைய கொள்கை என்று கூட அல்ல; இது ஒரு கொள்கைப் பிரச்னையே அல்ல.

It is not a question of policy. It is a small programme.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கருத்தா? நான் கொள்கை என்பதை மாற்றுகிறேன். இது உங்கள் தனிப்பட்ட கருத்தா? அ.தி.மு.க. கருத்தா?

திரு. பெ. சீனிவாசன்: அ.தி.மு.க. கருத்துதான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஹாண்டே அவர்கள், வடிவேல் அவர்களை அழைத்துக் கொண்டு என்னிடத்திலே வந்து கேட்ட பிறகுதான் 12 ஆண்டு என்பதைக் கூட 10 ஆண்டு என்று திருத்தி இருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தை மறைப்பதற்கு, நியாயத்தை மறைக்க இவ்வளவு சிரமப்பட வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 12 ஆண்டு என்பதைக் கூட திருத்தியதற்குக் காரணம் — நண்பர் ஹாண்டே அவர்களும் வடிவேல் அவர்களும் என்னைச் சந்தித்து சில நியாயங்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் நான் குறைத்தேன்.

திரு. பெ. சீனிவாசன்: அவர்கள் சொன்னதற்காகக் குறைத்தீர்கள். நான் சொல்வதற்காகத் தயவுசெய்து வயது வரம்பை வையுங்கள். இதிலே என்ன இருக்கிறது? மக்கள் என்ன நினைப்பார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுமக்கள் என்ன நினைப்பார்கள் என்று முதலமைச்சர் பேசும்பொழுது சொல்லக் கூடாது. முனு ஆதி பேசும் பொழுது என்ன செய்தீர்கள்? முனு ஆதி, 'எக்ஸ் கிரேஷியா'வாக ஒரு தொகை பென்ஷனாகக் கொடுங்கள். நான் அதுபோல வந்துவிட்டேன் என்பதற்காகக் கேட்கிறேன் என்று நினைக்காதீர்கள்' — என்று ஆதியே பேசி இருக்கிறார். அப்படி ஆதியிலிருந்து அந்தம் வரை எல்லோரும் சொல்லி விட்டதால், இடையிலே இருக்கிற சீனிவாசன் மறுப்பதில் என்ன அர்த்தம்?

திரு. பெ. சீனிவாசன்: ஆதிக்கு அதற்கான வயதாகிவிட்டது. மினிமம் வயது வையுங்கள். இத்தனை வயதுக்குட்பட்டவர்கள் வாங்கக்கூடாது என்று வையுங்கள்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, இந்த மசோதாவை எல்லாக் கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க கொண்டு வந்ததாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, கட்சித் தலைவர்கள் சொன்னதற்குப் பின்னாலே மாறுபட்ட கருத்தை நான் சொன்னதாக தயவுசெய்து எடுத்துக்கொள்ளாமல், என்னுடைய கருத்து, அதை மனதிலே வைத்து பின்னாலே யார் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று கொள்ளவேண்டும். இப்பொழுது முனு ஆதி அவர்களைப் பற்றி சொன்னார்கள். அரசியலிலே நீண்டகாலம் இருந்தார்கள். அதனாலே சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்தார். அவருக்கு வயதான காலத்திலே ஓய்வூதியம் தேவைப்படுகிறது. எந்தக் கட்சிக்காரர்களாக

இருந்தாலும் சரி. ஆனால் அந்த பென்ஷன் வாங்குகின்ற பொழுது அதற்கு என்ன தகுதி? 10 வருஷம் இருந்ததினாலே மட்டும் அதை வாங்கக் கூடாது. வசதியில்லாதவர்கள், வயதானவர்கள் வாங்கலாம். சில பேர் இன்கம்டாக்ஸ் கட்டுபவர்களாக இருக்கலாம்; இலட்சக்கணக்கான சொத்துக்கள் வைத்திருக்கலாம். அசையாச் சொத்துக்கள், அசையும் சொத்துக்களுக்கு உடமையாளர்களாக இருந்தால் அவர்களுக்கெல்லாம் இது பொருந்தாது என்று கொண்டு வரவேண்டும். பொதுமக்களின் வரிப் பணத்தை நாம் அனாவசியமாகச் செலவழிக்கத் தேவையில்லை. ஒன்றையுமே எதிர்பாராமல் இருக்கிற அரசியல்வாதிகளுக்கு இது பொருந்தும் என்று கொண்டு வரவேண்டுமென்று நான் கருத்துத் தெரிவிக்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கத்தை நாம் கொஞ்சம் அலசிப் பார்த்தால் இதில் கருத்து வேறுபாடு இருப்பதற்கு அவசியமில்லை. இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கமே ஏதோ சட்டமன்றத்தில் இருந்துவிட்டுப் போனவர்களுக்கெல்லாம் பென்ஷன் கொடுக்கும் புதிய காரியத்தைச் செய்கிறோம் என்று உலகம் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்திற்காக அல்ல. பொது வாழ்க்கையில் ஐந்தாண்டுக்காலம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படுகிறோம். நாம் எந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறோமோ அந்தக் கட்சியிலேயிருக்கின்ற தொண்டர்களோடு நன்றாகப் பழகி, அந்தந்தப் பகுதிகளிலே நன்றாகச் சேவை செய்து, அந்தந்தப் பகுதிகளிலே உள்ள கட்சித் தலைவர்களெல்லாம் நம்மை வரவேற்றால்தான் அந்தக் கட்சியின் மேலிடத்தை அணுகும் பொழுது, அது அந்தக் கருத்துக்களை ஆராய்ந்து சீட்டுக் கொடுக்கும் சூழ்நிலை இன்றைய ஜனநாயகத்தில் இருக்கின்றது. அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினராக வருகின்றோம்.

சட்டமன்றத்தில் ஆற்றும் பணி, கட்சிவிட்டு கட்சி செல்லாமல் ஆற்றும் பணி, ஓரேயிடத்தில் இருந்து செம்மையாக ஆற்றும் பணி முதலியவைகள் வளர நாணயமும் கட்டுப்பாடும் தேவை.

மறுபடியும் இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்றால் அந்தக் கட்சியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கின்ற கட்சியானால் அந்தக் கட்சியின் பார்லி மெண்டரி போர்டு தீர்மானித்து, இவர் போன தடவை செய்த சேவை, மக்களுக்கு ஆற்றிய தொண்டு, கை நீட்டாமல், குற்றங் களுக்கு ஆளாகாமல் செய்திருக்கிறார் என்று கருதினால் அந்த அரசியல் கட்சியின் பார்லிமெண்டரி போர்டு சீட்டு கொடுக்கிறது. அடுத்த தடவைக்குச் சீட்டு கொடுத்து விட்டாலும்கூட, அந்தந்த வட்டாரத்திலுள்ள மக்கள், — கட்சியினுடைய கொள்கை ஒரு தேர்தலின் வெற்றிக்கு அடிப்படை என்றாலும், — தனிப்பட்ட அந்த நபரின் நாணயம், சேவை, பண்பாடு, யோக்கியப் பொறுப்பு இவைகளையெல்லாம் மனத்தில் வைத்துத்தான் மக்கள் இரண்டாவது தடவையும் எம்.எல்.ஏ. வைத் தேர்ந்தெடுக் கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு ஜனநாயகப் பாரம்பரியம் உருவாக்கப்பட வேண்டுமானால் ஒவ்வொரு கட்சிக்குள்ளேயும் ஒரு கட்டுக் கோப்பு இருக்க வேண்டும். கட்சித் தொண்டர்களை எம்.எல்.ஏ.க்கள் மதிக்க வேண்டும். அப்படி மதித்தால்தான் இரண்டாவது முறையும் எம்.எல்.ஏ.வாக வருவதற்கான சீட்டு கிடைப்பதற்கு உரிமை வரும். எல்லா அரசியல் கட்சிகளும், — திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, புதிய அரசியல் கட்சிகள், வளர்ந்து வரும் அரசியல் கட்சிகள், எந்த அரசியல் கட்சியானாலும் — ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்றால், அந்த உணர்வு, தோழமை உணர்வு, தன்னலமற்ற உணர்வு, அரசியலில் நியாய மாகப் பணியாற்ற வேண்டுமென்ற உணர்வு ஏற்பட வேண்டும், அதுவும் சட்டமியற்றுகின்ற பொறுப்பிலே உள்ள அரசியல்வாதி களுக்கு அந்த உணர்வு ஏற்பட வேண்டுமென்ற அடிப்படை நோக்கம் இந்த மசோதாவிலே இருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

இன்றையதினம் நாம் இந்தியாவை எடுத்துக்கொண்டால், இந்தியாவிலே அரசியல் வாழ்க்கையில் பதவியிலே இருப்பவர் களுக்கு யாருக்கு பென்ஷன் தரப்படுகிறது என்றால், ஜனாதிபதி

1975 நவம்பர் 7] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஒருவருக்குத்தான் தரப்படுகிறது என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு இப்பொழுதுகூட பிரதம மந்திரிக்கு என்று சில உரிமைகள் வேண்டும், சபாநாயகருக்கு என்று சில உரிமைகள் வேண்டுமென்று சொல்லி டெல்லியில் சில சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகள் மாநிலங்களில் இருக்கின்ற சபாநாயகர்களுக்கும் வேண்டும், மாநில முதலமைச்சர்களுக்கும் வேண்டும் என்று இன்றையதினம் பேசப்படுகிறது. எதிர்காலத்தில் அந்த உரிமைகள் சலுகைகள் வழங்கப்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசினார்கள், அவருடைய தியாக உணர்வைக் குறை சொல்ல முடியாது. வாலிபர், எனக்கு பென்ஷன் வரலாமா என்று கேட்டார்கள். பென்ஷன் என்பது வாலிபர்கள், வயதானவர்கள் என்ற அடிப்படையில் பார்த்துக் கொடுப்பதல்ல. இளைஞராக இருந்தாலும் பத்தாண்டுக் காலம் பொது வாழ்க்கையிலே சேவை செய்திருக்கிறார்கள், அந்தச் சேவையை மதிக்க வேண்டுமென்றுதான் பென்ஷனே தவிர, வயதானவர்கள், இளைஞர்கள் என்பதற்காக அல்ல.

நண்பர் திரு. செழியன் அவர்கள் சொன்னது ஆலோசிக்கப்பட வேண்டிய கருத்து. சட்டமன்ற விதி இருக்கிறது, 450 ரூபாய் சம்பளம் வாங்குகிறோம், தினசரி அலவன்ஸ் வாங்குகிறோம் என்றால், எனக்கு இந்த அலவன்ஸ் வேண்டாம், இவ்வளவு இன்கம் டாக்ஸ் கொடுக்கிறோம், செலவு இவ்வளவு, வசதியிருக்கிறது என்று சொல்லிக் கொடுத்து விடலாம். முன்புகூட மன்றுடியாரோ யாரோ அப்படி இரண்டு மூன்று பேர் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் மதுரம் கூட அப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே, இப்பொழுது வசதியாக இருக்கிறேன் என்று எழுதிக் கொடுத்துவிடலாம்.

வசதியுள்ளவர்கள்தான் அரசியலிலேயிருந்து அரசோச்ச வேண்டுமென்று ஒருகாலத்திலிருந்தது. வசதியுள்ளவர்கள் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகள், பணம் வைத்திருப்பவர்கள் போன்ற இவர்கள்தான் அரசியல் தலைவர்களாக இருக்கலாம், அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அரசியல் தலைமையை வளர்க்கலாம், அந்தப் பணத்தின் மூலம் தொண்டர்களை விலைக்கு வாங்கலாம், அதன்மூலம் எம் எல் ஏ.க்களை உருவாக்கலாம் என்று

சகாப்தம் இருந்தது, அதை முறியடித்துவிட்டு, இது மக்களின் காலம், ஏழை எளியவர்களின் காலம், ஏழை எளியவர்கள் தான் அரசியல் சக்திகளை உருவாக்க வேண்டும், அதன்மூலம் ஜனநாயக உணர்வு ஏற்பட வேண்டுமென்ற தத்துவத்தை ஏற்றிருப்பதால் தான் ஒரு நல்ல நோக்கத்தோடு — இதனால் ஒரு பெருமை வரவேண்டுமென்று அல்ல — இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவாழ்க்கையிலே ஈடுபட்ட பலர் கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் அப்படிச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காரணத்தினாலேயே எவ்வளவு சொத்துக்களை இழந்திருக்கிறார்கள், எவ்வளவு வசதிகளை இழந்திருக்கிறார்கள். எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அதை மனதில் வைத்துத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இன்னொன்றும் இருக்கிறது. இது சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிய விஷயம். அரசியல் வாழ்க்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தத்துவத்தை நீண்ட நாட்களாகக் கடைப்பிடித்து வருகிறது. எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் கட்சிக்கு உழைத்த வயதானவர்கள் அந்தக் காரணத்தினால் இடையிலே இறந்து விட்டார்கள், அவர்கள் குடும்பம் நிர்க்கதியாக இருக்கிறது, அதைக் காப்பாற்ற வேண்டும். அந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற கொள்கையை, அந்த ஜனநாயக உணர்வை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது. அந்தக் கருத்தை ஜனநாயக உணர்வு கொண்ட எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே, இந்தச் சட்டம் ஏதோஒரு பெருமைக்காகக் கொண்டு வரப்படவில்லை. அரசியலிலே தூய்மையும், எம்.எல்.ஏ.வாக இருப்பவர்களுக்கு ஒரு நல்ல நிலைமையும் வரவேண்டுமென்றுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

என்னுடைய கருத்துகூட, அமைச்சர்களாக இருப்பவர்களுக்கு ஏதாவது புரொவிஷன் செய்ய வேண்டும். நான் சொல்வதற்காகத் தவறாகக் கொள்ள வேண்டாம். நான் அந்தத் தியாகத்தை நிச்சயமாகப் பாராட்டிச் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னால் இருந்த அமைச்ச

ரவையில் இருந்த இரண்டு மூன்று பேர்களை எடுத்துக் கொண்டால், பெருமதிப்பிற்குரிய நண்பர் கக்கன் அவர்கள் அமைச்சர் பதவிக்குப் பிறகு, அக்காமடேஷன் கண்ட்ரோலில் வீடு வேண்டுமென்று முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே நெருங்கிய நேரத்தில் உள்ளபடியே கண்ணீர் வந்தது. மூன்று நான்கு தடவைகள், இந்தச் சமுதாயத்திலே 30, 40 ஆண்டுக் காலம் பாடுபட்ட ஒரு ஆதிதிராவிட பெருங்குடி மகன் அமைச்சர் அவையிலேயிருந்து இறங்குகிறார், பிறகு என்ன ஆயிற்று? தங்குவதற்கு சென்னையில் வீடு தேடும் நிலைமை. அதுமட்டுமல்ல; இராமையா அவர்கள் பொதுபணித் துறையிலே இருந்தார்கள், பொதுப்பணித்துறை பலவிதமாகப் பேசப்படுகின்ற துறை. இராமையா இருந்த நேரத்தில் பலவிதமாகப் பேசப்பட்டது, ஆனால் அவருக்குக் கார் இல்லை. எனவே, பொது வாழ்க்கையிலேயிருந்த நேரத்தில், பதவி அல்லது பொறுப்பிலேயிருக்கும் நேரத்தில், இருக்கின்ற இடத்தைப் பார்த்துவிட்டு, இவர்களுக்கு எல்லாம் இருக்கிறது எல்லாம் இருக்கிறது என்று சொல்லும் சூழ்நிலை இருக்கிறது.

அந்த நிலைமைகள் மாறி, அரசியல் நாணயம், தன்மை, அதற்குரிய பொறுப்பு என்ற முறையில் கொண்டு செய்யும் உணர்வு வர வேண்டுமென்றால், அதற்கான அடிப்படையிலேதான், அந்த நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி பெருமையோடு இதனை ஆதரிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மசோதாவின் பேரில் பேசுவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. பொதுவாக, நமது விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் பேசியபிறகுதான் நான் பேச வேண்டுமென்ற எண்ணமும் எனக்கு எழுந்தது. எற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதி, பிறகு இரயிலிலே போகும் வசதி, இந்த பென்ஷன் கொடுக்கப் போகிறோம் என்பதெல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஜனங்கள் மத்தியிலே அதற்கு அவ்வளவு வரவேற்பு இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரணமாக என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். இதை நாம் செய்வது கொஞ்சம் அதிகமாக விளம்பரம் இல்லாமல் செய்யலாம். இப்பொழுது பார்லிமெண்ட்

மெம்பர்களுக்கு கான்ஸ்டிடியூயன்ஸி அலவன்ஸ் என்று 500 ரூபாய் கொடுக்கிறார்கள், அது யாருக்கும் தெரியாது. யாரும் அதைப் பற்றிப் பெரிய விவாதம் நடத்துவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது திரு. தங்கமணி சொன்னது பத்திரிகையில் வரும், அது எல்லோருக்கும் தெரிந்து விடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதைக் கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னையாக பார்க்க வேண்டும். கட்சியில் எடுத்த முடிவாகச் சொல்லவில்லை. ஏற்கனவே முதலமைச்சரவர்கள் முறையாகத் தான் நமக்கு விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். மூன்று பீரியட் இருப்பவர்களுக்கு ஏதாவதொரு ஓய்வு நிதி கொடுக்க வேண்டுமென்று ஒரு உறுப்பினர் எழுப்பிய பிறகு யோசித்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்று எடுத்த முறையின் அம்சம் நன்றாக இருக்கிறது. மூன்று பீரியட் என்பதை 12 வருஷம் என்று சொன்னவுடன், 12 வருஷம் என்றால் எம்.எல்.சி.யாக இருப்பவர்கள் இரண்டு பீரியட் வந்தால் போதும் என்ற நிலைமையேற்பட்டு, இப்பொழுது இரண்டு பீரியட் வந்தால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படியிருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை.

(பிற்பகல் 1.00.)

ஆஸ்திரேலியாவைப் பற்றிச் சொன்னார்கள். நான் லோக்சபா உறுப்பினராக இருந்தபோது அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் 'ஆஸ்திரேலியாவில் மெம்பராக இருப்பாரேயானால் அவருக்கு வாழ்க்கை பூராவும், சாகிற வரைக்கும் அவருக்கு இலவச ரயில் பாஸ் உண்டு; அதே மாதிரி பார்லிமெண்ட் மெம்பர்களுக்குக் கொடுக்கலாம்' என்ற ஆலோசனையைச் சொன்னார்கள். ஆனால் அன்றைக்குப் பார்லிமெண்டில் யாரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இன்றைக்கு திரு. சீனிவாசன் அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்தாகும். இப்போது சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் பொதுவாழ்வில் இருக்கும்போது மேல்

1975 நவம்பர் 7] *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

கொண்டு அதிகமாகப் பிரயாணம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கும். ஆகவே, ஃப்ரீ பாஸ் போன்ற அத்தகைய கன்செஷன்களைக் கொடுத்து சர்ச்சைக்குரியவற்றை விட்டு விடலாம்.

பொதுவாக எதிர்க்கட்சியிலிருந்து பேசும்போது இங்கு பேசுவது மாத்திரமல்ல, ஜனங்கள் மத்தியிலும் பேசுகிறோம். சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான வசதிகளை எல்லாம் செய்து கொண்டார்கள் என்ற கருத்து மக்கள் மத்தியில் பரவக் கூடாது.

அரசாங்கம் இந்த மாதிரிக் கருத்தைக் கொண்டு இதனைச் செய்யும்போது அதை சீரியசாக எதிர்க்க வேண்டுமென்பதல்ல. இதையும் பரிசீலிப்பது நல்லது. இது சம்பந்தமாக எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து பேசி முடிவு செய்து கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த நிலைமை எப்படி வந்தது? ஒரு ப்ரொபோசல் வந்திருக்கிறது. சில பேர் கேட்டிருக்கிறார்கள். அதன் பேரில் இது வந்திருக்கிறது. பொதுவாக, மக்கள் மத்தியில் தவறான எண்ணம் ஏற்படாதிருக்க வேண்டுமென்பதற்காக இந்த என்னுடைய கருத்தை எடுத்துக் கூறுகிறேன்.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும், சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கான திட்டம் நியாயமான ஒன்றாகும்; கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நான் சமீபத்தில் காரைக்கால் பகுதிக்குச் சென்றிருந்தேன். அங்கு அரிசன நலத் துறை அமைச்சராக இருந்தவர் ஏர் ஓட்டுகிறார். சட்ட சபைக்கு சொத்துக் கணக்கு கொடுத்திருக்கிறோம். என்னைப் போன்ற அன்னக் காவடிகளும் அரசியலிலே இருக்கிறோம். நான் சொல்ல வெட்கப்படவில்லை — நான் பண்ணையாளாக இருந்தவன். டி. எஸ். வெங்கட்டராமையரிடம் பண்ணையாளாக இருந்தவன். பாட்டாளி வர்க்க ஸ்தாபனத்திற்கு வந்து ஐந்து தடவை சட்ட மன்றத்திற்குப் போட்டி போட்டிருக்கிறேன். மூன்று தடவை தோற்றிருக்கிறேன்; இரண்டு தடவை சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறேன். என்ன விதமான அரசியல்

வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறேன்? உட்கார்ந்து சோறு திங்கக் கூட வழி இல்லை. இது நியாயமான பிரச்சினை. லஞ்சம் வாங்கக் கூடாது, பொய் சொல்லக் கூடாது, நியாயமாக நடக்க வேண்டும்; ஒழுங்காக நடக்க வேண்டும். எது மரியாதை? மக்களைத் தெய்வமாக மதிக்க வேண்டும்; அதுதான் மரியாதை.

ஏதோ ஓய்வூதியம் வந்தால் கடைசிக் காலத்தில் கஞ்சியாவது குடிக்கலாம். நான் மறுபடியும் போய் பண்ணையாளாக வேலை செய்ய முடியுமா? இவ்வளவு பெரிய அரசியல் பேச்சாளியாகி விட்டு அதைச் செய்ய முடியுமா? என்னைப் போன்ற தாழ்த்தப் பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் சமீப காலத்தில் அதிக அளவில் அரசியலில் பரிணமிக்கக்கூடிய நிலையில் எதிர்காலத்திலே சுபிட்சமாக, குறைந்த பட்சம் ஒரு வாய், கஞ்சி குடித்து வாழவாவது இந்த ஓய்வதியம் வழி செய்யும் என்ற காரணத்தால் இதை நான் வரவேற்கிறேன். (ஆரவாரம்)

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மிகச் சிக்கலான வகையில் இந்த மசோதா இங்கே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய பேச்சின் துவக்கத்திலேயே நம்முடைய கட்சியைச் சேர்ந்த அருமைத் தோழர் திரு. முனு ஆதியின் பேச்சை இங்கே கோடிட்டுக் காட்டினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நாம் இந்த அரசியல் வாழ்க்கையில் நம்முடைய மெம்பர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று கருதுகிறேன் என்றால் — நம்முடைய நாட்டிலே ஏராளமான, லட்சக் கணக்கான தோழர்கள் மிகுந்த அளவு பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலைமையில் பிறந்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது மிகத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும் — பொருளாதாரத்தில் மிகத் தாழ்த்தப் பட்டவர்களாக இருக்கக்கூடிய காரணத்தால் அவர்கள் தாழ்த்தப் பட்டவர்கள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கிறது. என்னுடைய ஆசையெல்லாம், என்னுடைய கனவெல்லாம் தாழ்த் தப்பட்டவர்கள் பொதுத் தொகுதிகளில் நின்று ஜெயிக்க

வேண்டும். அந்த அளவுக்குப் பொதுமக்கள் தாழ்ந்தவர்களா, உயர்ந்தவர்களா என்று பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. தாழ்ந்தவர்கள், உயர்ந்தவர்கள் என்று பார்க்காமல் பொது மக்கள் வாக்களிக்கக்கூடிய அளவுக்கு ஜனநாயகம் வளர வேண்டுமென்பது என்னுடைய ஆசை. அது என்னுடைய வாழ்க்கையில் நிறைவேறுமா ? தெரியாது.

ஆனால் வசதி படைத்தவர்கள், நல்ல முறையில் தொழில் நடத்தக் கூடியவர்கள் — என்னைப் பொறுத்தவரை நான் இன்கம் டாக்ஸ் அஸெஸி. மாதத்திற்கு 2,500 ரூபாய் வருமானம் வருகிறது. கணக்கெல்லாம் கொடுத்திருக்கிறேன். இங்கு கூட வைத்திருக்கிறேன். என்னைப் போன்றவர்கள் நிச்சயமாக இந்த ஓய்வூதியத்தைப் பெற வேண்டிய தேவையில்லை. இதை ரிலிங்க்விஷ் செய்ய உரிமை இருக்கிறது. அப்படிச் செய்வதுதான் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

நம்முடைய வடிவேல் அவர்கள் சொன்னது போல் பொருளாதாரத்தில் தாழ்ந்திருக்கும் காரணத்தால் அவர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்ற பொருளாதாரத் தடை இருப்பதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கருதுகிறேன்.

Whether he is rich or poor, he can represent, lakh and odd persons, in the Assembly.

என்ற நிலைமை உருவாக்கப்பட்டால்தான் பணக்கார ஆதிக்கம் சட்டசபையில் நிச்சயமாகக் குறையும் என்பது என்னுடைய கருத்து.

என்.ஜி.ஓ.க்கள், ஆசிரியர்களைப் பொறுத்தவரை நாங்கள் பல முறை இந்த மன்றத்தில் வாதிட்டிருக்கிறோம். மின்சார இலாக்கா மானியம் இங்கு விவாதத்திற்கு வருகிறது. அந்த நேரத்திலும் விவாதிக்கப் போகிறோம்.

திரு. பெ. சீனிவாசன்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ரிலிங்க்விஷ் செய்வது பற்றிச் சொன்னார்கள். அப்படி ரிலிங்க்விஷ் செய்தால் அது இன்கம் டாக்ஸ் அட்ஜஸ்ட்மென்டாக இருக்குமா ? (சிரிப்பு).

டாக்டர் எச். வி. ஹாண்டே: அப்படி அட்ஜஸ்ட் ஒன்றும் கிடையாது. அது தேவையில்லை. . . .

திரு. பெ. சீனிவாசன்: Don't take it personally. I just wanted to clarify

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. சீனிவாசனைப் பொறுத்த வரை அவர் இன்கம் டாக்ஸ் அசெசியா இல்லையா என்று தெரிய வில்லை. He is a practising lawyer. பிடித்துக் கொள்ளப் போகிறார்கள்

திரு. பெ. சீனிவாசன்: நான் கோர்ட்டுக்குக் குற்றவாளியாகத் நான் போகிறேனே தவிர, வக்கீலாகப் போகவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த விவாதம் cutting across party lines, பார்ட்டிலைன் இல்லாமல், எல்லோரும் ஏகோபித்து 234 உறுப்பினர்களும் கூடி கட்சிப் பாகுபாடு இல்லாத வகையில் தங்களுடைய கருத்தை வெளிப்படையாகக் கூறியதை நான் வரவேற்கிறேன். ஜனநாயக ரீதியில் பல நேரங்களில் கட்சிக் கட்டுப்பாடு வேண்டியதுதான். அப்போது பல கருத்துக்களைச் சொல்ல முடியாமல் போய்விடும். இதிலே சரிக்கட்டக்கூடிய விஷயம் எதுவும் கிடையாது. என்னைப் பொறுத்தவரை ஒன்றுமில்லை.

நான் பல பேருக்கு ஃப்ரீயாகவே சிகிச்சை செய்து கொண்டிருக்கிறேன். அதிகமாகச் சம்பாதிக்க வேண்டுமென்ற நிலை இல்லை. இரண்டு குழந்தைகள் தான். பிராப்பளம் கிடையாது. குடும்பக் கட்டுப்பாட்டில் இருக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தால் பர்சனலாகப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

I am now coming to the subject. I shall finish.

நண்பர் சீனிவாசன் அவர்கள் சொல்லக்கூடிய அந்த யோசனையையும் மன்றம் மதிக்கும். என்னுடைய அருமை அண்ணன் கே. டி. கே. அவர்கள் விளக்கினார்கள். அவருக்கு இருக்கும் சங்கடம் அதுதான் — embarrassing என்பதற்காகச் சொல்லுகிறேன்.

1975 நவம்பர் 7] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

தவறான எண்ணம் பொதுமக்கள் மத்தியில் உருவாகக் கூடாது. மிக மிக ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டியது அவசியம். அந்த அளவுக்குத்தான் நம்முடைய அருமை நண்பர் சீனிவாசன் அவர்களுடைய சொற்பொழிவு பயன்படுகிறது. அதன் காரணமாக இது ஒரு முழுமையான விவாதமாக அமைந்து விட்டது. தங்களுக்காக, சுய நலத்திற்காகச் செய்யவில்லை என்பதை எடுத்துச் சொல்ல அவருடைய துவக்கப் பேச்சு அமைந்தது. அதன் காரணமாக பல சிந்தனைகளை இந்த மசோதா கிளப்பிவிட்டிருக்கிறது.

12 ஆண்டுகள் பத்தாண்டுகளாக மாற்றப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள். அன்றையதினம் நடைபெற்ற சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் லைப்ரரிக்கு வேகமாகச் சென்று கொண்டிருந்தேன்—எனக்கு 12 ஆண்டுகள் இருக்கின்றன. என்னைப் பொறுத்தவரை பிரச்சினை கிடையாது. அப்போது வடிவேலுவும் கிட்டப்பாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னை அழைத்தார்கள். 'நீங்களே சொல்லுங்கள்; 12 ஆண்டுகள் என்று வைத்தது நியாயமா? என்று நீங்களே சொல்லுங்கள்' என்று கேட்டார்கள்.

12 ஆண்டுகள் என்றிருக்கிறது. அது யாருக்கு? மேல்சபையில் இரண்டு டேர்ம்ஸ் என்று வைக்கும்போது கீழ்சபையில் உள்ளவர்களுக்கு, சட்டசபை என்றால் ஒன்றரை லட்சம் வாக்காளர் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் என்ற நிலை இருக்கும்போது அவர்களுக்கும் அப்படி ஏன் செய்யக் கூடாது என்று கேட்டார்கள். மேல்சபைக்கு டயரக்ட் எலெக்ஷன் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் பொருளாதாரத்தில் சட்டசபையில் உள்ள உறுப்பினர்களை விட அங்குள்ளவர்கள் வசதியாக இருக்கலாம், இருக்கக்கூடும். அப்படியிருக்கும்போது இந்தச் சபையில் உள்ளவர்களுக்கு இரண்டு டேர்ம்ஸ் என்றில்லாமல் மேல்சபைக்கு மட்டும் இரண்டு டேர்ம்ஸ் என்றிருப்பது நியாயமா என்று வடிவேல் அவர்களும் கிட்டப்பா அவர்களும் கேட்டார்கள். அந்த வாதம் நியாயம் என்று எனக்குப் பட்டது. தி.மு.க. செய்தால் தகாறு வந்தாலும் வரலாம், ஆகவே கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் நல்லவகையில் பேசி செய்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். உண்மையைச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறேன்.

We have come to you as a delegation under the leadership of Thiru S. Vadivelu.

என்று சொன்னேன். அதை ரொம்ப ரசித்தார்கள். ஒரு தவறான எண்ணம் பொதுமக்களிடம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும், அது நம் கடமை. திரு. அரங்கண்ணல் அவர்கள் கூட சொன்னார்கள். திரு. கக்கன்ஜி கூட நான் பல தடவை கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். அவரைப் பார்க்கும்போது எவ்வளவோ பொறுப்பில் இருந்தவர், நாட்டையே ஆட்டிப் படைக்கக்கூடிய நிலைமையில் இருந்தவர். பொருளாதாரச் சிக்கல் காரணமாக இப்படிப் போயிருக்கிறார்களே என்று நினைப்பதுண்டு. ஒருவர் பணக்காரராக இல்லாதது ஒரு குற்றமா? பணக்காரராக இருந்தால்தான் கார் வைத்துக்கொள்ளலாம், போன் வைத்துக் கொள்ளலாம், எதுவும் தேவை இல்லை என்று சொல்லலாம். பணக்காரர்கள் மட்டும்தான் இந்தச் சபைக்கு வரமுடியும் என்ற நிலை இருக்கக்கூடாது.

என். ஜி. ஓ. க்களைப் பற்றிப் பேச வேண்டும், டீச்சேர்ஸ் பற்றிப் பேச வேண்டும் என்றால் யார் பேச முடியும்? நான் பேசக் காரணம், நான் வசதியாக இருந்தாலும்கூட என் வாழ்க்கையை கஷ்டத்தில் ஆரம்பித்தவன் நான். வாழ்க்கையை சைக்கிள் ஓட்டிக் கொண்டு ஆரம்பித்தேன். எனக்கு டீச்சேர்ஸ், என். ஜீ. ஓ. க்கள் இவர்களோடு க்ராஜுவேட் கான்ஸ்டிட்யூவன்ஸியில் வேலை செய்ததால் தொடர்பு இருப்பதால் சொல்கிறேன். டீச்சேர்ஸ் பற்றி, என். ஜீ. ஓ. க்கள் பற்றி, லட்சக்கணக்கான ஏழைகள் பற்றி இங்கு யாரால் பேச முடியும் என்றால் வடிவேல் அவர்களால் தான் பேச முடியும். ஒரு மிராசுதார் எம். எல். ஏ. ஆக வருகிறார் என்றால் அவருக்கு இந்த வசதி தேவையில்லை. திரு. வடிவேல் அவர்கள் பேசும்போது நான் கவனமாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். அவர் பார்டி பற்றி கவலைப்படமாட்டார். திரு. வடிவேல் அவர்களைப் பாராட்டுவதற்காக இந்த நேரத்தை பயன்படுத்தவில்லை.

I am one of his admirers.

அவர்கள் நிலமில்லாதவர்களுக்காகப் பேசுகிறார் என்றால், உழவர்களுக்காகப் பேசுகிறார் என்றால், அவர் கஷ்டப்பட்டவர், ஆகவே, அந்த உணர்ச்சி ஏற்படுகிறது. எனவே ஒருவரது பொது

1975 நவம்பர் 7] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

வாழ்க்கை முடிந்த பிறகு அவர் நடுத்தெருவில் நிற்கக்கூடிய நிலை ஏற்படக் கூடாது. Some dignity இருக்க வேண்டும். இந்த ரூ. 250 ஆல் பெரிய வாழ்க்கை நடத்திவிடமுடியும் என்று சொல்ல முடியாது. பத்துப் பதினைந்து ஆண்டுக் காலம் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர் ஏதோ ஸம்திங்கை வைத்துக்கொண்டு ஊரில் அல்லது கிராமத்தில் ஓரளவிற்கு வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலை உருவாக வேண்டுமென்றால் அதற்கு, பாட்டாளி மக்களுக்காகப் பேசக்கூடியவர்கள் இந்த மன்றத்திற்கு இன்னும் ஜாஸ்தியாக வரவேண்டுமென்றால் இந்த மசோதா அதற்கு ஓரளவு பயன்படும் என்ற அடிப்படையில் சொல்கிறேன். இந்த 250 ரூபாய் அலவன்ஸை அல்லது சம்பளத்தை ரிலிங்க்விஷ் செய்யலாம். அதில் கருத்து வேறுபாடு கிடையாது. நம் கட்சிக்குள் குழப்பம் இல்லை.

Even with my friends I have discussed this.

அதை நல்லவகையில் மனம் விட்டுப் பேசலாம். பயப்படாமல் பேசலாம். பலநேரங்களில் திரு. மூனு ஆதி அவர்கள் தாம்பரத்தில் பஸ் ஸ்டான்டில் காத்திருப்பது எனக்குத் தெரியும். பல தடவை இங்கு வருவதற்காக பஸ்ஸுக்கு காத்து நிற்பது எனக்குத் தெரியும். அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர். அது அவர்கள் நாணயமாக, லஞ்சம் வாங்காமல் வாழக்கூடிய எம்.எல்.ஏ. என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதற்காகச் சொல்கிறேன். நான் நம்முடைய அருமை நண்பர் சீனிவாசன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி நல்ல பல எண்ணங்களை எல்லாம் இங்கு பேசுவதற்கு ஒரு சூழ்நிலையை அவர்கள் உருவாக்கித் தந்ததற்கு நன்றி செலுத்துகிறேன் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கோவை செழியன் : கருத்து மாறுபாடு இல்லை. வசதியுள்ளவர்கள், கார் வைத்திருப்பவர்கள் எல்லோரும் லஞ்சம் வாங்கி கார் வைத்திருப்பவர்கள் என்றல்ல. நடந்து போனால்தான் யோக்கியமானவன் என்று தயவு செய்து யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அப்படியில்லை. அப்படி நினைக்க வேண்டாம். நானே கூட கார் வைத்திருக்கிறேன். I have got a profession.

திரு. முனு ஆதி : இதோடு சேர்த்து ஒன்று. நாம் எல்லோரும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு ஓரளவு திருப்தி அடைகிறோம். ஒருசாரார் வேதனைப்படுவார்கள் என்று நினைக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையாளர். பத்திரிகையாளர்கள், அதுவும் பத்து ஆண்டுகள் குறிப்பு எடுக்கிறார்கள் என்றால் அவர்களுக்கும் டோக்களுக்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யுங்களேன்.

திரு. பெ. சீனிவாசன் : வயது வரம்பு பற்றிச் சொல்வேன். முதல் அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதைப் பற்றிக் கவலையில்லை. இப்படிக் கொடுக்கும்போது இப்போது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ மனைகளில் சலுகைகள் இருக்கின்றன. அந்தச் சலுகைகளை பின்னால் பென்ஷன் வாங்குகிறவர்களுக்கும் நீடிக்கவேண்டும். அது பலருக்கும் அப்போது பயன்படும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கரும்பே வேண்டாமென்று சொல்லிவிட்டு கொஞ்சம் சர்க்கரை யோடு சேர்த்துக்கொடுங்கள் என்பதைப்போல் நம்முடைய நண்பர் சீனிவாசன் அவர்கள், தான் முதலிலே பேசிய வார்த்தை களுக்கு புதுக் கருத்துக்களை இணைத்து இங்கு எடுத்துச் சொன்னார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் இதை கட்சியினுடைய கருத்துக்களாக இல்லாமல் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைமைக்கேற்றவாறு சில எண்ணங்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்றாலும் மாண்பமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் பொதுமக்கள் நம்மைப் பற்றித் தவறாகக் கருதுவார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே கூழுக்கும் ஆசை

1975 நவம்பர் 7] [டாக்டர் மு. கருணாநிதி]

மீசைக்கும் ஆசை என்பதைப் போல் இந்த விஷயத்தில் ஆளும் கட்சியை காட்டிக் கொடுத்துவிட்டுப் போய் விடலாம் என்பதற்காக எதிர்வாதங்கள் புரிவது அவ்வளவு நல்லதல்ல.

ரயில்வே பாஸ் போன்றவைகளால் கூட பொது மக்களிடத்தில் நாம் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறோம் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்களேதான் துணை மானியக் கோரிக்கையை இந்த அவையில் நாம் விவாதித்தபோது அந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது கொடுத்த ஒரு வெட்டுப் பிரேரணையில், தங்கமணி அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணை ரயில்வே பாஸ் கொடுப்பதில் தாமதம் என்பதைச் சுட்டிக்காட்ட என்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆக ரெயில்வே பாஸ் கொடுப்பது தவறு அல்ல, கொடுப்பதில் இவ்வளவு தாமதமாயிற்றே, தாமதமாகியதே கூட தவறு என்று சுட்டிக்காட்டுகிற சூழ்நிலையில் கே. டி. கே. தங்கமணி அவர்கள் எல்லாம் மிக முனைப்பாக இருந்துவிட்டு இப்போது இந்தப் பென்ஷன் திட்டத்தைப் பற்றி பொதுமக்கள் ஏதாவது சொல்வார்களானால் அப்போது அவர்களுக்குப் பதில் சொல்வதற்காக இங்கே சில கருத்துக்களைப் பதிய வைப்பது ஆளும் கட்சியை சங்கடத்தில் ஆழ்த்துகிற ஒன்றாக ஆகிவிடும். ஆளும் கட்சி வேண்டுமென்று—இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று முதலில் ஆளும் கட்சி சார்பாக இந்த முடிவு வெளிப்படவில்லை. திருக்குறளில்,

“அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு,”

என்பதைப்போல் நான் ஒரு புதிய குறளைச் செய்திருக்கிறேன். அங்கத்தினர் ஓய்வூதியமெல்லாம் ஆதி சபையில் மொழிந்த பிறகு. அவர் தான் முதன்முதலாகச் சொன்னார்கள். இந்த ஓய்வூதியம் தரப்பட வேண்டுமென்று. அந்தக் கருத்தை நானும், அவை முன்னவர் நாவலர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் கலந்து பேசி ஒரு வடிவு அமைக்கப்பட்டது. அந்த வடிவம் அமைக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் என்னைச் சந்தித்தார்கள். அந்த

வடிவத்தை மாற்ற வேண்டுமென்று வடிவேல் தலைமையில், ஓராண்டே அவர்களும், கிட்டப்பா அவர்களும் என்னைச் சந்தித்து, அதை 10 ஆண்டுகளாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

இங்கே பதவியில், பொறுப்பேற்று இருக்கின்ற ஒரு சிலர் மாத்திரம் அல்ல, ஏற்கனவே 52 இல், 57 இல் பதவியில் இருந்து இன்று மீண்டும், பொறுப்புக்கு வர முடியாமல், வெற்றி பெற முடியாமல், அல்லது போட்டியிடாமல் இருக்கின்ற, தங்களைப் பொதுப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட பல பெரியவர்களுக்கு இதன் மூலமாக பெருத்த நன்மை கிடைக்கிறது என்று என்னால் சொல்ல முடியும்.

இன்று காலை கூட தென்காசியிலிருந்து சங்கரநாராயணன் பிள்ளை எம்.ஏ.பி.எல்., எக்ஸ் எம்.எல்.சி. அவர்கள் கூட எழுதியிருக்கிறார். 12 வருஷம் பொறுப்பில் இருந்தால், அவர் பெற முடியும் என்றாலும், 12 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகளாக எம்.எல்.ஏ.க்களுக்கு மாற்ற வேண்டுமென்று கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

ஆக, வெளியில் இருக்கிறவர்கள் கூட, பதவிப் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்று இருக்கிறவர்கள் கூட இப்படிப்பட்ட முறை வரவேண்டும், அது 10 ஆண்டுக் காலம் என்ற அளவில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றால், பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியது போல, அவர்கள் தங்களுடைய வருங்காலத்தில், ஓய்வு காலத்தில் தங்களுடைய குடும்பத்தை ஓரளவிற்கு நடத்திச் செல்வதற்கு அந்தத் தொகை பயன்படும் என்பதால் தான்.

வசதி படைத்தவர்கள், வருமான வரி கட்டுகிறவர்களுக்கு இது தேவையில்லை என்ற கருத்தை நம்முடைய கோவை செழியன் எடுத்துச் சொன்னார்கள். அதற்கும் நம்முடைய சட்டத்தில் இடம் இருக்கிறது. தேவையில்லை என்றால் இந்த ஓய்வூதியத்தை மாத்திரம் அல்ல, இப்போது வாங்கும் சம்பளத்தைக் கூட வேண்டாம் என்று அரசாங்கத்திற்கே திருப்பிக் கொடுத்து விடலாம் அல்லது அந்தப் பணத்தை வாங்கி வேறு நல்ல காரியத்திற்கு, ஒரு அறக்கட்டளைக்கு, ஒரு பள்ளிக்கூடத்திற்கு,

ஒரு அனுதை இல்லத்திற்கு அந்தப் பணத்தைக் கொடுக்கலாம். அவர்கள் தான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. வசதி படைத்தவர்கள், வருமான வரி கட்டுகிறவர்கள், இந்த முறையில் பயன்படுத்தவும் இடம் இருக்கிறது.

இது ஆளும் கட்சியின் சார்பாக, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்காகக் கொண்டு வரப்படவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதனுடைய தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசியதற்கு மாருக நண்பர் வடிவேல் பேசினர். உணர்வுகள் இங்கே பேசப்பட்டன என்று பொருள். நண்பர் சீனிவாசன் பேசிய கருத்துக்கு மாருக டாக்டர் ஹாண்டேயும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள், என்ருல் உணர்வுகள் இங்கே வெளிப்பட்டு இருக்கின்றன என்று தான் பொருளே அல்லாமல் அதைக் கட்சி சார்பான நிலைமையில் கொள்ளாமல், இது ஒரு நல்ல காரியம், இன்று நிறைவேற்ற இருக்கிறோம் என்ற அளவில், இதை ஏகமனதாக அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களைப் பற்றி திரு. முனு ஆதி அவர்கள் சொன்னார்கள். அது இதில் வராது. இந்த அரசு பத்திரிகை நிருபர்களுக்கு வீடு வழங்கல், மற்றும் பல சலுகைகளைத் தொடர்ந்து அளித்து வருகிறது. பத்திரிகை நிருபர்கள் ஏற்கனவே இந்த அரசின் மீது திருப்தியாக இருக்கிறார்கள். அவர்களை இப்படிப்பட்ட சிபார்சு மூலம், தங்கள் பக்கம் திருப்பிக் கொள்ள முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, அனைவரும் இதனை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :

In clause 2, in the proposed new Section 12-B,—

(a) for " for an aggregate period of not less than twelve years", *substitute* the following :—

"for an aggregate period of not less than—

(i) ten years as member of the Legislative Assembly, or

(ii) twelve years as member of the Legislative Council, or

(iii) ten years both as member of the Legislative Assembly and the Legislative Council";

(b) in the proviso, *for* 'the State' in both the places, *substitute* 'any State'; and

(c) *for* the proposed Explanations I, II and III, *substitute* the following Explanations, namely :—

"*Explanation I.*—For the purpose of computing the said aggregate period of ten years or twelve years, the period of membership in the Legislative Assembly or in the Legislative Council or in both, need not be continuous.

Explanation II.—If the Legislative Assembly is dissolved before the expiration of the period of five years, for the purpose of computing the period as member of the Legislative Assembly the period commencing with the date of the constitution of the Legislative Assembly after the general election and ending with the date of dissolution, shall be deemed to be five years.

Explanation III.—For the purposes of this section, salary includes salary received under this Act and salary received as—

(i) a member of the Parliament or any other State Legislature,

(ii) a Minister or Deputy Minister of the Government of India or of any other State,

(iii) the Chairman or Deputy Chairman of the Council of States, or the Legislative Council of any other State,

(iv) the Speaker or Deputy Speaker of the House of the People, or of the Legislative Assembly of any other State."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

1975 நவம்பர் 7]

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75) திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சட்டமன்றம் (தகுதி யின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சட்ட மன்றம் (தகுதி யின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) (தமிழ்நாடு சட்டம் 3/1967) சட்டத்தைச் சேர்ந்த 2 ஆவது பிரிவின்படி, இச்சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகள் எவையும், அப்பதவி வகிப்பவர் சட்ட மன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது

* 1975 அக்டோபர் 25ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினராயிருப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்காது அல்லது அவரை அவ்வாறு தகுதியற்றவராக்கியுள்ளதாக எப்போதுமே கருதப்படக்கூடாது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக இயக்குநர் பதவியும், தமிழ்நாடு சிறு தொழில் கழக இயக்குநர் பதவியும், மேற்சொன்ன விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதாயமளிக்கும் பதவிகள் குறித்த இணைக் குழு தனது 'ஐந்தாவது மக்களவை--பத்தாவது அறிக்கையில்' செய்துள்ள பரிவுரையின் அடிப்படையில், இவ்விரு கழகங்கள் தொடர்பான பதிவுகளை மேற்படி விவர அட்டவணையிலிருந்து நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது.

இதே அறிக்கையில் மேற்படி இணைக் குழு செய்துள்ள பரிவுரையை அடிப்படையாகக் கொண்டு, மேற்சொன்ன விவர அட்டவணையில் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளை சேர்த்துக் கொள்ளவும் அரசு முடிவெடுத்துள்ளது :—

1. தமிழ்நாடு உப்பு, உப்பு சார்ந்த இரசாயனப் பொருள்கள் வாரியம்.

2. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலின் ஆலைவாயில் விலையையும் கிடங்குவாயில் விலையையும் நிர்ணயிக்கும் துணைக் குழு.

3. கூட்டுறவு நூற்பாலைகள் குறித்த மாநில ஆலோசனைக் குழு.

4. குடும்ப நலத் திட்டம் குறித்த நாடகக் கதை—வசனங்களையும், கலைஞர்களையும் தெரிந்தெடுக்கும் குழு.

தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழக இயக்குநர் பதவியையும் மேற்சொன்ன விவர அட்டவணையில் சேர்ப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கேற்ப, பேரவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவில் இது குறித்த விதித் துறைகள் அடங்கியுள்ளன.

இத்தீர்மானத்தை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின் நோக்கம் இங்கே தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் இவ்வளவு நாள் இல்லாமல் திடீரென்று ஏன் நான்கு வாரியங்களின் தலைவர்களுக்கு இம்மாதிரி பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்லவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனுடைய உள் நோக்கம் என்ன,—நோக்கம் என்ன என்று ஓரளவிற்குச் சொன்னார்கள்—என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எந்தெந்த வாரியங்களை உருவாக்க முயற்சி எடுக்கிறீர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை அந்த வாரியங்களுக்குத் தலைவராக நியமிக்க உத்தேசம் இருக்கிறதா என்ற விவரங்களையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் அடிக்கடி ஏற்கனவே பல பேர் சொல்லியிருக்கிறோம், 1967-க்கு முன்பு சிறிய 9 பேர் கொண்ட கேபினட்டாக இருந்தது, இப்போது 14 பேர் கொண்ட கேபினட்டாக ஆகியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்தக் கேபினட்டுக்கு செகன்ட் கேபினட் மாதிரி, வாரியத் தலைவர்கள் உருவாக்குவதற்கு மறைமுகமாக—இதை ஒரு கேபினட் எக்ஸ்பான்ஷனுக்கு பயன்படுத்திக் கொள்கிற வகையில் செய்கிறீர்களா என்பது தெரியவில்லை.

இது innocuous சாதாரண மசோதாவாக இருந்தாலும் கூட, இதனுடைய விளைவுகள் எப்படி இருக்குமென்றால்— proliferation of a number of these Boards வாரியங்கள் ஏராளமாக உருவாகும் நிலையில் அமைச்சரின் மூலமாக எல்லாவற்றையும் நாம் தெரிந்து கொள்ள முடிவது இல்லை.

அது மட்டுமல்லாமல் இந்த வாரியங்களைப் பொறுத்தவரையில் கேள்விகள் கேட்பதற்கு சட்டசபைக்குக் கன்ட்ரோல் கிடையாது. அது வாரியமாக இருந்து, தனி அமைப்பாக இருப்பதால் பல நேரத்தில் அதனுடைய நிர்வாக நிலைமைகளை நம்மால் அறிந்து

கொள்ள முடிவது இல்லை. இங்கேயுள்ள உறுப்பினர் ஒருவர் அதற்குத் தலைவராக இருப்பார், அங்கு நடக்கும் முழு விவகாரமும் அவருக்குத் தெரியும். அமைச்சருக்குக் கூட தெரியாது.

வாட்டர் போர்ட்டை எடுத்துக் கொண்டால் மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் இருக்கிறார்கள், குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் இருக்கிறார்கள். அந்த வாரியங்களைப் பற்றிய கேள்விகள் இங்கே கேட்கப்படுகிறபோது, பதில் அமைச்சர் கொடுப்பதற்கு பதிலாக எங்கேயிருந்து வருகிறது என்றால், அமைச்சர்கள் இல்லாத இடத்தில் இருந்து வருகிறது. அந்த நிலைமை இங்கே உருவாகி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். பல நேரங்களில் நாம் குறைகளை எடுத்துச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். அப்போது எல்லாம் பதில் சொல்வது மெம்பராகத்தான் இருக்கும். இதையெல்லாம் சொல்வது ' அவுட் சைட் தி பர்வியூ ஆப் தி பில்' லாக இருக்கலாம். இருப்பினும், அந்த வாரியங்களைப் பொறுத்தவரையில், பல நேரங்களில் எப்படியெல்லாம் அங்கே ஆட்களை எம்பிளாய் செய்கிறார்கள் என்று பார்க்கிற நேரத்தில் அதிலே பல தவறுகள் நடந்து இருக்கின்றன என்பதை அறிகிறோம். அதைச் சரியான வகையில் கேட்டு, பதில் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. டெம்பாரியாக எம்பிளாய் செய்கிறார்கள். பிறகு வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள். பிறகு டெம்பரரி ஹேரண்ட் என்று எடுத்து அவர்களை வைத்துக் கொண்டு விடுகிறார்கள். இப்படி வாட்டர் போர்ட்டில் ஏராளமான கம்பிளெயின்ட் இருக்கிறது. இப்படி சரியான அக்கௌண்ட்பிலிடி இல்லாமல் போய்விடக் கூடிய நிலைமை இருக்கிறது.

Whatever be the Board, it should be accountable to the Legislature. Legislature is supreme. Proliferation of the Boards இது நியாயமா, நல்லதா, அது நல்ல முறையில் அட்மினிஸ்டிரேஷன் செய்ய வாய்ப்பாக இருக்குமா என்று கேட்டு, இதன் மூலம்

1975 நவம்பர் 7] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

பல பேர் அமைச்சர்கள் என்ற முறை இல்லாமல் வாரியத் தலைவர்கள் என்று வேறு வகையில் பதவி கொடுக்கும் நிலையை உருவாக்கிக்கொள்வதற்காக உள் நோக்கமாக இது கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று கூறி, இதற்கான காரணங்களை அமைச்சர் கூறினால், விரிவாக விவாதிக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை வரவேற்று இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்:

குறிப்பாக, சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்போது சிறு தொழில்களில் ஈடுபட்டு இருப்பவர்கள், சிட்கோ, ஹாண்டிகிராப்ட்ஸ் போர்டு, டி.ஐ.ஐ.சி., ஆகியவற்றில் பதவி வகிக்க முடியாது என்று ஒரு தண்டனை போல் இவ்வளவு நாள் இருந்தது. சில நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், வேறு பொறுப்புகளை வைத்து இருந்தாலும், சிறு தொழில்களை நடத்துபவர்களாக இருந்தால், அவர்கள் இந்த இடங்களில் அங்கம் வகிக்கிற நேரத்தில், அவர்கள் இந்தக் கழகங்களில் அங்கம் வகிக்கிற நேரத்தில் பல யோசனைகளை எடுத்துச் சொல்லி, அவர்களை நல்ல விதத்தில் பணியாற்றச் சொல்ல முடியும். இன்றையதினம் சிட்கோ நிறுவனம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

[பிற்பகல் 1.30]

அதில் பல பேர் கடன் வாங்குகிறார்கள். டி.ஐ.ஐ.சி. போன்ற ஸ்தாபனங்களில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. சில பேர் அதில் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கலாம். இருந்தாலும் அவர்களுக்கு வாய்ப்புத் தருவது நியாமானது என்ற காரணத்தால், நான் அதை வரவேற்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு உள்நோக்கம் கிடையாது. மசோதாவில் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 7

ஒன்று, சில நிறுவனங்களில் உறுப்பினராக இருந்தால், அப்படிப் பட்டவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக நீடிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொன்று, வேறு சில நிறுவனங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள். அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக நீடிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைச் சட்ட திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிறோம். இது மத்திய ஜாயின்ட் செலக்ட் கமிட்டி ரிப்போர்டின் பேரில் வந்தது.

The Committee has also recommended that the Chairmanship, Secretaryship or Membership of the following bodies ought to be exempt from disqualification, since the non-official Members of these Committees either do not get any T.A., D.A., etc., or the amount of T.A., D.A. admissible to them is less than the compensatory allowance, and since the function of these bodies are mainly advisory :

Tamil Nadu State Board for Salt and Allied Chemicals.

Sub-Committee to fix ex-mill and ex-depot prices of yarn produced in Co-operative Spinning Mills.

State Level Advisory Committee for Co-operative Spinning Mills.

Committee for selecting drama scripts and troupes on family planning.

டாக்டர் ஹாண்டே அவர்கள் வாட்டர் சப்ளை போர்டு, கார்ப்பொரேஷன் பற்றியெல்லாம் சொன்னார்கள் அவைகளின் ஆண்டு அறிக்கை ஆண்டுதோறும் வைக்கப்படுகிறது. அதன் பேரில் விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கே ஏதாவது தவறு நேர்ந்தால் அது வேறு பிரச்னை. இப்போது இருக்கிற பிரச்னை. அதில் இருக்கின்ற உறுப்பினர்கள் டிஸ்குவாலிபை ஆகிறார்களா இல்லையா என்பது அதைப் பொறுத்ததுதான் இந்தச் சட்டம், இந்த தேவையான சட்டத்தை நிறைவேற்றிக் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்), திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75) சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தனித் தீர்மானம்

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும் தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை ஏற்க அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்.

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே,

"தமிழ்நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படுகின்ற, வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவு பெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவிகிதம் ஆகும் என்பதாலும்,

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 7

தமிழ்நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளபடியாலும்,

எனவே இப்போது—

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவுபெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும்,

இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது"

என்ற இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : This resolution may be taken up later because we have given some amendments to the resolution.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தை மூவ் செய்யுங்கள். திருத்தம் எல்லோருக்கும் சப்ளையாகிவிட்டது.

THIRU K. T. K. TANGAMANI : Is this resolution going to be passed without any discussion? This is an official resolution and also an important resolution. There are various implications.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றால் சொல்லுங்கள்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, I move the following amendment :

"In para 2, for item (ii), *substitute* the following :

"(ii) to allow the Leather Export Promotion Council to continue to function in Madras."

The amendment was duly seconded.

1975 நவம்பர் 7]

THIRU K. T. K. TANGAMANI : This may be taken up on the next official day.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால், அடுத்த செஷன் வந்தால் தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அடுத்த அபிஷியல் டே திங்கட்கிழமை, அன்று இதை முடித்துவிட்டு, மற்றவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : I am interested in it.
என்னுடைய தொகுதியில் அந்தத் தொழிலாளர்கள் பல பேர் இருக்கிறார்கள். personally I am also interested in it. Voters are also involved.

ஆதலால் ஒரு ரிக்குவஸ்ட். எப்படியிருந்தாலும் ஆதரிக்கப் போகிறோம். ஆகவே 15 நிமிடம் நீடித்தால் இன்றைக்கே முடித்து விடலாம். திரு. தங்கமணி அவர்களின் கருத்தைக் கேட்ட பிறகு, மற்ற கருத்துக்களையும் இரண்டொரு நிமிடங்கள் கேட்டு இன்றே முடித்து விடலாம். 15 நிமிடம் நீடித்தால் போதும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We have given amendments. It is an important resolution.
இரண்டொரு நிமிடங்கள் நாங்கள் பேசத் தயாராக இல்லை. ஆகவே திங்கட்கிழமை வைத்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, எனக்கு இருக்கிற டிபிக்கல்டீஸைச் சொல்லுகிறேன். இந்தத் தொடரில் இதை முடிக்காமல் போனால், தொகுதியில் இருப்பவர்கள் கேட்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நாளைக்கு முதல் சப்ஜெக்டாக எடுத்து முடித்துவிடலாம்.

THIRU K. T. K. TANGAMANI : We cannot make the rules in any way we like. There is a non-official day. Now the non-official day will be converted as partially official and partially non-official, if it is to be taken up on Saturday, i.e. tomorrow which

is a non-official day. This may be taken up as the first thing on Monday and finished within half an hour and then the discussion on the Electricity Board Budget may be taken up. Let us respect the procedure which we have laid down.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு என்றால், அதற்கு என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றினால் சரியாகப் போய்விடும். திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம் என்பதால், திங்கட் கிழமையே வைத்துக் கொள்வோம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.37 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

215. Notification issued in G.O. Ms. No. 2719, Home, dated the 27th November 1974, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 in the Tamil Nadu Cinematograph Manual. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

216. Notification issued in G.O. Ms. No. 632, Home, dated the 16th April 1975, in regard to amendments to the rules under the Tamil Nadu Borstal School Act, 1925. [Laid on the table of the House under section 4(4) of the Tamil Nadu Borstal Schools Act, 1925 (Tamil Nadu Act V of 1925).]

217. Notification issued in G.O. Ms. No. 526, Commercial Taxes and Religious Endowments, dated the 31st October 1974 in regard to exemption from sales tax on the sales of machinery Hospital equipments, appliances and tools to the Society for the Aid of Handicapped children, Mettupalayam Road, Coimbatore for a period of one year commencing from the 31st October 1974. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

1975 நவம்பர் 7]

B. Reports, Notifications and Other Papers.

125. Notification issued in G.O. Ms. No. 541, Labour and Employment, dated the 13th June 1975 in regard to certain amendments to the Tamil Nadu Factories Rules, 1950.

126. Notification issued in G.O. Ms. No. 361, Transport, dated the 28th July 1975 in regard to appointment of Port Officers to receive the dues, fees or other charges authorised to be taken by, or under the Indian Ports Act, 1908 (Central Act XV of 1908).

127. Notification issued in G.O. Ms. No. 674, Labour and Employment, dated the 2nd August 1975 in regard to an amendment to the Tamil Nadu Factories Rules, 1950.

* 128. The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1975 (L.A. Bill No. 53 of 1975) with Annexure.

† 129. The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1975 (L.A. Bill No. 49 of 1975) with Annexure.

130. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 55.

* Despatched to Members on 5th November 1975.

† Despatched to Members on 6th November 1975.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1.

[452–ம் பக்கத்தில் 2 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவுக்குரிய விடையைக் காண்க.]

Statement showing the number of applications and type of tractors applied for by the Farmers in this state to the Tamil Nadu Agro-Industries Corporation Ltd., and the number of applications pending as on 25th February 1975.

Make.	Total number of applications received by the Agro-Industries Corporation for tractors as on 25th February 1975.			Number of tractors for which supply has been made.			Number of applications pending.			Number of applications cancelled.		
	Outright purchase.	Hire purchase.	Total.	Outright purchase.	Hire purchase.	Total.	Outright purchase.	Hire purchase.	Total.	Outright purchase.	Hire purchase.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1. D.T. 14 B ..	349	1	350	349	1	350	..	..	..	..	..	..
2. R.S. 09 ..	54	..	54	54	..	54	..	..	..	..	..	..
3. U. 500 N ..	65	..	65	65	..	65	..	..	..	..	..	..
4. U. 500	44	6	50	44	6	50	..	..	..	..	..	..
5. U. 650. M ..	15	..	15	15	..	15	..	..	..	..	..	..
6. Zetor 2011 ..	675	18	693	675	17	692	..	1	1	—	—	—
7. Zetor. 2011 Rice Special.	122	..	122	122	122	122	..	..	..	..	..	—
8. Zetor 5511	91	5	96	89	5	94	1	..	1	1	—	1

9. Bolgar	2	..	2	2	—	2	..	..	..	..	..	..
10. Byelarus ..	172	1	173	148	1	149	23	..	23	1	..	1
11. T. 25	206	..	206	201	..	201	5	..	5	..	..	..
12. Ursus. C. 335.	180	4	184	180	4	184	..	..	..	..	..	..
13. Ursus. C. 328.	72	..	72	72	..	72	..	..	..	..	..	..
14. Ford. 3000 S.K.D.	59	..	59	59	..	59	..	..	..	..	..	..
15. I.M.T. 533 ..	55	2	57	48	1	49	4	1	5	3	..	3
16. Ford. 3000 C.K.D.	35	4	39	32	4	36	3	..	3	..	..	..
17. I.M.T. 555 ..	50	4	54	50	2	52	..	2	2	..	..	..
18. M.F. 135 ..	87	..	87	78	..	78	8	..	8	1	..	1
19. International B. 276.	66	..	66	65	..	65	1	..	1	..	..	..
20. H.M.T. Zetor 2511.	111	..	111	57	..	57	32	..	32*	22	..	22
21. M. F. 1035 Indigenous.	..	94	94	..	74	74	..	20	20	..	..	..
22. Escorts ..		50	50	..	50	50	..	..	..	..	..	..
23. International B. 275 (Indigenous).	..	134	134	..	134	134	..	..	..	..	..	..
24. Hindustan .. (Indigenous).	..	7	7	..	6	6	..	1	1	..	..	..
Grand Total ..	2,510	330	2,840	2405	305	2,710	77	25	102	28	..	28

* H. M.T. Zetor 2511 tractors are now being supplied to these 32 parties.

1975-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் **25**-ஆம் தேதி அன்று உள்ளவாறு, தமிழ்நாடு வேளாண்மை தொழிற் கழகத்திடம் டிராக்டர்கள் வழங்குமாறு வேண்டி, இம்மாநிலத்திலுள்ள உழவர்கள் செய்துகொண்ட விண்ணப்பங்களில் கேட்கப்பட்ட டிராக்டர்களின் வகையையும், எண்ணிக்கையையும், ஒவ்வொரு வகையிலும் இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கையையும் காட்டும் விவரப்பட்டியல்.

		25–2–1975 வரை வேளாண்மை தொழிற் கழகத்தில் வரப்பெற்ற விண்ணப்பங்கள்.			வழங்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை.			பாக்கியுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை.			நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.		
வரிசை எண்.	டிராக்டர்களின் பெயர்.	முழு விற்பனை.	தவணை விற்பனை.	மொத்தம்.	முழு விற்பனை.	தவணை விற்பனை.	மொத்தம்.	முழு விற்பனை.	தவணை விற்பனை.	மொத்தம்.	முழு விற்பனை.	தவணை விற்பனை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
1	டி. டீ. 14 பி ..	349	1	350	349	1	350	..	..	..	..	..	..
2	ஆர். எஸ். ஓ. 9 ..	54	..	54	54	..	54	..	..	..	..	..	..
3	யு. 500 என் ..	65	..	65	65	..	65	..	..	..	..	..	..
4	யு. 500 ..	44	6	50	44	6	50	..	..	..	..	..	..
5	யு. 650 எம். ..	15	..	15	15	..	15	..	..	..	..	..	..
6	செட்டார் 2011 ..	675	18	693	675	17	692	..	1	1	..	..	..
7	செட்டார் 2011 (ரைஸ் ஸ்பெஷல்) ..	122	..	122	122	..	122	..	..	..	..	..	..

8	செட்டார் 5511	..	91	5	96	89	5	94	1	..	1	1	..	1
9	போல்கார்	..	2	..	2	2	..	2	..	..	..	..	..	..
10	பைலாரஸ்	..	172	1	173	148	1	149	23	..	23	1	..	1
11	டீ. 25	..	206	..	206	201	..	201	5	..	5	..	..	..
12	உர்சுஸ் சி. 335	..	180	4	184	180	4	184	..	..	..	..	..	..
13	உர்சுஸ் சி. 328	..	72	..	72	72	..	72	..	..	..	..	..	..
14	ஃபோர்டு 3000 (எஸ். கே. டி.)	..	59	..	59	59	..	59	..	..	..	..	..	..
15	ஐ. எம். டி. 533	..	55	2	57	48	1	49	4	1	5	3	..	3
16	ஃபோர்டு 3000 (சி. கே. டி.)	..	35	4	39	32	4	36	3	..	3	..	..	..
17	ஐ. எம். டி. 555	..	50	4	54	50	2	52	..	2	2	..	..	..
18	எம். எப். 135	..	87	..	87	78	..	78	8	..	8	1	..	1
19	இண்டர்நேஷனல் பி. 276	..	66	..	66	65	..	65	1	..	1	..	..	..
20	எச். எம். டி. செட்டர் 2511	..	111	..	111	57	..	57	32	..	32*	22	..	22
21	எம். எப். 1035	..	..	94	94	..	74	74	..	20	20	..	..	..
22	எஸ்கார்ட்ஸ்	..	..	50	50	..	50	50	..	..	..	..	..	..
23	இண்டர்நேஷனல் பி. 275 (உள் நாடு).	..	..	134	134	..	134	134	..	..	..	..	..	..
24	ஹிந்துஸ்தான் (உள்நாடு).	..	..	7	7	..	6	6	..	1	1	..	..	..
	மொத்தம்	..	2,510	330	2,840	2,405	305	2,710	77	25	102	28	..	28

* 32 நபர்களுக்கு எச். எம். டி. செட்டார் 2511 டிராக்டர்கள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1975 நவம்பர் 2

இணைப்பு 2.

(453ம் பக்கத்தில் 3-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க).

விவர அறிக்கை.

சென்னை.

வரிசை எண்ணும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரும்.	அமைந்துள்ள இடம்.
(1)	(2)
1 சென்னை மத்திய மகளிர் பணியாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், 1/17, அண்ணா சாலை, சென்னை-2.	சென்னை.
2 சின்னமலை மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 85, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை-15.	,,
3 இராயப்பேட்டை மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 6/26, நல்லப்ப முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.	,,
4 ஜார்ஜ் டவுன் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 185, அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.	,,
5 இராயபுரம் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், மாதா தாளோரமா ஆலயம், இராயபுரம், சென்னை-13.	,,
6 ஏழு கிணறு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், பிள்ளையார் கோவில் தெரு, ஏழு கிணறு, சென்னை-1.	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1975 நவம்பர் 7]

வரிசை எண்ணும், தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரும்.	அமைந்துள்ள இடம்.
(1)	(2)
சென்னை—தொடர்ச்சி.	
7 சீனிவாசா காந்தி நிலையம் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 96, மௌபரீஸ் சாலை, சென்னை-14.	சென்னை.
8 புனித ஜோசப் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், சென்னை-18.	,,
9 ஸ்டெல்லா மேரி மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், புனித தாமஸ் பள்ளி, சென்னை-4.	,,
10 ஷாவாலஸ் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், செரியன் நகர், புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை-21.	,,
11 தியாகராயநகர் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், ராமன் வீதி, தியாகராய நகர், சென்னை-17.	,,
12 வேப்பேரி மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், அங்காலம்மன் கோவில் வீதி, சென்னை-7.	,,
13 மயிலாப்பூர் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 111-பி, பிரிவு, பட்டிணப் பாக்கம், சாந்தோம், சென்னை.	,,
14 வடக்கு ரங்கா மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 96, பாதாள விநாயகர் கோவில் வீதி, இராயபுரம், சென்னை-13.	,,
15 புதுப்பேட்டை மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், 8, மூன்றாவது தெரு, சென்னை-2.	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும், தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரும்.	அமைந்துள்ள இடம்.
(1)	(2)
சென்னை—தொடர்ச்சி.	
16 நுங்கம்பாக்கம் பாரத சேவா சமாஜம் மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், காமராஜபுரம், நுங்கம்பாக்கம், சென்னை-34.	சென்னை.
17 தண்டையார்பேட்டை மகளிர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், தண்டையார் பேட்டை.	,,
